# பஸ்கா

மற்றும்

# நினைவுகூருதல்

மீதான

# குறிப்புகள்

–ஆன்டன் ஃப்ரே

# பஸ்கா மற்றும் நினைவுகூருதல் மீதான குறிப்புகள்
-ஆன்டன் ஃப்ரே

## (ஆங்கிலப் பிரதியின்)
# முகவுரை

ஆன்டன் க்ளமன்ஸ் ஃப்ரே அவர்கள் ஜுலை 1, 1895-ஆம் வருஷத்தில், நியூயார்க்கினுடைய ஒரு பெரிய நகரத்தின் ஒரு பகுதியான பிராங்ஸ் ஊரில் பிறந்தார். மாலை நேர செய்தித்தாளில் காணப்பட்ட ஒரு விளம்பரத்தின் வாயிலாக அவர் சத்தியத்தினை அறிய வந்தார். அன்பிற்குரிய சகோதரர் ரசல் அவர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் அறிமுகப்படுத்தப்படுவது அவருக்கு இனிமையானதாக இருந்தது, மேலும், நியூயார்க்கிலுள்ள புரூக்லினில் பெத்தேலுக்கு அழைக்கப்பட்டார்; அங்கு கொலம்பியா ஹைட்ஸ் என்ற இடத்தில்தான் பெத்தேல் குடும்பத்தினர் வசித்தனர். அந்தச் சமயத்தில் சகோதரர் ரசல் தனியாக இருந்தார், மேலும், அது, இந்தத் தேவ மனிதரோடு தனிப்பட்ட நேரடி உரையாடலை ஏற்படுத்திக்கொடுக்கச்செய்தது. அவர் 1922 வாக்கில் ஜெர்சி நகர சபையின் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனவரி 13, 1982 அன்று அவர் மரிக்கும்வரையில் சபைக்கான ஆய்வுப்பாடங்களை நடத்தியும், பொது ஊழியங்களில் ஈடுபட்டும் வந்தார்.

சகோதரர் ஆன்டன் ஃப்ரே அவர்கள், வனாந்தரத்திலிருந்த இஸ்ரயேலின் ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றின தனது நுணுக்கமான குறிப்புகளுக்காக மிக நன்றாய் அறியப்பட்டவர். மற்ற பல பாடங்களைப்பற்றிய அவரது அதே இணையான உன்னிப்பான குறிப்புகள் அனைத்தும் குறைவாகவே அறியப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் கிடைக்கவில்லை என்றாலும், பெரும்பாலானவைகள், இப்போது அச்சிடப்பட்ட வடிவத்தில் கிடைக்கின்றன.

சகோதரர் ஃப்ரே அவர்களின் பஸ்கா பற்றின குறிப்புகள் மற்றும் அதனுடன் தொடர்பான நினைவுகூருதல் பற்றியதான பாடத்தின் முதல் பதிப்பு 1991-ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்ட வடிவத்தில் கிடைக்கப்பெற்றது. அவரது குறிப்புகள் யாவும் ஆரம்பத்தில் பிரசுரத்திற்காக தயாரிக்கப்படவில்லை, மாறாக சகோதரர் ஃப்ரே அவர்களின் சொந்த தனிப்பட்ட ஆய்வுக்காக தயார் செய்யப்பட்டது. ஒரு குறிப்பிட்டவகையான பாட விஷயங்களை மேற்கோள் காட்டுவதற்காக அவர் அநேக எண்ணிக்கையிலான உள்தள்ளல் பாணியை இந்தக் குறிப்புகளில் அவர் பயன்படுத்தியுள்ளார். ஒரே சீரானதாய் இருப்பதற்காக, இந்த வெளியீடும், பல்வேறு உள்தள்ளல் பாணியைப் பயன்படுத்தியுள்ளது, ஆனாலும் இதில் மூலப்பிரதியின் பாங்கான வடிவமைப்புகள் அனைத்தும் பின்பற்றப்படவில்லை. இந்தக் குறிப்புகளின் முதல் பதிப்பினுடைய பொதுவான பாங்கு, கூடுதல் குறிப்புகளுடன் தக்கவைக்கப்படுகிறது, உரையில் இடையில் செருகப்பட்ட சுட்டுதலோடு அவைகள் நினைவுக் குறிப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் குறிப்புகளின் பெரும்பகுதி, மற்ற ஆதாரங்களிலிருந்து, அதிலும் குறிப்பாக சகோதரர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்கள் எழுதிய நூல்களிலிருந்து வந்த மேற்கோள்களாகும். மற்ற மூல புத்தகங்களை முழுமையாக அடையாளங்கண்டுகொண்டாலும், இந்த வெளியீட்டின் வாசகர்கள் பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துக்களுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் சுருக்கங்களை நன்கு அறிவார்கள். தெளிவாக்குவதற்காக, அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*A-F* ஆறு வேதாகம ஆராய்ச்சித் தொகுதிகள் *(Six Volumes)*
*OV* பாஸ்டர் ரசல் தி ஓவர்லேண்ட் மந்த்திலி–க்கு எழுதியது *(Overland Monthly)*
*PD* சிருஷ்டிப்பின் நிழற்படக் காட்சி *(Photo Drama of Creation)*
*Q* பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் (கேள்வி புத்தகம்) *(Question Book)*
*R* வாட்ச் டவர் ரீப்பிரிண்ட்ஸ் *(Watch Tower Reprints)*
*SM* பாஸ்டர் ரசல் அவர்களின் சொற்பொழிவுகள் *(Pastor Russell's Sermons)*
*T* "விசேஷித்த பலிகளின்" ஆசரிப்புக்கூடார நிழல்கள் *(The Tabernacle Shadows)*

ரீப்பிரிண்ட்ஸிலிருந்து வரும் மேற்கோள்களுக்காக, முக்கால் புள்ளிக்கு (:) பிறகு வரும் எண், பக்கத்திலுள்ள பத்தியின் எண்ணைக்குறிக்கும். விரிவுப்படுத்தப்பட்ட விவிலிய விளக்கவுரை புத்தகத்திலும் (Expanded Biblical Comments) இந்தப் பத்தி எண்களே உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குறிப்புகள், வருடாந்திர நினைவுகூருதலின் காலத்தை கர்த்தருடைய ஜனங்களுக்கு இன்னும் பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருக்கச்செய்திடும் என்னும் நம்பிக்கை மற்றும் பிரார்த்தனையோடு இவைகள் அனுப்பப்படுகிறது.

ஆங்கில இரண்டாம் பதிப்பு: 2012, (தமிழ் பதிப்பு – 2019)

போர்ட்லேண்டு பகுதி வேத மாணாக்கர்கள்
அஞ்சல் எண் 23232
டைகார்ட், ஓரிகன் 97281-3232

# உள்ளடக்க அட்டவணை


முன்னுரை....1
இராத்திரியில் புசிக்கப்பட்ட பஸ்கா .... 2
பஸ்கா (நிழலும் – பொருளும்)....4
"முதற்பேறானவர்களின் சபை" என்னும் பதம்....5
பஸ்கா (பொதுவாக மற்றும் குறிப்பாக)....5
பூவுலகம் "அவரது மாம்சத்தை" புசித்தல் (யோவான் 6:53)....7
"அவரது மாம்சத்தை" புசித்தலும் ஈடுபலியும்....7
மீட்கும்பொருள்– பழைய ஏற்பாட்டில் காண்பிக்கப்படவில்லை.... 8
ஈடுபலி – விலைக்கிரயம் மற்றும் பாவநிவாரண பலி....8
பாவநிவாரண பலியின் புண்ணியம்....8
யாத்திராகமம் 12:1-2....8
ஆயிர வருட யுகத்தின் "இஸ்ரயேலர்கள்"....9
யாத்திராகமம் 12:3-7....11
கசப்பான கீரைகள்....11
யாத்திராகமம் 12:8....12
யாத்திராகமம் 12:9....13
"விடியற்காலமட்டும் மீதியாக வைக்காமல்"....13
1 கொரிந்தியர் 15:22, 23....13
முதற்பேறானவர்கள் மட்டுமே இப்போது இரண்டாம் மரண ஆபத்தில் இருக்கிறார்கள்!....14
யாத்திராகமம் 12:10....14
ஏன் ஆட்டுக்குட்டியின் மாம்சம் மீதம் வைக்கப்படலாகாது!....16
யாத்திராகமம் 12:11....16
பிரயாண யாத்திரை....19
"முதற்பேறானவர்களின்" தற்போதைய மனநிலை....19
யாத்திராகமம் 12:12....19
கிறிஸ்தவ மண்டலத்தின் மீது நீதியான சரிகட்டுதல்....20
நிஜமான "பார்வோனின்" இறுதி அழிவு....21
முதற்பேறானவர்களின் பாவங்கள்– கடந்துபோகப்படுதல்....21
யாத்திராகமம் 12:13....21
இயேசு – தேவ ஆட்டுக்குட்டி....23
யாத்திராகமம் 12:14....24
நீசான் மாதம் 14–ஆம் தேதி....24
யாத்திராகமம் 12:15....24
"முதற்பேறானவர்கள்" மற்றும் பொதுவான இரட்சிப்பு....26
யாத்திராகமம் 12:16.... 26
இராஜாவும் இராஜ்யமும் வருவதாக!....28
கொந்தளிக்கும் கடலைப் பார்த்து "இரையாதே, அமைதலாயிரு" எனக் கட்டளையிடல்....29
இயேசு தம்மை தீர்க்கதரிசியாக, ஆசாரியராக மற்றும் இராஜாவாக முன்வைத்திடல்....29

மத்தேயு 21:8, 9....29
சிறிது காலம்! – இஸ்ரயேல் "தள்ளிவிடப்படுதல்"....30
நிழலான "முதற்பேறானவர்கள்" என்னும் இஸ்ரயேல் முடிவுக்கு வருதல்....30
இயேசுவின் பாதத்தருகே மரியாள்....31
பெத்தானியாவில் விருந்து....32
பெத்தானியா ஊராளாகிய மரியாள்....33
மாற்கு 14:12-15....34
கர்த்தருடைய பாடத்தின் முக்கியத்துவம்....37
"நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதுமான ஜாதி" ....37
"பரிசுத்த ஸ்தல வகுப்பார்"....37
தானியேலின் தீர்க்கதரிசனங்கள்....38
லூசிஃபர்....39
ஆட்டுக்குட்டி: தம்முடைய பலியில் கிறிஸ்து இயேசு மாத்திரமே....40
கிறிஸ்து – "அப்பம்"....41
கிறிஸ்து – "ஜீவ அப்பம்".... 41
மத்தேயு 26:26....41
"ஒன்றாகப் பிட்கப்படுதல்"....43
"அப்பம்" மற்றும் "பாத்திரம்" .... 44
மத்தேயு 26:27-28.... 45
"பாத்திரம்" நீதிமானாக்கப்படுதலைக் குறிக்காது....47
உலகத்தால் பகிர்ந்துகொள்ளக்கூடாத – பாத்திரம்....48
"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"....48
1 கொரிந்தியர் 10:16-17....50
மத்தேயு 26:29....52
புது உடன்படிக்கையின் இரத்தம்....52
மத்தேயு 26:30.... 53
நியாயப்பிரமாண உடன்படிக்கை முத்திரையிடப்படுதல் அதன் நிஜமான முக்கியத்துவம்....54
நியாயப்பிரமாண உடன்படிக்கையின் துவக்கம்....54
மோசேயின் பதிவு: யாத்திராகமம் 24:4-8
பவுலின் பதிவு: எபிரெயர் 9:19-21
1 கொரிந்தியர் 5:7, 8....55
புளிப்பை புறம்பாக்குதல்....56
எபிரெயர் 10:21-24....57
**யார் பங்குகொள்ளலாம்?.... 59**
**இறுதிக் குறிப்புகள்.... 60**
**நமது கர்த்தருடைய ஊழியத்தின் கடைசி வாரம் – (பெயர் அறியப்படாத)....67**
**வேத வசன அட்டவணை....68**

# பஸ்கா மற்றும் நினைவுகூருதல் மீதான குறிப்புகள் –ஆன்டன் ஃப்ரே

# பஸ்கா பற்றிய குறிப்புகள்

அநேகர், உண்மையில், இன்றளவும், நம்மைவிடவும் முனைப்பான சிந்தையுடையோர், பஸ்கா மற்றும் அதின் நினைவுகூருதல்களின் அத்தகைய அம்சங்களை ஒருமுகப்படுத்த முயற்சித்திருக்கிறார்கள். முக்கியமாக, காலத்தைக் கருத்தில்கொள்ளும்போது, இதில் ஒருவருக்கொருவர் மாறுபாடுகள் இருப்பதாகவே தோன்றுகிறது, எ.கா:

**"தீ லைஃப் ஆஃப் க்றைஸ்ட்": லிருந்து – ஃபாரார்**

> "...இது சாதாரணமான யூத பஸ்கா அல்லவென்றும், மாறாக நமது கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் முந்தைய நாள் சாயங்காலவேளையில், நீசான் 13, வியாழக்கிழமை அன்று புசித்திட்ட போஜனம் என்றும், அதற்குப் பஸ்கா போன்ற வடிவம் கொடுக்கப்பட்டதும், ஆனாலும் அது யூத பண்டிகையைவிட அதி ஆழமானதும் தெய்வீக முக்கியத்துவம் மேலோங்கியிருக்கும் என்று நாம் நம்புவதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன." (**பக்கங்கள்** *201-2*)

**"தீடெம்பில்"–லிருந்து–எடர்ஷெய்ம்**

> "...கர்த்தர் தமது 'இராப்போஜனத்தை' பஸ்கா பண்டிகையின் இரவு அன்றே நிறுவினார் என்றும், மேலும் இதன் விளைவாக, அவரது சிலுவையில் அறைதல், புளிப்பில்லா அப்பப்பண்டிகையான நீசான் 15 அன்று நிகழ்ந்தது என்னும் நம்பிக்கைக்கான எனது காரணங்களை விளக்கும் பணியினைக் காட்டிலும் வேறெதுவும் நான் எனக்கே முன்மொழிய நான் ஊக்கப்படுத்தவில்லை என்கிற கருத்து அடிக்கடி மற்றும் மிகவும் கற்றறிந்த விதமாக விவாதமும் செய்யப்பட்டுள்ளது." (**பக்கம்** *341*)

சூரிய அஸ்தமனமானது, நாளின் நிறைவாகவும், அதே சமயத்தில் மறுநாளின் துவக்கமாகவும் ஆதிகால யூதர்களால் கருதப்பட்டதின் காரணமாக, நிச்சயமாக சில சிரமங்கள் எழுகின்றன. அப்படியானால், சகோ. ரசல் குறிப்பிடுவதுபோல் இயேசுவும் அவரது சீஷர்களும், நீசான் 14–ஆம் அன்றுதான் நினைவுகூர்ந்துள்ளனர் –

> "நமது ஆண்டவருடைய ஊழியத்தின் இறுதிக் கட்டத்தில், **முதலாம் மாதம்** 14-**ஆம் தேதியன்று,** 'அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே,' நிஜமான ஆட்டுக்குட்டியாக அவர் மரித்த அதே நாளிலே, அவர் தம்முடைய சீஷர்களோடுகூட யூதருடைய நிழலான பஸ்காவை அனுசரித்தார் – அதாவது தம்மையே குறிக்கக்கூடிய, உலகத்தின் பாவங்களுக்காக தம்முடைய சொந்த பலியையே குறிக்கக்கூடிய அடையாளமான ஆட்டுக்குட்டியைத் தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலரோடுகூட போஜனம்பண்ணினார்."*(F462)* தமிழ் – *(F614)*

அவர்கள் புசித்த ஆட்டுக்குட்டியானது, "சாயங்காலங்களின் மத்தியில்" அதை அடிக்கப்பட்டிருக்குமானால், நீசான் 14–ஆம் நாள் அன்று, மதியம் 3 மணி அளவில் நிகழ்ந்திட்ட நிஜமான ஆட்டுக்குட்டியானவரின் மரணத்திற்கு, சரியாக 24 மணி நேரத்திற்கு முன்பதாக நீசான் 13 அன்று, மதியம் 3 மணி அளவில் அதனை அடிக்கப்பட்டிருக்கும்! ஒருவேளை இந்தக் காரணத்தினால்தான் சகோதரர் ரசல் அவர்கள் இவ்வாறாக எழுதியுள்ளார் –

"பதிவுகளை வைத்துப்பார்க்கும்போது நமது கர்த்தரும், அவரது சீஷர்களும், யூதர்கள் பொதுவாய்ப் புசித்ததான நாளுக்கு முந்தினநாளில் பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில் யோவானுடைய சுவிசேஷத்தில், நமது கர்த்தர் பஸ்காவைப் புசித்த பிற்பாடு பிலாத்துவிற்கு முன்னிலையில், அவரது அரண்மனையில் காணப்படுகையில், அவரைக் குற்றப்படுத்தினவர்களும், பரிசேயர்களும் பஸ்காவை இன்னும் புசியாதிருந்தார்கள் – அவர் சிலுவையில் அறையப்பட்டப் பின்னர் சாயங்காலம்வரையிலும் அவர்கள் பஸ்காவைப் புசியாதிருந்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம்." (யோவான் 18:28; 19:14); *(R2771:5)*

இயேசு அதனை வேறு எவ்வாறு செய்திருக்கக்கூடும்? நீசான் 14–ஆம் அன்று மதியம் 3 மணி அளவில் இஸ்ரயேலின் நிழலான பஸ்கா ஆடு அடிக்கப்பட்ட அதே நேரமான "சாயங்காலங்களின் மத்தியில்," அவர் தாமே நிஜமான பஸ்கா ஆடாக அடிக்கப்பட வேண்டியிருந்தது. யூதர்கள் சாதாரணமாக பஸ்காவை அனுசரிக்கும் தருணத்தில் இயேசு மரித்திருப்பார்!

சங்காரத்தூதன் எகிப்து தேசத்தின்மீது கடந்துபோனது தெளிவாக, நீசான் 14–ஆம் தேதி நடுராத்திரியிலேதான் (யாத்.11:4) என்று கூறப்படுவதின் காரணத்தினால், இன்னொரு சிரமம் இங்கு எழுகின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தின் "முதற்பேறானவர்கள்" அதே 14–ஆம் இராத்திரியிலே "கடந்து போகப்பட்டதை" பற்றி சகோ. ரசல் அவர்கள் கூறியிருக்கிறார்!

"இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்தும் அந்த ஆட்டுக்குட்டியின் மரணமானது, **அனைத்து ஜனங்களுக்குமானது அல்ல,** மாறாக 'அந்த இராத்திரியிலே' **கடந்துபோகப்பட்ட முதற்பேறானவர்களுக்காக மாத்திரமே.** முதற்பேறானவர்களின் சபை வேதாகமத்தில் 'விசுவாச வீட்டார்' என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், **அந்த இராத்திரியானது,** தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கும் நீதியின் சூரின் ஆனது உதித்து, ஆயிர வருட நாளினைக் கொண்டு வருவதற்கு முன்புவரை காரிருளானது பூமியை மூடி, தொடர்ந்து சூழ்ந்துகொண்டிருக்கும் நிலையிலுள்ள, **இந்தச் சுவிசேஷ யுகத்தினை அடையாளப்படுத்துகிறது.** பிறகு உலகம் என்னும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் பொதுவான இரட்சிப்பு கிடைக்கும். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், ஆயிர வருடத்தின் காலை உதயமாகும்போது, கடந்துபோன சபை மாத்திரம் காப்பாற்றப்பட்டு அல்லது கடந்துபோகப்பட்டு அல்லது இரத்தத்தின் பலனினால் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருப்பர்... இப்போது சபை மாத்திரம் கடந்துபோகப்பட்டுக்கொண்டிருக்கிறது." *(R4492:6)*

## இராத்திரியிலே புசிக்கப்பட்ட பஸ்கா

பஸ்கா ஆடு குறித்து யேகோவா தேவன், தமது முற்காலத்து ஜனங்களாகிய, இஸ்ரயேலரிடம் அறிவுறுத்தியபோது, அன்று இராத்திரியிலே, அவை அனைத்தும் புசிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் (யாத். 12:8, 9), அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலமட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரித்திட வேண்டும் என்றும் (யாத். 12:10) அவர்களிடம் கூறியதைக் கவனிக்க வேண்டும்.

விடியற்காலம் மட்டும் அவர்கள் அதிலே ஒன்றையும் மீதியாக வைக்கக்கூடாது என்றும், பிறகு அதிலே விடியற்காலம்மட்டும் மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும் என்றும் கர்த்தர் அவர்களிடம் கூறினது விசித்திரமாகத் தோன்றலாம். இது நிச்சயமாக ஒரு முரண்பாடாகத்

தோற்றமளிக்கிறது. இருப்பினும், தேவன் திருஷ்டாந்தங்களை (1 கொரிந்தியர் 10:11) உருவாக்கிக்கொண்டிருந்தார் என்பதை ஒருவர் நினைவுக்குக் கொண்டுவரும்போது, நாம் மறைக்கப்பட்ட இரகசியத்திற்காக சற்று ஆழமாகப் உற்று நோக்க ஆரம்பிப்போம்!


எகிப்தில் அந்த இராத்திரியிலே ஆட்டுக்குட்டியினைப் புசித்தவர்களில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் இருந்தனர்; அவர்கள் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழாக வந்ததினாலும், ஆட்டுக்குட்டியினைப் புசித்தலில் பங்குகொண்டதின் மூலமாகவும், இஸ்ரயேலின் கடந்துபோகப்பட்ட முதற்பேறானவர்களானார்கள்! மேலும், முதற்பேறானவர்களின் இந்தக் கடந்து போகப்படுதலே தொடர்ந்துவரும் காலையில் நடக்கும் மீதமுள்ள தேசத்து ஜனங்கள் அனைவருக்குமான பொதுவான விடுதலைக்கு முன்னோடியாக ஆனது.

அதன் பிறகு இஸ்ரயேலர் எத்தனை முறை அத்தகைய பஸ்கா ஆட்டுக்குட்டியை, இந்த நிகழ்வின் நினைவுகூருதலாக புசித்திருந்தாலும், அது மீண்டும் என்றுமே அந்த முதற்பேறானவர்களை உள்ளடக்கியிருக்காது! எகிப்தில் அன்று புசிக்கப்பட்ட அந்த ஆட்டுக்குட்டியானது – "நமக்காக பலியிடப்பட்டிருக்கிற நம்முடைய பஸ்காவாகிய" கிறிஸ்து இயேசுவைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 5:7) நிஜமான முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சுவிசேஷ யுகம், அந்த இரவான "இராத்திரிக்கு" ஒத்திருக்கிறது. ஆயிர வருட யுகமானது அந்த இரவைத் தொடர்ந்துவந்த காலைக்கு ஒத்திருக்கும் – அந்தக் "காலையில்", எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, (நிஜமான பார்வோனாகிய சாத்தான் மற்றும் பாவம், மரணம் எனும் அவனது இரக்கமற்ற ஆளோட்டிகளிடமிருந்து) உலக மனுக்குலம் அனைவருக்கும் (நிஜமான இஸ்ரயேல்) பொதுவான இரட்சிப்பு கிடைக்கப்பெறும்.

வாசலின் நிலைக்கால்கள் மேற்சட்டம் ஆகிய இரண்டிலும் தெளிக்கப்பட்டிருந்த இரத்தத்தினாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தலில் பங்குகொண்டதின் மூலமாகவும், அச்சமயத்தில் முதற்பேறானவர்களாக இருந்தவர்கள் மாத்திரமே கடந்துபோகப்பட்டிருந்ததினால், நிஜமான "முதற்பேறானவர்கள்" பற்றி மிக அழகான ஒரு படம் நமக்குக் கிடைக்கின்றது. தெளிக்கப்பட்ட "இரத்தத்தின்" (எபி. 10:22) கீழாக வந்ததினாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தலில் அவர்கள் பங்குக்கொண்டதினாலும் (மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களை தங்களுக்கே ஏற்புடையதாக்கிக்கொள்ளுதல் – யோவான் 6:53-56) சுவிசேஷ யுகத்தின் இந்த "இராத்திரியில்," முழு உலக மனுக்குலத்திற்கான "காலையில்" (ஆயிர வருட யுகம்) நடக்கவிருக்கும் பொதுவான இரட்சிப்பிற்கு முன்பதாக அவர்கள் கடந்துபோகப்பட்டிருப்பார்கள். அதன் பிறகு மீண்டும் அதேபோலான "முதற்பேறானவர்களை" கடந்துபோகுதல் என்றுமே நிகழாது. எனவே, நிழலின் அந்தப் பாகமானது, அங்கேயே அப்போதே நிறைவடைந்திட வேண்டும். இந்தக் காரணத்தினால்தான் ஆட்டுக்குட்டியில் ஒன்றையும் விடியற்காலம்மட்டும் மீதியாக வைக்காமல், அதிலே மீதியாய் இருக்கிறதைப் புசிக்காமல், அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும் என்று அவர்களிடம் தேவன் கூறியிருந்தார்!

முதலாம் பஸ்காவின் நினைவாக, ஆட்டுக்குட்டியினைப் புசித்தலை உள்ளடக்கிய அடுத்தடுத்து வந்த அனைத்து பஸ்கா பண்டிகைகளிலும் முதற்பேறானவர்களை உள்ளடக்கியதாக இல்லை அல்லது உள்ளடக்கவும் முடியாது. சொல்லப்போனால், அவர்கள் மத்தியில் அத்தகைய "முதற்பேறானவர்கள்" இருக்கவுமில்லை. அவ்வாறாக, முழு உலக மனுக்குலமும் ஆயிர வருட யுகத்தின்போது பஸ்கா, ஆட்டுக்குட்டியினைப் புசித்திட அழைக்கப்படுவார்கள். ஆனால் "முதற்பேறானவர்கள்" கடந்துபோகப்பட்டு காப்பாற்றப்படுதல் என்பது அங்கு நிகழாது. ஏனெனில், சுவிசேஷ யுகத்தின் "இராத்திரியிலே" "முதற்பேறானவர்கள்" "கடந்துபோகப்படுதலின்" வாயிலாக ஜனங்களின் இரட்சிப்பானது, முன்கூட்டியே கூறப்பட்டது என்பதை அவர்கள் உணர்வார்கள்!

## பஸ்கா (நிழலும் பொருளும்)




A = இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்காவினை அனுசரித்தத் தருணம். *மாற்கு 14:12
B = கெத்செமனே, மத்தேயு 26:36; மாற்கு 14:32
C = இயேசு சிலுவையில் அறையப்பட்ட தருணம்.
D = "சாயங்காலங்களின் மத்தியில்" **இயேசுவினுடைய மரணத்தின் தருணம் (ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதல்).
E = யூதர்கள் பஸ்காவை அனுசரித்தத் தருணம்.
F = சங்காரத்தூதன், நடுராத்திரி, யாத்திராகமம் 12:23, 29
G = யாத்திரை- நீசான் 15, எண்ணாகமம் 33:3
MN = நடுராத்திரி

*"நம்முடைய இந்தப் பாடமானது, முதலாம் நிறுவுதலை நமக்குச் சுட்டிக்காண்பித்து, அது பஸ்கா ஆரம்பிப்பதற்கு முந்தின நாளில், அதாவது நீசான் மாதம் 14-ஆம் தேதியில் ஆசரிக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பஸ்கா தொடர்புடையதான நியாயப்பிரணமானது, மிகவும் துல்லியமான விவரங்களைக் கொடுத்ததாய் இருந்தது. ஆட்டுக்குட்டியானது நீசான் மாதம் 10-ஆம் தேதி வீட்டிற்குள்ளாகக் கொண்டுபோகப்படவேண்டும் மற்றும் 14-ஆம் தேதி அடிக்கப்பட்டு, 15-ஆம் தேதியினுடைய விடியலுக்கு முன்னதாக, இரவிலே புசிக்கப்பட வேண்டும். நிஜத்தில் இயேசு தம்மை 10-ஆம் தேதியன்று அந்த ஜாதியினடத்திற்கு முன்வைத்தார். ஆனால் அவரது உண்மையுள்ளவர்களாகிய சிலரைத் தவிர, மற்றபடி அவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தார்கள் மற்றும் 14-ஆம் தேதியன்று அவர் சிலுவையில் அறையப்பட்டார் அவர் சிலுவையில் அறையப்பட்டதான அதே யூத நாளிதான், நம்முடைய இந்தப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பஸ்காவை அவர் புசித்தார் மற்றும் பிற்பாடு அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார். (யூதர்களுடைய நாளானது சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பித்து, அடுத்த சாயங்காலம்வரை நீடிக்கின்றது.) பதிவுகளை வைத்துப்பார்க்கும்போது நமது கர்த்தரும், அவரது சீஷர்களும், யூதர்கள் பொதுவாய்ப் புசித்ததான நாளுக்கு முந்தினநாளில்ப ஸ்காஇ ராப்போஜனத்தைப்பு சித்தார்கள்ள ன்பதில்ச ந்தேகமில்லை;ஏ னெனில்டே யாவானுடைய சுவிசேஷத்தில், நமது கர்த்தர் பஸ்காவைப் புசித்த பிற்பாடு பிலாத்துவிற்கு முன்னிலையில், அவரது அரண்மனையில் காணப்படுகையில், பரிசேயர்களும், அவரைக் குற்றப்படுத்தினவர்களும், பஸ்காவை இன்னும் புசியாதிருந்தார்கள் – அவர் சிலுவையில் அறையப்பட்டப் பின்பு சாயங்காலம்வரையிலும் அவர்கள் பஸ்காவைப் புசியாதிருந்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். (யோவான் 18:28; 19:14)." *(R2771:5)*

**"யூதர்கள் தங்களது நாட்களை சாயங்காலத்திலிருந்து சாயங்காலத்திற்கு கணக்கிடுவர், அதாவது, ஒரு நாளின் சூரிய அஸ்தமனத்திலிருந்து மறுநாள் சூரிய அஸ்தமனம் வரைக்கும் என்று கணக்கிடுவர்..."
"பகலானது மீண்டும் இரண்டு சரிசமமான பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன, சூரியோதயத்திலிருந்து நண்பகல்வரை பகலாகும், பிறகு அதிலிருந்து சூரிய அஸ்தமனம்வரைக்கும் சாயங்காலமாகும்... மீண்டும், பகலும் சாயங்காலமும். அந்திசந்தி பலிகளையும், ஜெபங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காக, இரண்டு சமப்பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன."

"சூரியோதயத்திலிருந்து மூன்றாம் மணி வேளை, அதாவது காலை 9 மணிவரைக்கும், எப்போது வேண்டுமானாலும் அந்திப் பலிகள் மற்றும் ஜெபங்கள் ஏறெடுக்க அனுமதிக்கப்படுகிறது. மேலும் சாயங்கால பலிகள் மற்றும் ஜெபங்கள், முதலாம் சாயங்காலத்தின்போது ஏறெடுக்க அனுமதிக்கப்படுகிறது... எபிரெய பதமான 'எரெவ் கேட்டன்' *(erev katon)* என்பதின் அர்த்தம்: சிறிய அல்லது குறுகிய சாயங்காலமாகும், அதாவது நண்பகலிலிருந்து ஒன்பதாம் மணிவேளை அல்லது மதியம் 3 மணிவரைக்குமான காலப்பகுதியாகும்; மேலும் அதிலிருந்து சூரிய அஸ்தமனம்வரைக்கும் உள்ள காலப்பகுதி, 'எரெவ் கெடோல்' *(erev gadol)* என்றழைக்கப்படுகிறது, அதாவது, பெரிய சாயங்காலமாகும். இந்த இரண்டு சாயங்காலங்களின் மத்தியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட வேண்டும், அதே விதமாகத்தான், பதிவுசெய்யப்பட்டதுபோல உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற நிஜமான தேவ ஆட்டுக்குட்டியான, இயேசுவிற்கும் நிகழ்ந்தது." (**நிருபம்**–*R2953:4*)

"நீங்கள் இதிலே, முழுவதுமாக பானம்பண்ணுங்கள்" **(Drink ye, all of it)** (மத்.26:27) என்று பாத்திரம் சம்பந்தமாக மொழியப்பட்டதாக இருந்தாலும், மேற்கூறிய காரியமானது கடைசி இராப்போஜனத்தின்போது இயேசு கூறின வார்த்தைகளை இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக்குகிறது.

## "முதற்பேறானவர்களின் சபை" என்னும் பதம்

"முதற்பேறானவர்களின் சபை, பஸ்காவோடு தொடர்புபடுத்தப்பட்டு பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த இராத்திரியிலே எகிப்தின் தலைச்சன்பிள்ளைகள் அனைத்தும் அதம்பண்ணப்பட்டபோது, இஸ்ரயேலின் தலைச்சன்பிள்ளைகள் அனைத்தும் கடந்து போகப்பட்டனர்... அதன் பிறகு, நாம் அறிந்தவண்ணமாக, இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவருக்கும் **பதிலாக, லேவி எனும் ஒரு கோத்திரத்தார் மாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.** மேலும் இந்தக் கோத்திரத்தார் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டனர் அல்லது பகுக்கப்பட்டனர் – ஒன்று ஆசாரிய வகுப்பார் மற்றொன்று ஊழிய வகுப்பார் ஆவார்கள். முதல் வகுப்பார் ஆசாரியர்கள் என்றழைக்கப்பட்டனர். இரண்டாம் வகுப்பார் லேவியர்கள் என்றழைக்கப்பட்டனர். ஆயினும், உண்மையில் அவர்கள் அனைவரும் லேவியர்கள்தான். இந்த இரண்டு வகுப்பார்களும் சுவிசேஷ யுக சபைக்கு நிழல்களாக இருந்தனர்."

"இப்படியாக, முதற்பேறானவர்களின் சபையில், ஆசாரியர்களாகிய சிறு வகுப்பார் உள்ளடங்குவதுபோல, லேவியர்களாகிய 'திரள்கூட்ட' வகுப்பாரும் உள்ளடங்குகின்றனர் என்று பார்க்கிறோம். லேவியருக்கு தேசத்தின் சுதந்திர பாகத்தில் பங்கு இல்லாததுபோல, 'சிறுமந்தைக்கு' மாத்திரமல்ல, 'திரள்கூட்டம்' என்னும் ஊழிய வகுப்பாரான மணவாட்டியின் தோழி வகுப்பாருக்கும், பூமிக்குரிய சுதந்திரத்தில் பங்கு கிடையாது, மாறாக பரலோக சுதந்தரத்தில் பங்குபெறுவார்களாய் இருப்பார்கள்." *(R4823:2, 5)*

"முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கு நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (டயகலாட் மொழிபெயர்ப்பைப் பார்க்கவும்) இதில் தலையாகிய கிறிஸ்துவையும் கடந்தகால மற்றும் நிகழ்காலத்து அனைத்து உண்மையுள்ளவர்களையும் உள்ளடக்கியிருக்கும். இது சிறுமந்தை மற்றும் திரள்கூட்டம் என்னும் இரண்டு வகுப்பாரையும் உள்ளடக்கியிருக்கும்; ஏனெனில் அவர்கள் ஒருசேர பரலோகாத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையாகின்றனர்." *(R5294:3)*

## பஸ்கா
### (பொதுவாக மற்றும் குறிப்பாக)

### பொதுவாக:[1]

"...பஸ்கா பண்டிகையானது ஒவ்வொரு வருடமும் முதலாவது மாதத்தில் பதினைந்தாம் நாளன்று தொடங்கி ஏழு நாட்களுக்கு கொண்டாடப்பட்டது. அது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்கள் விடுதலையானதை **பொதுவான முறையில்** கொண்டாடியது; ஆனால் **குறிப்பாக,** எகிப்தியர்மேல் வந்த மரணம் என்ற வாதையிலிருந்து இஸ்ரயேலரின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்படுதலை அல்லது ஜீவன் தப்புவிக்கப்படுதலைக் குறிக்கும்படியாகக் கொண்டாடப்பட்டது. கடைசியாக வந்த இந்த வாதை இஸ்ரயேலர்களை அவர்களுடைய கட்டாய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும்படியாக பலவந்தம்பண்ணிற்று. **இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்து போகப்படுதல் என்பது, இஸ்ரயேலின் முழு தேசமும் விடுவிக்கப்படுவதற்கும், பாதுகாப்பாக சிவந்த சமுத்திரத்தினூடாக கடந்து செல்வது எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலைக்குள்ளாகக் கடந்துசெல்வதற்கும் முன்னோடியாக அமைந்தது...**"

"அப்போஸ்தலருடைய குறிப்பைத் தொடர்ந்து, **மாம்சீக இஸ்ரயேலர், தேவனுடைய ஜனங்கள் அனைவரையும் அடையாளப்படுத்தியது – அதாவது ஆயிரம் வருட யுக இறுதிவரையிலும், அவருடைய ஜனங்களாக மாறப்போகின்றவர்களையும் அடையாளப்படுத்தியது;** எகிப்தியர்கள் தேவனுடைய ஜனங்களின் எதிரிகளை அடையாளப்படுத்துகிறது, அவர்களுடைய இராஜாவாகிய பார்வோன் பொல்லாப்புகளின் பிரபுவும், அந்தகார லோகாதிபதியுமாகிய சாத்தானை அடையாளப்படுத்துகிறது; பார்வோனின்

வேலைக்காரரும் குதிரை வீரர்களும், விழுந்துபோன தூதர்களையும், சாத்தானோடு தங்களைச் சேர்த்துக்கொண்டுள்ள அல்லது சாத்தானோடு சேர்ந்து கொண்டு ஆண்டவருக்கும் அவருடைய ஜனமான புது சிருஷ்டிக்கும், பொதுவாக விசுவாச வீட்டாருக்கும் எதிராளியாக இருக்கிற மனிதர்களையும் அடையாளப்படுத்துவதாக நாம் தெளிவாகக் காண்கிறோம்... ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்திலும் நிஜமான மோசேயின் மேலும் இருக்கிறது. அவர் நிஜமான மோசேயின் மூலம் ஏற்றகாலத்தில் தம்முடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களை கொண்டுவருவார்; சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனிடத்தில் இணக்கமாயிருக்கிறவர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு நிழலாக உள்ளது..." *(F457-458)* தமிழ் – *(F608-609)*

"...இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தின் வாயிலாக, தெய்வீக இரக்கத்தின் வாயிலாக, அர்ப்பணிக்கப்பட்டவர்களாகிய, விசுவாச வீட்டாராகிய, முதற்பேறானவர்களின் சபை மாத்திரமே தப்புவிக்கப்படுகின்றனர் அல்லது கடந்துபோகப்பண்ணப்படுகின்றனர். எனினும் முதலாம் அல்லது பிரதான உயிர்த்தெழுதலாகிய – "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்," அவரோடுகூடப் பங்கடைபவர்களும், "**பரலோகத்தில் பேரெழுதியிருக்கிறவர்களுமான முதற்பேறானவர்களின் சபையினுடைய**" விடுதலையுடன், தெய்வீகத் திட்டமானது நிறைவடைகிறதில்லை. கிறிஸ்துவின் புண்ணியமானது, முதலாவது சபைக்குச் செயல்படுத்தப்படுவது என்பது தெய்வீகத் திட்டத்தினுடைய ஓர் அம்சமாக மாத்திரம் காணப்படுகின்றது..." *(R4555:6)*

## குறிப்பாக:

"**பஸ்காவானது அனைத்து ஜனங்களுக்கானதல்ல, மாறாக முதற்பேறானவர்களுக்கு மாத்திரமானதேயாகும்.** இது இந்தச் சுவிசேஷ யுகத்தின் சபைக்கான, அதாவது "முதற்பேறானவர்களின் சபை" என்று அழைக்கப்படுகின்றவர்களுக்கான கிறிஸ்துவினுடைய வேலையை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. சபை தனது சொந்த விடுதலையை தானாகவே (அவளாகவே) கொண்டுவந்துவிடவில்லை; அது கிருபையினாலும், தெய்வீக அன்பினாலும் உண்டானதாகும். இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்படுதல் என்பது, சீனாய் மலையில் இஸ்ரயேலரோடு, நியாயப்பிரமாண உடன்படிக்கைபண்ணப்படுவதற்கு வழிநடத்தினதுபோல, இந்தச் சுவிசேஷ யுகத்தில் முதற்பேறானவர்களின் சபை கடந்துபோகுதல் என்பது, மாம்சீக இஸ்ரயேலரையும், உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்கான புது உடன்படிக்கை நிறுவுதலுக்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது; மோசே தலை மற்றும் சரீரம் ஒன்றிணைந்த கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறார்..."*(R4335:1)*

"...பஸ்கா ஆட்டுக்குட்டிக்கான நிஜம் நமது கர்த்தர் மாத்திரமே ஆவார் என்றே நாம் வலியுறுத்துகின்றோம். இது "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்ற வார்த்தைகளுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 5:7, 8) பஸ்கா ஆட்டுக்குட்டியானது, எலும்புகள் எதுவும் முறிக்கப்படாத நிலையில் சுடப்பட்டு, ஆயத்தம்பண்ணப்பட வேண்டும். இது இப்படியாக நமது கர்த்தரை மாத்திரமே அடையாளப்படுத்துகின்றதே ஒழிய, அவரது "அங்கத்தினர்களை," சபையை அடையாளப்படுத்துகிறதில்லை..."*(R4335:1)*

"...பஸ்கா ஆட்டுக்குட்டியானது, தலையாகிய இயேசுவையும், அவரது சரீரமாகிய சபையையும் அடையாளப்படுத்துகிறதில்லை. அது குறிப்பாக "தேவ ஆட்டுக்குட்டியாகிய" நமது கர்த்தர் இயேசுவை மட்டுமே அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்று நமது கர்த்தரைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டியின் விஷயத்திலும், இப்படியாகவே

கட்டளையிடப்பட்டிருந்தது... இன்னுமாக இந்த பஸ்கா ஆட்டுக்குட்டியும், அதன் இரத்தமும், முதற்பேறானவர்களின் சபைக்கு மாத்திரம் அடையாளமாய்க் காணப்படுகின்ற **முதற்பேறானவர்களை மாத்திரம்** "கடந்துபோகப்படுதலை", காப்பாற்றப்படுதலைச் சாத்தியமாக்கிற்று. **மற்றவர்களுடைய விடுதலை,** பஸ்காவினுடைய நிழலில் இடம்பெறுவதில்லை." *(R4384:3)*

"...இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்தும் அந்த ஆட்டுக்குட்டியின் மரணமானது, **அனைத்து ஜனங்களுக்குமானதல்லாமல், மாறாக 'அந்த இராத்திரியிலே' கடந்துபோகப்படும் முதற்பேறானவர்களுக்காக மாத்திரம்தான். முதற்பேறானவர்களின் சபை வேதாகமத்தில் 'விசுவாச வீட்டார்' என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் அந்த இராத்திரியானது,** தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கும் நீதியின் சூரின் ஆனது உதித்து, ஆயிர வருட நாளினைக் கொண்டு வருவதற்கு முன்புவரை காரிருளானது பூமியை மூடி, தொடர்ந்து சூழ்ந்துகொண்டிருக்கும் நிலையிலுள்ள, **இந்தச் சுவிசேஷ யுகத்தினை அடையாளப்படுத்துகிறது.** பிறகு உலகம் என்னும் **எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் பொதுவான இரட்சிப்பு கிடைக்கும்.** மற்ற வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், **ஆயிர வருடத்தின் விடியல் உதயமாகும்போது, கடந்துபோன சபை மாத்திரம் காப்பாற்றப்பட்டு அல்லது கடந்துபோகப்பட்டு அல்லது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் பலனினால் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருப்பர்.** இருப்பினும், ஜனங்களின் பொதுவான இரட்சிப்பு ஏற்படுத்தப்பட்டது, எனவே ஆயிர வருட யுகத்தின்போது அதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இரட்சிப்பு வரும். இப்போது சபை மாத்திரமே கடந்து போய்க்கொண்டிருக்கின்றனர். கூடியவிரைவில் உலகத்திற்கான பொதுவான இரட்சிப்பும் முறைமைப்படுத்தப்படும். **தேவனுடைய முறைமையில் அந்த இரட்சிப்பானது முதலில் முதற்பேறானவர்களின் கடந்து போகுதலில்லாமல் நிறைவேற முடியாது...**"*(R4492:6)*

## பூவுலகம் "அவரது மாம்சத்தை" புசித்தல் (யோவான் 6:53)

"...ஆதாமின் மூலமாக வந்த மரண தண்டனையின்கீழ் முழு உலகமும் இருப்பதினால் – அவை ஏற்கெனவே மரித்து விட்டதாகக் கருதப்படுகிறது; மேலும் அவர்கள் மனுஷகுமாரனின் மாம்சத்தைப் (பலியாகப்பட்ட மனுஷீகம்) புசியாமலிருந்தால் (விசுவாசத்தினால் உட்கிரகித்துத் தன்மயமாக்குதல் மற்றும் தனக்குரியதாக்குதல்) அவர்களுக்கு ஜீவனில்லை அல்லது அவர்கள் ஜீவனை அடையவும் முடியாது. (யோவான் 6:53) மேலும் யார் அதை தற்போது 'புசிக்கிறார்களோ' அவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. ஆனாலும் அத்தகையவர்களை உண்மையில் ஜீவனடையச் செய்வது என்பது, நமது வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி உயிர்த்தெழுதலின் காலையில்தான் நிகழும். மேலும் இவ்வாறாகவே ஆயிர வருட யுகத்தின்போதும் உலகத்திற்கும் பொதுவாக நிகழும்: கடந்த யுகத்தில் அவர் ஜனங்களுக்காக செய்திட்ட கிருபை நிறைந்த வேலையையும் ஆயிர வருட யுகத்திற்காக அவர் ஏற்படுத்திவைத்திட்ட ஒழுங்குமுறைகளையும் அங்கீகரித்து, கிறிஸ்துவினுடையவர்களாக வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில், ஒவ்வொருவரும் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பை அடைவதற்காக, அவர்கள் மாபெரும் இரட்சகர் மூலமாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இவ்வாறாக, **அவரது 'மாம்சத்தை' அவர்கள் புசித்து,** அவரது புண்ணியத்தைத் தனக்குரியதாக்கிக்கொண்டு அவரது பெலனையும் ஜீவனையும் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் புசிக்க தொடங்கும் நேரத்திலிருந்து ஜீவிக்க ஆரம்பிக்கின்றனர் என்றே கருதப்படும் அல்லது கணக்கிடப்படும், ஆனாலும், ஆயிர வருட யுகத்தின் இறுதியில் உள்ள சோதனையின் காலம்வரை அவர்கள் முழுமையாக ஜீவனடைந்து, பரிபூரணமடையமாட்டார்கள்."*(R3132:2)*

## "அவரது மாம்சத்தை" புசித்தலும் – ஈடுபலியும்!

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11:26) என்று அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார். அப்போதிலிருந்து வருடந்தோறும் இராப்போஜனத்தைக் அநுசரிப்பது என்பது ஆண்டவரைப் பின்பற்றி வருபவர்கள் எல்லாருக்கும் ஒரு புதிய அர்த்தத்தை உடையதாக இருக்க வேண்டும் என்பதை சீஷர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை இது

காட்டுகிறது. அதாவது பிட்கப்பட்ட அப்பம் ஆண்டவருடைய சரீரத்தையும், பாத்திரம் அவருடைய இரத்தத்தையும் குறிக்கிறது என்பதாகும்... **ஈடுபலியில் உள்ள விசுவாசம்** அதன் விளக்கத்தை "அவர் வரும்வரைக்கும்" என்ற இந்த எளிமையான நினைவுகூருதலில் இன்னும் காண்கிறது; "அவர் வரும்வரைக்கும்" என்பது நம்முடைய ஆண்டவரின் வருகைவரை அல்லது பிரசன்னம்வரை என்பதையல்ல, அறுவடை அல்லது இந்த யுகத்தின் இறுதிவரை என்பதையல்ல, நம்முடைய ஆண்டவர் கூறியபடி, "தேவனுடைய இராஜ்யத்திலே நவமானதாய் இதைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும்" என்பதைக்குறிக்கும்; இதற்கேற்ப இதில் இன்னும் நிறைவான அளவுக்கு பங்குபெறும்படியாக, அவருடைய வருகையில் அவருடையவர்கள், "திரைக்கு அப்பால் ஒவ்வொருவராக கூட்டிச் சேர்க்கப்படும்வரை அவரது ஈடுபலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை இந்த எளிமையான நினைவுகூருதலில் தொடர்ந்து காணலாம்." *(F465)* தமிழ் – *(F618)*

## மீட்கும்பொருள் – பழைய ஏற்பாட்டில் காண்பிக்கப்படவில்லை

"எந்தவொரு நிழல்களும் திருஷ்டாந்தங்களும் ஈடுபலியைக் குறிப்பதாக நான் நினைக்கவில்லை, மேலும் அதே காரணத்தினால்தான் அது காண்பிக்கப்பட்டிருக்கும் என்றும் நான் நினைக்கவில்லை. மேலும், ஒரு பரிபூரண மனிதரும் அங்கு இல்லை என்பதால் ஈடுபலியின் விலைக்கிரயத்தை குறிப்பதற்காக ஒரு காளையும் காணப்படவும் இல்லை. நம்மிடம் உள்ள ஒரே எடுத்துக்காட்டு, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் – தகப்பனாகிய ஆதாமின் இரட்சகரான இயேசு ஒருவரே ஆவார்." *(Q562)*

## ஈடுபலி – விலைக்கிரயம் மற்றும் பாவநிவாரணபலி

"ஈடுபலி என்பது விலைமதிப்பில்லா காரியத்துடன் தொடர்புடையது, அதாவது, மனிதக் குடும்பத்தின் ஓர் உறுப்பினர் அல்லது அனைவருக்குமான அபராதத் தொகையைச் செலுத்துவதற்குப் போதுமான ஒரு மீட்கும்பொருளாகிய கிறிஸ்துவின் இரத்தம் அல்லது மரணத்துடன் தொடர்புடையது ஆகும். முழு உலகத்தின் பாவங்களையும் இரத்துச் செய்வதற்கு மீட்கும்பொருள் செயல்படும் விதத்தை பாவநிவாரணபலியானது காட்டுகிறது." *(R4493:6)*

## பாவநிவாரணபலியின் புண்ணியம் [2]

"காளையானது முப்பது வயதில் பூரண **மனிதனாக** இருந்து நமது சார்பாக மரித்த இயேசுவை நிழலாகக் காட்டுகின்றது..."

"மனிதனுடைய பாவத்தின் தண்டனையாக மரணம் இருந்ததினாலே, நம்முடைய இரட்சகரும் அதேபோல மனிதனாக – மாம்சமாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லையென்றால் இந்த மனுக்குலத்தை அவர் இரட்சித்திருக்க முடியாது. ஒரு மனிதன் பாவம் செய்திருந்தான், அதற்கான தண்டனை மரணம் மரணமாயிற்று, நமது கர்த்தர் அதற்குண்டான அபராதத்தைச் செலுத்த வேண்டுமானால் அவர் அதே போன்ற நிலையாகி (ஆனால் மாசற்று, பாவத்திற்கும் பாவிகளின் சந்ததிக்கும் விலகி) ஆதாமிற்குப் பதிலாக மரிக்க வேண்டும், இல்லையெனில், மனுக்குலம் மரணத்திலிருந்து விடுதலையாக்கப்பட முடியாது..."

"மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே நமது **மீட்கும்பொருளாக** கொடுத்ததினாலே, அவர் கொடுத்த அதே மனிதநிலைக்கு மீண்டும் அவர் கொண்டுவரப்பட மாட்டார் என்பது தெரிகிறது." (T51-52) (தமிழ் – பச்சை நிற புத்தகம் – *(T56)*)

## யாத்திராகமம் 12:1-2 [3]

**"கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாய் இருப்பதாக."**

**"பிரதான மாதம்"** = "...அது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்கள் மீட்கப்பட்டதைப் பொதுவான முறையில் கொண்டாடியது; ஆனால் குறிப்பாக, சங்காரம்

கடந்துபோகுதல் அல்லது ஜீவனைத் தப்புவித்தல் – எகிப்தியர்மேல் வந்த மரணம் என்ற வாதையிலிருந்து இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களைத் தப்புவிக்கும்படியாகக் கொண்டாடப்பட்டது. கடைசியாக வந்த இந்த வாதை இஸ்ரயேலர்களை அவர்களுடைய கட்டாய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படியாக பலவந்தம்பண்ணிற்று. இஸ்ரயேலின் முதற்பேறானவர்களைக் கடந்துசென்றது, முழு இஸ்ரயேலும் விடுவிக்கப்படுவதற்கும், எகிப்தின் அடிமைத்தனத்தினின்று சுதந்தரத்திற்குப் பாதுகாப்பாக சிவந்த சமுத்திரத்திற்குள்ளாகக் கடந்துசெல்வதற்கும் முன்னோடியாக அமைந்தது. **அவர்களுடைய தேசம் பிறந்ததற்கு** மிகவும் நெருங்கியுள்ள இவ்வளவு முக்கியமான ஒரு சம்பவம் சரியான விதத்தில் நினைவுகூரப்படுவதை நாம் காண்கிறோம்." *(F457)* தமிழ் – *(F607- 608)*

"இது ஒரு தெளிவான சத்தியத்தைப் போதிக்கிறது. ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக முழு இரட்சிப்பு மற்றும் நிலைநாட்டப்பட்ட சமாதானத்தின் அறிவில், தேவனோடு நடக்கத் துவங்கும் வரையில் ஒரு மனிதனின் வாழ்க்கை உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. இதற்கு முன்பதாக, தேவனுடைய நியாயத்தீர்ப்பின்படி, மற்றும் வேதாகம பாஷையின்படி, அவர் 'அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவராக' 'தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராக' இருக்கிறார். மனித கணக்கின்படி அவரது முழு வரலாறும், இடைமறிக்கப்பட்ட ஒரு காட்சிக்குறித்த ஆரவாரமான செயல்பாடாகத் தோன்றினாலும், அது ஒரு முழுமையான வெறுமையானதாகத்தான் இருக்கிறது. புகழ்கள், ஐசுவரியங்கள், களியாட்டுகள், வாழ்க்கையின் ஈர்ப்புகள் என்றழைக்கப்படும் இந்த உலகின் மனிதனுடைய கவனத்தை ஈர்க்கும் அனைத்தும், பரிசுத்த ஸ்தலத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கப்படும்போது, அது ஒரு இருண்ட வெறுமையானதாகவும், ஒரு பயனற்ற வெற்றிடமாகவும், பரிசுத்த ஆவியின் வெகுமதிகளுக்கு முற்றிலும் தகுதியற்றதாகக் கருதப்பட வேண்டும்." ***(யாத்திராகமம்பற்றிய குறிப்புகள் – மேக்கின்டோஷ் – பக்கம்** 184)*

**உண்மையில்** (முற்காலத்து இஸ்ரயேலரால் அடையாளப்படுத்தப்படும்) **உலக மனுக்குலத்திற்கான காலமானது, ஆயிர வருட யுகத்தின் நிறைவுக்கு பிறகு துவங்கும்,** அதாவது, இறுதிச் சோதனைக்குப் பிறகு, மனந்திருந்தாவர்கள் அனைவரும் (சாத்தானும் அவனது கூட்டாளிகளும்) நித்தியத்திற்கும் அழிக்கப்படுவார்கள். பிறகு **அந்த** "இஸ்ரயேலர்," அந்த யுகத்தின் "இராத்திரியிலே," "பஸ்கா ஆட்டுக்குட்டியின்," இரத்தத்தின் கீழாக வந்து, அதின் (அவரது) "மாம்சத்தை" (குறிக்கக்கூடிய இயேசுவின் ஜீவிக்கும் உரிமைகளை) தங்களுக்கே ஏற்புடையதாக்கி, முற்காலத்து இஸ்ரயேலரைப் போன்று "செங்கடலை" **கடந்துசென்று** தேவனுடைய பிள்ளைகளது சுதந்தரத்தை (மாம்சீக தளத்தில்) அடையும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள்!

"...ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்திலும் நிஜமான மோசேயின்மேலும் இருக்கிறது. அவர் நிஜமான மோசேயின் மூலம் **ஏற்றகாலத்தில்**—தம்முடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற—சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களைக் கொண்டுவருவார்; சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனிடத்தில் இணக்கமாயிருக்கிறவர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு நிழலாக, பார்வோனும் அவனுடைய சேனைகளும் சொல்லர்த்தமான சிவந்த சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது நிழலாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் "இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" *(F458)* தமிழ் – *(F609)*

## ஆயிர வருட யுகத்தின் "இஸ்ரயேலர்கள்"

ஆயிர வருட யுகத்தின் "இஸ்ரயேலர்களான" – முழு உலக மனுக்குலமும் – இறுதியில், அந்த யுகம் நிறைவடையும் தருவாயில், மாம்சீக தளத்தில் தேவனுடைய புத்திரருக்குரிய சுதந்தரத்திற்குள் கடந்துபோகிறவர்களாக இருப்பவர்கள், அதன்பிறகு முதலாம் ஆதாம், மற்றும் அவரது மனைவியாகிய ஏவாளுக்கும் பிள்ளைகளாக ஒருபோதும் இரார்கள்; மாறாக இரண்டாம் ஆதாமான – கிறிஸ்து மற்றும் அவரது மணவாட்டியான சுவிசேஷ யுக சபைக்கு பிள்ளைகளாக இருப்பார்கள். தேவனுடைய இந்தத் மகா

இரகசியமானது (எபேசியர் 5:32) ஆதி காலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைத்த வைக்கப்பட்டிருந்து, இப்பொழுதோ, பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்டுள்ளது; மேலும் அது, முதல் ஜோடியிலும் அவர்களது சந்ததியை உருவாக்கும் வல்லமையின் பாக்கியத்திலும் பிரதிபலிக்கப்பட்டும் இருக்கிறது. மேலும் அது, தீர்க்கதரிசனமாக கிறிஸ்து இயேசுவே மனுக்குலத்திற்கு நித்திய பிதாவாக (ஏசாயா 9:6) இருக்கப்போகிறார் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அவ்வாறாகவே சகோ. ரசல் அவர்களும் அதைப்பற்றி எழுதியிருக்கிறார் –

> "...மேலும் வேதவாக்கியங்கள்...பரலோக மணவாளனான, மகிமையடைந்த இயேசுவும், பரலோக மணவாட்டியான, மகிமையடைந்த சபையும், அடையாள பாஷையில், பிள்ளைகளை பெற்றெடுப்பார்கள் என்பதாகக் குறிப்பிடுகிறது. அதாவது, நீதி ஆளுகை செய்யும் ஆயிர வருடங்கள் முழுவதுமாக, இராஜ்யத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நித்திய ஜீவனை ஏற்றுக்கொள்ளும் பூமிக்குரிய தளத்தில் உள்ள அவருடைய பிள்ளைகளாக இருக்கும் யாவருக்கும் மகிமையடைந்த இயேசு நித்திய பிதாவாக அல்லது நித்திய ஜீவனை அளிப்பவராக இருப்பார். அப்போது சபை முழு மனுக்குலத்திற்கும் தாயாக அல்லது பராமரிப்பவர்களாக அல்லது காப்பாளராக இருப்பார்கள்." *(OV124)*

ஆயிர வருட யுகத்தின் இறுதியில் "கடந்துபோகப்பட்டவர்கள்," "மீண்டும் பிறந்திருப்பார்கள்," என்ற அர்த்தத்தில் பார்க்கும்போது – அச்சமயத்தில் அவர்கள், பாவத்திலோ, "துர்குணத்திலோ உருவாகாமல்" (சங். 51:5) மாறாக நித்தியமான இராஜ்யத்தின் – இந்தப் பூமியில் அமைந்திடும் பரலோக இராஜ்யத்தின் அங்கத்தினராக உருவாகியிருப்பார்கள்!

இயேசு தேவனுடைய இராஜ்யம் குறித்து நிக்கொதேமுவிடம் பேசினபோது, குறிப்பாக அவரது சிந்தையில் அதின் ஆவிக்குரிய – அதன் பரலோக பகுதியைப் பெற்றிருந்தார் என்பது உண்மையே. ஏனெனில் அச்சமயத்தில் மாம்சீக அல்லது பூமிக்குரிய பகுதியானது பங்கடைவதற்காக இன்னும் திறக்கப்படாதிருந்தது* இயேசு "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்" என்று அறிவித்திருந்தார். (யோவான் 3:3) எனினும், இது பூமிக்குரிய பகுதிக்கும் உண்மையாகப் பொருந்தும்: அவ்விதமாக, எந்தப் பாவியும், அந்த இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்திலும் பிரவேசிக்க முடியாது. (வெளி. 21:7, 8)** ஆகவே, அதில் பிரவேசிக்கும் யாவருக்கும், ஜெநிப்பிக்கப்பட்டு மறுபடியும் பிறத்தல் என்பது அவசியமாகிறது.

ஆகவே, ஆயிர வருட யுகத்தின் "**இஸ்ரயேலர்களுக்கு**" -

> "...கிறிஸ்துவுக்குப் பிள்ளைகள் என்னும் உறவுக்குள் வரவும், அவரது ஜீவனைப் பெறவும், முதலாம் ஆதாமின் மூலமாக இழந்த அனைத்தும் இரண்டாம் ஆதாம் மூலமாக மீட்டு திரும்பக் கிடைக்கப்பெறும் சீர்பொருத்தப்பட்ட ஜீவனுக்கு மீண்டும் பிறப்பிக்கப்படும் சிலாக்கியம் அருளப்படும்..." *(R3927:4)*

---

*"நமது கர்த்தர், 'ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்' என்று கூறுகிறார். இங்கு குறிப்பிடப்படுவோர், சுவிசேஷ யுகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மணவாட்டி வகுப்பார் அல்ல, மாறாக மத்தேயு 25–ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் செம்மறியாட்டு வகுப்பார் – ஆயிர வருட யுகத்தின்போது அப்படிப்பட்ட மனுக்குலமானது கர்த்தரின் செம்மறியாடாக மாறி அவரது சத்தத்திற்குக் கீழ்ப்படிவார்கள். இவர்களிடம் ஆயிர வருட யுகத்தின் நிறைவின் போது, அவர் பிதாவின் திட்டத்திற்கு இசைவாக, 'வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்' என்று அவர் கூறுகிறார்... அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள், வாங்கப்பட்ட உடைமைகள் யாவும் தகப்பனாகிய ஆதாமினிடத்திற்கு வந்து சேரும், ஏனெனில் அவர் கீழ்ப்படியாமையின் மூலமாக தனக்கும் தனது பிள்ளைகளுக்குமாக அதை ஏற்கெனவே இழந்திருந்தார். ஆனால் அதை இயேசு தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக மீட்டு தமது கிருபையான உதவிகளை ஏற்று தம்மூலமாக மீண்டும் பிறக்கும் ஆதாமின் பிள்ளைகள் யாவருக்கும் ஆயிர வருட யுகத்தின் இறுதியில் அதனைத் திரும்பக்கொடுத்திடுவார்; அதன் மூலமாக அவர்கள் அவருக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள் – இவர் அவர்களுக்குத் தேவனாக – அவர்களது "பிதாவாக" இருப்பார். (ஏசா. 9:6)" *(R2833:5)*

**லூக்கா 4:18,19-ஆம் வசனங்களிலும் நமது கர்த்தர் வார்த்தைகளைத் தவிர்த்து பேசியுள்ளார்: "...'இந்த வேதவாக்கியம் உங்கள் காதுகள் கேட்க இன்றைய தினம் நிறைவேறிற்று' என்று கூறினபின், "நீதியைச் சரிக்கட்டும் நாள்" ஏற்பட காலம் இன்னும் துவங்காததால் அதைக் குறித்துச் சொல்லாமல் விட்டுவிட்டார் (ஒப்பிட்டுப்பார்க்கவும் லூக்கா 4:19; ஏசாயா 61:2)" *(A218)*

## யாத்திராகமம் 12:3-7 [4]

**"நீங்கள் இஸ்ரயேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள், ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து,"**

மீண்டுமாக நமக்கு நினைப்பூட்டப்படும் கரியம் யாதெனில், நீசான் 14–ஆம் தேதி அன்று எகிப்தில் சங்காரத்தின் இராத்திரியில், முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்ட விஷயம் முற்காலத்து "பஸ்கா" நிழலின் மிக முக்கியமான அம்சமாக இருந்திட்டாலும், இது மறுநாள் காலை – நீசான் 15–ஆம் தேதி அன்று காலை முழு தேசத்தின் பொதுவான விடுதலைக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வாகவே இருந்தது. மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி, அங்கு இஸ்ரயேல் முழு உலக ஜனங்களுக்கும் நிழலாக இருந்தது – "அதாவது ஆயிர வருட யுக இறுதிவரையிலுமே, அவருடைய ஜனங்களாக மாறும் அனைவரையும் நிழலாகக் காட்டியது – (*F458,* தமிழ் *F608*–ஐ பார்க்கவும்) அவர்கள் அனைவரும் தேவ ஆட்டுக்குட்டியினை அங்கீகரிக்க மாத்திரமல்லாமல், அவர்கள் மனசாட்சியின்படி தாங்களே சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழாகக் கொண்டுவரவும் அழைக்கப்படுவார்கள். அந்தத் முற்காலத்திய இரத்தத்தினைக்குறித்து சகோ. ரசல் அவர்கள் அறிவிப்பது யாதெனில்:

"...இரத்தம்க தவின்மீ துஇ ருப்பதென்பது,அ ந்தக்க தவுக்குள்இ ருக்கும்ய ாவரும்அ ந்த இரத்தத்தினை விசுவாசிக்கின்றனர் என்றும் அதின் ஆற்றல் வாய்ந்த புண்ணியத்தின் கீழாக இருக்கின்றனர் என்பதையும் குறிக்கிறது."*(R2918:4)*

மேலும் இதனால்தான் மோசே **இஸ்ரயேலின் சபையார் யாவரோடும்** பேசும்படி கட்டளையிடப்பட்டார். இதன் அர்த்தம், தேவனுடைய வார்த்தையானது வெறுமனே யூத யுகத்தின் முற்கால இஸ்ரயேர்களுக்கு மாத்திரமல்லாமல், சுவிசேஷ யுக இஸ்ரயேலர்களுக்கும், வரவிருக்கும் ஆயிர வருட யுகத்தின் இஸ்ரயேலர்களக இருக்கப் போகிறவர்களுக்கும் – அதாவது முழு உலக மனுக்குலத்திற்கும் பொருந்தும்!

இந்தச் சுவிசேஷ யுக இஸ்ரயேலர்கள், "பஸ்கா ஆட்டுக்குட்டியாக" தாம் அடிக்கப்படுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன் இஸ்ரயேலுக்கு தம்மை அறிமுகப்படுத்தினவரையும், பரம பிதாவின் சித்தத்திற்குத் தங்களையே அர்ப்பணிக்கவும் தத்தம் செய்யவும் அவர்களை ஏதுவாக்கிய இரத்தத்தையும் (ஆகிய இரண்டையும்), நிச்சயமாக, கண்டுணர்ந்திருக்கின்றனர்.

ஆயிர வருட யுகத்தில் இருக்கப் போகும் இஸ்ரயேலர்களும்கூட, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியையும் (யோவான் 1:29, 36), அவருடைய இரத்தத்தின் புண்ணியமில்லாமல் எவராலும் இரண்டாம் மரணத்தைக் "கடந்து போக" முடியாது என்பதால் அவருடைய இரத்தத்தையும் அங்கீகரிக்க அழைக்கப்படுவார்கள். மறுக்கிறவர்கள் எவர்களோ, சாத்தான் மற்றும் அவனது கூட்டாளிகள் போல, அவனோடு இணைந்திருப்பதால், மனந்திரும்பாதவர்களாக இருப்பதால், நித்தியத்திற்கும் அழிக்கப்படுவார்கள். (*F457-459,* தமிழ் *F607-609*–ஐ பார்க்கவும்)

## கசப்பான கீரைகள்

"...கர்த்தருக்கு உண்மையாயிருப்பதன் விளைவாக ஏற்படும், சோதனைகள், இன்னல்கள், தூஷணங்கள் மற்றும் ஏமாற்றங்களே நமது 'கசப்பான கீரைகள்' ஆகும்; அவைகளே நமது ஆட்டுக்குட்டியாகிய – அதாவது, நமக்காக அடிக்கப்பட்ட கிறிஸ்து என்னும் நமது பஸ்கா (ஆட்டுக்குட்டியை) மீண்டும் மீண்டும் புசித்திட நமது பசியினைத் தூண்டிடும்..." *(R2116:1)*

"...யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப் பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம்பண்ணினதும் பூமிக்குரியவைகள் மீதான நமது விருப்பங்களை மறப்பதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தை புசிப்பதற்கான தீவிர பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம்..." *(R5641:4)*

"பஸ்காவில், இஸ்ரயேல் புத்திரர் உணவை **மெரோரீமோடு** (Memorim) சாப்பிடுவதற்கு அழைக்கப்பட்டார்கள்; இது உண்மையில் 'கசப்பானது' என்ற அர்த்தம், 'கீரை' என்று புரிந்துகொள்ளப்பட்டது. (யாத். 12:8) இதையொத்த மற்றொரு குறிப்பு எண்ணாகமம் 9:11-லும் வருகிறது. இந்தக் "கீரைகள்" ஒருங்கே ஒலியுடைய ஈரெழுத்துக்களாக (tr./digraph) உண்மையில் சமையல் கீரைகளே அல்ல, மாறாக, பச்சடி கீரைகளான சிக்கரி (காசினி), என்டைவ் (இனிய குடிநீர்மம் செய்யப் பயன்படும் சுருள் இலைச் செடி வகை), சொரல் (கார இலைக் களைப்பூண்டு வகை), டான்டெலியன் (மஞ்சள் மலர்கொண்ட சிறிய செடி வகை) மற்றும் பழைய வகையான லெட்யூஸ் (கோசுக்கீரை) போன்றவை. இவையனைத்தும் பரவலாக எகிப்தில் பரவியிருந்தது. வாட்டர்கிரஸ் (தெளிந்த ஓடையில் வளரும் செடி வகை) என்பதும் இந்தக் கசப்பான கீரை என சில நிபுணர்களால் சேர்க்கப்பட்டுள்ளது... அசலான லெட்யூஸ் (கோசுக்கீரை) (**லாக்டுகா சட்டிவா**) வேகவைக்காமல் சாப்பிட்டால் கசப்பாக இருக்கும், இன்று இருக்கும் உடனே சாப்பிடக்கூடிய மொறுமொறுப்பான லெட்யூஸ்கள் விடவும் வித்தியாசமாக இருக்கும்." (**சோன்டர்வன்... பைபிளின் என்சைக்ளோபீடியா**)

## யாத்திராகமம் 12:8

**"அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள்."**

**"அன்று இராத்திரியிலே"** - ஆயிரவருடத்தின் விடியற்காலை மற்றும் அதன் நீதியின் சூரியன் உதயமாவதற்கு முன்பதாகக் காணப்படும் - "இந்தச் சுவிசேஷ யுகத்தின் இராத்திரியிலே." (*F460)* தமிழ்-*(F611*)

**"நெருப்பினால் சுட்டு"** - இங்குள்ள குறிப்பானது, சந்தேகத்திற்கு இடமின்றி இயேசுவிற்கு அந்தப் புண்ணியத்தைக்/தகுதியைக் கொடுத்த சோதனைகள் மற்றும் கடுமையான அனுபவங்களைக் குறிக்கின்றது. அப்புண்ணியத்தினால் "கானானை" நோக்கிப் பயணப்படும் சிலாக்கியம் பெற்றவர்களுக்கு, ஊட்டமளிக்கும் சத்துணவாக அமையப்பெற்றது.

**"புளிப்பில்லா அப்பத்தோடும்"** - "சத்தியம்," "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பிதாவினிடத்திலிருந்து வந்த மேன்மையான வாக்குத்தத்தங்கள். 'இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே' (யோவான் 6:50) (*R2918:3*) இந்தச் சத்தியமானது ("நானே... சத்தியம்" (யோவான் 14:6) என்று அறிவித்த இயேசுவில் பொதிந்துள்ளபடி) பரிசுத்தமும் மாசற்றதுமானது - ஆகவே "புளிப்பில்லாதது... மனித கோட்பாடுகளின்படியான, பொல்லாப்பு (புளிப்பு), கறைதிறை, குறிக்கோள்கள், சுயநலம், போன்ற புளிப்புகளற்றதாக இருந்தது" (*F464*) தமிழ்-(*F616*)

**"கசப்பான கீரையோடும்"** - யேகோவா தேவன் அனுமதிக்கும் சோதனைகள் மற்றும் அனுபவங்களானது, "சுடப்பட்ட ஆட்டுக்குட்டியை," மீண்டும் மீண்டும் புசித்திட நமது பசியினைத் தூண்டிடும் - "கர்த்தர் நமக்காக, ஆயத்தப்படுத்திடும் கசப்பான அனுபவங்கள் மற்றும் சோதனைகளானது, பூலோக விஷயங்களிலிருந்து நமது பற்றுதல்களை மறக்கச் செய்ய உதவிடும்... மேலும் ஆட்டுக்குட்டியையும் சத்தியமென்னும் புளிப்பில்லா அப்பத்தை புசித்திட அதிக ஆர்வத்தினை தந்திடும்." *(R5870:4)*

## யாத்திராகமம் 12:9[5]

**"பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக."**

**"பச்சையாயும்... அல்ல"**[5] – இயேசுவின் சோதனைகள் மற்றும் அனுபவங்களாலே அன்றி, எவராலும் அவரது வாழ்க்கையினைத் தனதாக்கிக்கொள்ள முடியாது, அதாவது இயேசுவின் வாழ்க்கையை **வெறுமனே தலைச்சிறந்த போதகராக** ஏற்றுக்கொள்வதின் மூலமாக போதிய போஷாக்குக் கிடைக்காது.

**"தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல"** – இங்கு வரும் தண்ணீர், சத்தியத்தைக் குறிப்பிடுவதோ, அடையாளப்படுத்துவதோ இல்லை, மாறாக, மரணபரியந்தம் இருந்த அவரது அர்ப்பணிப்பின் அடையாளத்தை மிக ஸ்திரமாக சுமந்திருந்த கிறிஸ்து இயேசுவினுடைய வாழ்க்கையின் அந்த அம்சங்களை, இலகுவடையச் செய்திடும், நீர்த்துப்போகச் செய்திடும், ஆம், கழுவிடச் செய்திடும், சரியாக மெல்லாமல் விழுங்கச் செய்திடும் மனிதப் போக்கினையே தண்ணீர் பிரதிபலிக்கிறது. மனுஷகுமாரனின் மாம்சத்தைப் "புசிக்கும்" முறை இதுவல்ல!

**"நெருப்பினால் சுட்டதாய்"** – அதாவது, இயேசுதாமே தாம் பட்டப்பாடுகளினாலே பூரணராக்கப்பட்டார் எனும் உண்மையின் முழு உணர்தலுக்கு வருதல். (எபி. 5:8, 9; 1 பேதுரு 4:1, 2)

**"அதின் தலையையும் அதின் தொடைகளையும்"** – மேலும் "கிறிஸ்து இயேசுவிலிருந்த **சிந்தையும்** (பிலிப்பியர் 2:5) **அவரது வாழ்க்கை முறையும்** இதற்கு ஏற்றார்போல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." (1 யோவான் 2:6)

**"அதற்குள்ள யாவையும்"** – அதாவது, இந்த "இரவு நேரமான" – "சங்கார இரவான" – சுவிசேஷ யுகத்தில் "கடந்து போகப்படுவதற்கு" சிலாக்கியம் பெற்ற அனைவராலும் இந்த தேவ ஆட்டுக்குட்டியின் ஜீவனுக்கும், மரணத்துக்கும் உரியதான **அனைத்தும்** தனதாக்கிக்கொள்ளப்பட வேண்டும்! (யாத். 12:10; மத். 26:26, 27)

## "விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல்"

> "...விடியற்காலமட்டும் ஆட்டுக்குட்டியில் ஒன்றையும் மீதியாக வைக்காமல் இருக்க வேண்டும் என நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நிலையில், அது அடையாளப்படுத்துவதாகக் காணப்படுவது என்னவென்றால், கர்த்தருடைய பலியில் பங்குகொள்ளும் சிலாக்கியம் என்பது அதைப் புசித்தலை அர்த்தப்படுத்தப்படுகிறது என்றும், மேலும் பாடுகளின் ஐக்கியம் அல்லது பாடுகளில் பங்குகொள்ளுதல் என்பது சுவிசேஷ யுகத்திற்கு உட்பபட்டது என்றும் அர்த்தப்படுத்துகிறது. இது அப்போஸ்தலராலும் சுட்டிக்காட்டப்பட்டது." (1 கொரி. 10:16, 17) *(R2116:4)*

## 1 கொரிந்தியர் 15:22, 23

"**ஆதாமிலிருந்து வந்த வம்சாவழியின் தன்மையினால் எல்லாரும் மரிக்கிறதுபோல, அப்படிப்பட்டவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**" (1 கொரி. 15:22 – **வில்லியம்ஸ் மொழிபெயர்ப்பு**)

> "ஆதாமின் சந்ததியினர் அவருக்குள் இருந்தது, அவர்கள் விருப்பத்தின்படியோ அல்லது சந்தர்ப்பவசத்தினாலோ அல்ல, உண்மையாகவும் சட்டரீதியாகவும் சுபாவத்தின்படியாகவும் அவருக்குள் இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் கிருபையினால் வந்தார்கள், தனிப்பட்டமுறையில் வந்தார்கள், ஆனால் நிபந்தனையுடன் வந்தார்கள். திவ்விய ஏற்பாட்டின்படி மரண ஆக்கினையிலிருந்து ஆதாம் மீட்கப்படுவது, இறுதியில் அவனுடைய சந்ததியை மரண தண்டனையிலிருந்து விடுவிக்கும் அளவுக்கும், அதற்கும்மேலாக அவர்களுக்கு ஒளியைக் கொடுக்கும்படியாகவும், கிறிஸ்துவுக்குள் வரும்படியான அறிவையும், தருணத்தையும் கொடுக்கும்படியாகவும், அவனுடைய சந்ததியினர் எல்லாருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இந்த சிலாக்கியத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் வருகிறவர்கள் மாத்திரமே, ஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள், அந்த வசனத்தின் முழு அர்த்தத்தின்படி கூற வேண்டுமானால் அவர்கள் மரணத்திலிருந்து முற்றிலுமாக எழுப்பப்படுவார்கள். ஆதாமின் மனைவி அவனுடையவள், அவனுக்கு அடையாளமாக இருந்தவள், அவனுடைய அரையில் இருந்த பிள்ளைகளும் அப்படியே

இருந்தார்கள். அதுபோலவே கிறிஸ்துவினுடையவர்களும் அவருக்கு அப்படியே இருக்கிறார்கள். அவருடைய மணவாட்டி, அல்லது சபை முதலாவது வளர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அவருடைய ஜீவனிலிருந்து ஜீவனைப் பெறுகிறது. அதன் பிறகு உலகத்தார், மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு,ஆ யிரம்வ ருடயு கத்தின்போதுச த்தியஅ றிவுக்குள்ளாகக்கொ காண்டுவரப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலமாக அவர்களுடைய பிதாவாகிய அவருக்குள் (ஏசாயா 9:6) வரும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். மேலும் அவர்கள் இந்த உறவில் நிலைத்திருந்தால், மனிதனின் பூரண நிலைக்குள் பழையபடி கொண்டுவரப்படுவதற்கு அவர்கள் வளர்ச்சி பெறுதல் என்று பொருள்படும், அதாவது முதலாம் ஆதாமுக்குள் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பப் பெறுதல் என்று பொருள்படும். இப்படியாக கிறிஸ்துவுக்குள் உள்ள அனைவரும் பூரண வாழ்க்கைக்கு, ஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள் – "எழுப்பப்படுவார்கள்" என்பதற்கு இதுவே முழுமையான சரியான பொருள்..." *(F698)* தமிழ்–*(F938-939)*

"ஜீவனின் ஆசீர்வாதமானது அதின் நிறைவான, நித்தியமான, முழுமையான அர்த்தத்தில் 'கிறிஸ்துவுக்குள்ளான அனைவருக்கும்' வரவிருக்கிறது, மற்றவர்களுக்ககோ அல்ல... அவருடைய பிரசன்னத்தின் காலத்தில் உலக மனுக்குலம் அவரது திவ்ய இரக்கத்தைக் காணவும், கேட்கவும், ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்படும் – அது மணவாட்டி ஆகும் வாய்ப்பினால் அல்ல, ஏனெனில் அவ்வகுப்பார் ஏற்கெனவே நிறைவடைந்திருப்பர், மாறாக கிறிஸ்துவுக்குப் பிள்ளைகள் என்னும் உறவுக்குள் வரவும், அவரது ஜீவனைப் பெறவும், சீர்பொருந்தப்பட்ட ஜீவனுக்கு மீண்டும் பிறப்பிக்கப்படும் – அதாவது முதலாம் ஆதாமின் மூலமாக இழந்த அனைத்தையும் இரண்டாம் ஆதாம் மூலமாக திரும்பப்பெறும் – சிலாக்கியம் அவர்களுக்கு அருளப்படும்." *(R3927:1)*

## முதற்பேறானவர்கள் மட்டுமே இப்போது இரண்டாம் மரண ஆபத்தில் இருக்கிறார்கள்!

"பொதுவாக உலகம் இந்த ஆபத்திற்குள்ளாக இல்லை; அவர்கள் இன்னும் முதலாம் ஆக்கினைக்குள்ளாகத்தான் இருக்கிறார்கள், எனவே அவர்கள் இரண்டாம் ஆக்கினைக்குள்ளாக அல்லது இரண்டாம் **மரணத்திற்குட்பட்டிருக்கவில்லை.** இந்த நிழலானது அனைத்து வேதவாக்கியங்களும் வலுவாகத் தெரிவிப்பதையே தெளிவாகக் குறிக்கிறது, அதாவது, தற்காலமானது சபைக்குச் சோதனையின் காலமாகும், அப்போஸ்தலர் கூறுவது போல, 'சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், தேவனுடைய விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.'" *(R3995:5)*

## யாத்திராகமம் 12:10

**"அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக."**

**"ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல்"**

**"மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக"** – இங்குஅ டையாளப்படுத்தப்படும் "விடியற்காலம்" – என்பது ஆயிரவருடத்தின் நாளைக் குறிக்கிறது, "இராத்திரியிலே" கடந்துபோகப்படும்படிக்கு "முதற்பேறானவர்களாக" – மாறும் வாய்ப்பு இனி ஒருபோதும் அங்கு இருக்காது "தேவனுடைய தெய்வீக அழைப்பு" நிறுத்தப்பட்டிருக்கும். அப்போது இருக்கும் "முதற்பேறானவர்களுக்கு," இந்த "இராத்திரியான" சுவிசேஷ யுகமே, "அநுக்கிரக காலம்... (அவர்களது) இரட்சணிய நாள்" (2 கொரி. 6:2) ஆகும், மேலும், அதில் அவர்கள் தெய்வீகச் சுபாவத்தை – அழியாமையை அடைவார்கள்! (2 பேதுரு 1:4)

"இப்பொழுது நெருக்கமான வழியில் மாபெரும் பந்தயப் பரிசைப் பெற ஓடிக்கொண்டிருப்பவர்கள் ஆயிர வருட அரசாட்சியின் துவக்கத்தில் வெகுமதியாகிய அழியாமையைப் பெற்றிருப்பார்கள். ...சுவிசேஷ யுக முடிவில் அழியாமைக்குப் போகிற நெருக்கமான வழி அடைக்கப்படும். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்படும் "சிறுமந்தை" வகுப்பார் பரீட்சிக்கப்படுதலும் நிரூபித்தலும் நிறைவடைந்திருக்கும். "இப்போதே அநுக்கிரககாலம்" – இக்காலத்தில் தங்களைத் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக பலி செலுத்துபவர்கள், இயேசுவின் புண்ணியத்தில் வந்து அவரோடுகூட மரிப்பது, தேவனுக்குப் பிரியமான சுகந்தவாசனையான ஒரு பலியாக இருக்கிறது. ...**சுவிசேஷ யுக காலத்தில்** மட்டுமே மரணமானது... ஒரு பலியாக அங்கீகரிக்கப்பட்டு அதற்குரிய பலன் அளிக்கப்படும்." *(A212)* தமிழ்–*(A265)*

இதைத்தான், தேவன் இங்குப் பிரதிபலிக்க வேண்டுமென எண்ணியிருந்தார். எனினும், பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஒன்றும் மீதியாக வைக்காதபடிக்கு இஸ்ரயேலர் தங்களது திறன்களை சரியாக அளவிட முடிந்தது; அதனால், நிழல் உண்மையாக இருந்திருக்கக்கூடும், அதாவது, விடியற்காலமட்டும் அதிலே மீதியாய் இருக்கிற யாவும் அக்கினியால் சுட்டெரிக்கப்பட வேண்டும் – அழிக்கப்பட வேண்டும்; அதைப் புசிக்கப்படலாகாது.

ஆனால், சுவிசேஷ யுகம் முழுமையாக நிறைவடைந்து, ஆயிர வருட யுகம் துவங்கியிருக்கும்போது, மற்றொரு காட்சி ஏற்படும். நிஜமான இஸ்ரயேலான முழு உலக மனுக்குலமும், "அநுக்கிரக காலத்தில்" இருப்பார்கள் – அவர்களது இரட்சிப்பு நிறைவேறும் காலத்தில் இருப்பார்கள்; அதாவது, அவர்கள் கிறிஸ்து இயேசுவுடன் அடையாளம் காண்டுகொள்ளப்படுவதற்கான வாய்ப்பைப்பெறுவார்கள், (தற்போது சபை இருக்கும் அர்த்தத்தில் அல்ல), மாறாக அவருக்குள் கண்டடையப்படுவார்கள். (1 கொரி. 15:22, 23; *F698,* தமிழ் *F939*–ஐ பார்க்கவும்) உலக மனுக்குலமான – "இஸ்ரயேலரை" அடையாளப்படுத்தும் உலக மனுக்குலம் – "அவரது மாம்சத்தை" புசித்து தங்களுக்கு ஏற்புடையதாக்கிக்கொண்டு, "சிவந்த சமுத்திரமான" – இரண்டாம் மரணத்தைக் "கடந்திருப்பார்கள்"; ஆயிரவருட யுகத்தின் முடிவோடு, நிஜமான பார்வோனான, சாத்தானும் அவனது கூட்டாளிகளும் நித்தியத்திற்கும் அழிக்கப்படுவதற்கான காலமும் வரும்.

"ஒரு தேசமாக, அதன் பிரதிநிதிகளாக இருக்கிற ஆட்சியாளர்கள் மூலம் அவரை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவரை நிராகரித்தார்கள், அதன் மூலம் அவர்கள் தங்கள் சத்துருவின் பக்கம் இருப்பதை அவ்வேளையில் காண்பித்தார்கள். இருந்த போதிலும், தேவனுடைய கிருபையில் புது உடன்படிக்கையின் இரத்தம் யாக்கோபின் குடும்பத்தினருக்கு வல்லமை உள்ளதாக இருப்பதோடுகூட, தேவனோடு ஒருமனப்பட்டவர்களாய் இருக்க விரும்புகிற எல்லோர் மேலும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் புண்ணியத்தில் பங்குள்ளவர்களாய் இருந்தார்கள், இருந்தாலும் மெய்யான ஆட்டுக்குட்டியானவரில் புசிக்க மறுத்துவிட்டார்கள். அவர்கள் ஒரு ஜாதியினராக, முதற்பேறானவர்களாக இராஜரீக ஆசாரியர்களாக, பரிசுத்த ஜாதியாக, மேசியாவின் விசேஷ ஜனங்களாக ஆகும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார்கள்; அவர்கள் கடந்து போகின்ற தருணத்தையும், பரிபூரணமான மகிமையும், கனமும், அழியாமையும் உள்ள வாழ்வுக்குரிய புது சிருஷ்டியின் அங்கங்களாகும் தகுதியையும் இழந்துவிட்டார்கள். ஆனாலும் வேதத்தில் இன்னொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்ள மகிமையான வேறு ஒரு தருணம் அவர்களுக்கு உண்டு என்றும், அதை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய மாம்சத்தில், பலியில் புசிக்கவும் அவர்களுக்கு ஒரு மகிமையான தருணம் உண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்; இதன்படி பாவம், மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து முதற்பேறானவர்களின் உண்மையான சபையும் ஆவிக்குரிய இஸ்ரயேலருமாகிய ஆண்டவருடைய உண்மையான சகோதரர்களுக்குக்கீழாகவும், ஆண்டவருடைய தலைமைக்குக்கீழாகவும் இருந்து தப்புவார்கள் என்று வேதத்தில் வேறு பகுதியில் சொல்லப்பட்டுள்ளது என்று கேள்விப்படுவதில் நாம் சந்தோஷம் அடைகிறோம். (ரோமர் 11:11-20)" *(F461)* தமிழ்–*(F613-614)*

"...மாம்சீக இஸ்ரயேலர் தேவனுடைய எல்லா ஜனங்களையும் அடையாளப்படுத்தியது. அதாவது ஆயிர வருட யுகத்தின் இறுதிவரையிலும், அவருடைய ஜனங்களாக மாறுகின்றவர்களை அடையாளப்படுத்தியது... தெய்வீக உதவியில்லாமல் மனுக்குலமானது சக்தியற்றது... ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்திலும் நிஜமான மோசேயின்மேலும் இருக்கிறது. அவர் நிஜமான மோசேயின் மூலம் **ஏற்றகாலத்தில்**—தம்முடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற—சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களைக் கொண்டுவருவார்; சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனிடத்தில் இணக்கமாயிருக்கிறவர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு நிழலாக, பார்வோனும் அவனுடைய சேனைகளும் சொல்லர்த்தமான சிவந்த சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது நிழலாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் "இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" *(F458)* தமிழ் – *(F609)*

## ஏன் ஆட்டுக்குட்டியின் மாம்சம் மீதம் வைக்கப்படலாகாது!

அச்சமயத்தில் முதற்பேறானவர்களாக இருந்தவர்கள் மாத்திரமே, வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் இரத்த தெளிக்கப்பட்டிருந்ததினாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தலில் பங்குக்கொண்டதின் காரணத்தினாலும் கடந்து போகப்பட்டிருந்தார்கள்; நிஜமான "முதற்பேறானவர்கள்" பற்றி மிக அழகான ஒரு காட்சி நமக்குக் கிடைக்கின்றது; தெளிக்கப்பட்ட "இரத்தத்தின்" (எபி. 10:22) கீழாக வந்ததினாலும், பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தலில் அவர்கள் பங்குகொண்டதினாலும் (மாம்சமான கிறிஸ்து இயேசுவின் புண்ணியத்தினை தங்களுக்கே ஏற்புடையதாக்கிக்கொள்ளுதல் – யோவான் 6:53-56) சுவிசேஷ யுகத்தின் இந்த "இராத்திரியில்," முழு உலக மனுக்குலத்திற்கான "காலையில்" (ஆயிர வருட யுகத்தில்) நடக்கவிருக்கும் பொதுவான இரட்சிப்பிற்கு முன்பதாக அவர்கள் கடந்துபோகப்பட்டிருப்பார்கள். அதேபோலான "முதற்பேறானவர்களின்" கடந்துபோகப்படுதல் மீண்டுமாக இனி ஒருபோதும் நிகழாது. எனவே, நிழலின் அந்தப் பாகமானது, அங்கேயே நிறைவடைய வேண்டும். இந்தக் காரணத்தினால்தான் ஆட்டுக்குட்டியில் ஒன்றையும் விடியற்காலமட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலமட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதைப் புசிக்காமல், அக்கினியால் சுட்டெரிக்க வேண்டும் என்று அவர்களிடம் தேவன் கூறியிருந்தார்!

முதலாம் பஸ்காவின் நினைவாக, ஆட்டுக்குட்டியினைப் புசித்தலை உள்ளடக்கிய அடுத்தடுத்து வந்த அனைத்து பஸ்கா பண்டிகைகளிலும் முதற்பேறானவர்களை உள்ளடக்கியதாக இல்லை அல்லது உள்ளடக்கவும் முடியாது. சொல்லப்போனால், அவர்கள் மத்தியில் அத்தகைய "முதற்பேறனவர்கள்" இருக்கவில்லை. இவ்வாறாக முழு உலக மனுக்குலமும் ஆயிரவருட யுகத்தின்போது பஸ்கா ஆட்டுக்குட்டியினை புசித்திட அழைக்கப்படுவார்கள், ஆனால் "முதற்பேறனவர்கள்" கடந்து போகப்படட்டு காப்பாற்றப்படுதல் என்பது அங்கு நிகழாது, ஏனெனில், சுவிசேஷ யுகத்தின் "இராத்திரியிலே" நிகழ்ந்திட்ட "முதற்பேறானவர்களின்" "கடந்து போகப்படுதலின்" வாயிலாக அவர்களின் இரட்சிப்பானது, முன்கூட்டியே கூறப்பட்டது என்பதை அவர்கள் உணர்வார்கள்!

## யாத்திராகமம் 12:11

**"அதைப் புசிக்க வேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா."**

**"உங்கள் அரைகளில் கச்சைக் கட்டிக்கொண்டும்"** – இங்குள்ள "அரைகளில்" என்னும் பதமானது, யாக்கோபினுடைய கர்ப்பப்பிறப்பாயிருந்து வந்தவர்களைப்பற்றி பேசும் ஆதி. 46:26-ஆம் வசனத்தில் வரும் அதே எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது இல்லை;

அல்லது 'சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்' என்று எபேசியர்களுக்கு (6:14) அப்போஸ்தலர் பவுலால் அறிவுறுத்தப்பட்டக் கருத்துக்கும் எந்தவித நெருங்கிய தொடர்பும் இல்லை. இங்கு வரும், "அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும்" எனும் வாக்கியமானது, வனாந்தரத்தில் "மூன்று நாட்கள்" பிரயாணம்பண்ண ஆயத்தமாய் இருப்பதைக் குறிப்பதாக இருக்கிறது (யாத்திராகமம் 3:18; 5:3; 8:27). இந்தப் பதிவில், ஜனங்களுக்கு மிகவும் வசதியாயிருந்த நீண்ட, தளர்வான, தொங்குகின்றதுமான அங்கியானது, இப்போது கானான் நோக்கிய தீவிரமான அவர்களது முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக இருக்கும். (1 இராஜாக்கள் 18:46; லூக்கா 12:37; 17:8-ஐ பார்க்கவும்) அதற்கேற்ப, யேகோவா தேவனும், அவர்களது கால்களின் கீழ்ப்பகுதியானது சுலபமாக நடந்திட, அவர்களது இந்த அங்கியினை "ஒன்றாகத் தூக்கி," அவர்களது அரைக்கச்சையின் கீழாக அவற்றைக் கட்டிக்கொள்ளச் செய்தார். நிஜத்தில் – ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் இதே கருத்துதான்: நம்முடைய மாம்சத்துக்கு மிகவும் சௌகரியமாயிருக்கும் காரியங்கள், பரம கானான் என்னும் பரிசைப் பெறுவதற்காக ஓடும் நமது ஓட்டத்திற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் காரியங்களாகக்கூட இருக்கலாம். ஆகவே நாம், இங்கு அந்நியர்களும்,ப ரதேசிகளுமாகஇ ருக்கிறோம்எ ன்பதை நினைவில்கொள்ள வேண்டும்!

"...இந்தச் சுவிசேஷ யுகத்தின் இராத்திரியில் ஆட்டுக்குட்டியில் பங்குபெறுகிற முதற்பேறானவர்களும் விசுவாச மார்க்கத்தாரும் இந்த உலகத்தில் அந்நியரும், பரதேசிகளுமாய் இருப்பார்கள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. இவர்கள் பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தை உணர்ந்து, ஆண்டவரால் பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும் விடுதலைக்குள்ளாகவும், தேவ புத்திரரின் சுயாதீனத்திற்குள்ளாக வழி நடத்தப்படவும் வாஞ்சையுள்ளவர்களாக இருப்பார்கள்." *(F461)* தமிழ் – *(F612)*

**"உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும்"**[6] – இங்கு ஒரு கருத்து மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது, அது யாதெனில், ஜனங்கள் இயல்பாகவே, தங்களது வசதிக்காகவும், தங்களது அனுதின கடமைக்காக வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது தங்களது பாதரட்சைகளில், சேர்ந்திடும் தூசு மற்றும் அழுக்குகளால் தங்களது வீட்டின் தரைகள் அசுத்தமாவதைத்த டுக்கவும்,வீ ட்டிற்குள்ப ாதரட்சை அணிவதைத் தவிர்த்துள்ளனர் (வெறுங்கால்களுடன் இருந்துள்ளனர்). ஆனால் இப்பொழுதோ, குறிப்பிட்ட இத்தருணத்தில் அவர்கள், விரைவில் வெளியேற, அதுவும் மிகவும் அவசரமாக வெளியேற அழைக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால் தங்களது பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது! இதனால், மீண்டுமாக இங்கே ஆயத்த நிலை, அதாவது தயார் நிலை என்பது அறிவுறுத்தப்படுகிறது. தேவனுடைய நிஜமான இஸ்ரயேலராகிய நாம், இன்னும் நமது அடிமைத்தன

வீட்டில் இருக்கையில், முன்னரே எச்சரிக்கப்பட்டிருப்பவர்களாக, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாக இருக்க வேண்டும், இப்படியாக இப்போது நமது பயணத்தின் போக்கில் நாம் நடப்போமேயானால், அதின் கரடுமுரடானத் தன்மை நம்மைச் சோர்வுறவோ, களைப்புறவோ அல்லது, தேவையற்ற முறையில் காயப்படுத்தவோ மாட்டாது!

"...நீங்கள் விரைவில் கரடுமுரடான வழியில் சோர்ந்துபோகாதவாறு, சாந்தம், தயவு, பொறுமை, நீடியபொறுமை, அன்பு ஆகியவற்றைத் தொடுத்தவர்களாக இருக்க வேண்டும்." *(R36:5)*

**"உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும்"** – தடி என்பது ஒருவர் பிரயாணம் செய்கையில் ஆதரவிற்காக சாய்ந்துக்கொள்ளும் கைத்தடி அல்லது ஊன்றுகோல் போன்ற ஒரு பொருளாகும். அது இன்றைய காலத்தைவிடஅ வர்களதுக ாலத்தில்மி கவும்வ ழக்கமான ஒன்றாக இருந்துள்ளது. வழியில் நாம் ஏதேதோ காரணங்களின் நிமித்தம் சோர்வுக்குள்ளாகும்போது ஆதரவிற்காகவும் ஊக்கத்திற்காகவும் வேண்டி, நாம் சார்ந்திருக்கின்றதான, அதாவது முந்தைய காலங்களில் அவ்வப்போது நம்மால் மனப்பாடம்பண்ணப்பட்ட வேத வாக்கியங்கள் மீது நாம் சார்ந்து நிற்கின்ற காரியமே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இந்தத் தடி குறிக்கின்றதாய் இருக்கும். இவ்வாறாக இந்தத் "தடி," வழியில் நேரிடும் எதிர்பாராத மாற்றங்கள் அனைத்தையும் குறித்ததான ஓர் ஆயத்தநிலையைப் பற்றியும் சுட்டிக்காட்டுகிறது!

**"அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்"** – பஸ்காவினை முதற்பேறானவர்கள் தொர்புடையதாக நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இரத்தம் ஏற்கெனவே நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்பட்டிருந்ததையும்; "கடந்துபோகப்படும்" காலமான நடுராத்திரியையும், தொடர்ந்துவரும் அனைத்து இஸ்ரயேலர்களின் பொதுவான விடுதலையானது, தீவிரமாய் நெருங்கிக்கொண்டிருந்ததையும் மனதில் வைக்கவும். அங்கு ஆட்டுக்குட்டியினைப் புசிப்பது மாத்திரமே எஞ்சியிருந்தது, அதுவும் அதித் தீவிரத்தோடு செய்யபபடவேண்டியிருந்தது! நிஜமான ஆதலால், அதுவும் அதிகமான தீவிரத்தோடு செய்யப்பட வேண்டும்! நிஜமான "முதற்பேறானவர்களாக" நாம் ஏற்கெனவே "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட" (எபி. 10:22) இரத்தத்தின் கீழாக இருக்கிறோம்; இந்தச் சுவிசேஷ யுகத்தின் "நடுராத்திரிவேளையும்," ஆயிரவருட யுகத்தின் ஆரம்ப காலத்தில் நிகழும் மனுக்குலமனைத்தின் பொதுவான இரட்சிப்பும் தீவிரமாய் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, நமக்காக பலியாக்கப்பட்ட நமது பஸ்காவாகிய கிறிஸ்துவை (1 கொரி. 5:7) மிகவும் தீவிரமாகப் "புசித்து" (ஏற்புடையதாக்கிக்) கொண்டிருக்கிறோம், ஏனெனில் நமக்கு இன்னும் அதிக நேரம் இல்லை.

"...உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியென இயேசுவைப் பின்பற்றுகின்ற எல்லா உண்மையான விசுவாசிகளும் இனி செய்யக்கூடிய தகுதியான காரியம் அவர்களுடைய இருதயங்களின் நிலைக்கால்களில் அவருடைய இரத்தத்தைத் தெளிப்பதாகும்: "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்" (தற்போதைய ஆக்கினையிலிருந்து – அவருடைய இரத்தத்தினால், அவர்களுடைய பாவங்கள் கிருபையாய் மன்னிக்கப்பட்டது என்பதை உணர்ந்து, அவருடைய இரத்தத்தினால் அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுள்ளார்கள் என்பதை உணர்ந்து.) இவர்கள் இனிமேல் மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியத்தை, எல்லோருக்கும் தம்மை ஈடுபலியாகக் கொடுத்தவரில் புசிக்க வேண்டும் அல்லது அவர்களுடைய மீட்பரின் புண்ணியத்தைத் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டும். விசுவாசத்தினால் அந்தப் புண்ணியங்களில் பங்குபெற வேண்டும், மேலும் தங்களுடைய பாவங்கள் ஆண்டவர்மேல் சுமத்தப்பட்டன, அவர் அவர்களுக்காக மரித்தார், ஆகவே அவருடைய புண்ணியங்களும், நீதியும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அவர்கள் உணர வேண்டும்." *(F463)* தமிழ் – *(F615 - 616)*

**"அது கர்த்தருடைய பஸ்கா"** – எவ்வளவு அற்புதமானது! சற்றே சிந்தித்துப்பாருங்கள். நிழலான பஸ்காவோடு இவ்வாறாக தம்மையே யேகோவா தேவன் அடையாளங்கண்டுணர்ந்தார் என்பது உண்மையாக இருந்தால், நிஜமான "முதற்பேறானவர்களின்" கடந்துபோகப்படுதல் குறித்த விஷயத்தில் அது இன்னும் எவ்வளவு அதிக உண்மையுள்ளதாக இருக்கும், நிச்சயமாக, அது கர்த்தருடைய (யேகோவா தேவனின்) பஸ்கா தான்! மேலும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் "முதற்பேறானவர்கள்" உண்மையில் அவரது "சகல ஜனங்களிலும்" அவருக்குச் "சொந்த சம்பத்தானவர்கள்" (யாத்.19:5) – அதாவது அவருடைய "இராஜரிக ஆசாரியக்கூட்டமும்," "பரிசுத்த ஜாதியுமானவர்கள்" (1 பேதுரு 2:9). அதன் காரணமாக, "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான். 16:27) என்று இயேசு அவர்களிடம் கூறினதில் ஆச்சரியமேதுமுள்ளதா!

## பிரயாண யாத்திரை

"...நாமும்கூட இங்கே நமக்கு நிலையான நகரம் இல்லை என்றும், மாறாக அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், யாத்ரீகர்களாவும், பிரயாணத்திற்காக கையில் தடி பிடித்துக்கொண்டவர்களாய், அரைக்கட்டிக்கொண்டவர்களாய், நாம் பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட இணைந்து, தேவனுக்கு முன்பாக இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் ஆயத்தம்பண்ணி வைத்துள்ளதுமான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்கும் செல்லும் வழியில் இருக்கிறோம் என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும்." *(R5641:4)*

### "முதற்பேறானவர்களின்" தற்போதைய மனநிலை

இன்னும் இரத்தத்தின் கீழாக இருக்கின்றவர்களாக, "**...புசித்துக்கொண்டும், எதிர்பார்த்துக் காத்துக்கொண்டும்,** இருக்கிறோம்,ஆ னால்,வி டியற்காலம்இ ப்போதுமி கவும்அ ருகாமையில்உ ள்ளது...அ ப்போது கடந்துபோகப்பட்ட அனைவரும் எதிராளியாகிய நிஜமான பார்வோனின் வல்லமைக்கு அப்பால் முதலில் கடந்துபோகக்கூடியவர்களாக இருப்பார்கள்." *(R3996:3)*

## யாத்திராகமம் 12:12

**"அந்த இராத்திரியிலே நான் எகிப்துதேசமெங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன்கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர்."**

**"அந்த இராத்திரியிலே"** – நிஜத்தில், இராத்திரி என்பது, இந்தச் சுவிசேஷ யுகத்தைக் குறிக்கும். "...கடந்துபோகப்படுதலின் நிஜமான இராத்திரியான...இந்தச் சுவிசேஷ யுகத்தின் காலப்பகுதியைக் குறிக்கும்."*(R3996:5)*

**"எகிப்து தேசத்திலுள்ள... முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி"** – ஆவிக்குரிய இஸ்ரயேலின் நிஜமான "முதற்பேறானவர்கள்" கடந்துபோகப்படும் "இராத்திரியான" – இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு இந்தக் காட்சியை, நாம் வரையறுப்போமேயானால், பிறகு எகிப்தியரின் முதற்பேறானவர்கள் யாரைக் குறிக்கக்கூடும்?

சந்தேகத்திற்கிடமின்றி, இந்தச் சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய இஸ்ரயேலின் "முதற்பேறானவர்களும்," (சாராள் உடன்படிக்கையினுடைய) "ஸ்திரீயின் வித்தாக" – அதாவது, சாத்தான் மற்றும் சாத்தானின் வித்து ஏற்படுத்தும் பகைமையை அனுபவிக்கும் "வித்தாக" இருக்கின்றார்கள். (ஆதி. 3:15)

இந்த ஒப்புமையைத் தொடர்புப்படுத்திப் பார்க்கும்போது (அதை இன்னும் இந்தச் சுவிசேஷ யுகத்தோடு வரையறுக்கப்பட்டவாறு), இந்த யுகத்தின் பொய்யான மத அமைப்புகளுடன் அடையாளங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியஸ்தர்களே அநேகமாக சாத்தானின் "வித்தாக" காணப்படும்; இவர்கள் ஆதிமுதற்கொண்டு இன்றளவும் சத்தியத்திற்கும், அதின் ஜனங்களுக்கும் எதிர்த்து நிற்கின்றவர்களாய் இருக்கின்றனர். ஆம், ஏதோ வகைகளினால் அவர்கள் தேவனுடைய ஜனங்களைத் தங்களது அமைப்புகளுக்கு அடிமைகளாகவும், நுகத்திற்குக் கீழாகவும் வைத்திருந்தனர். ஆகவே, நாம் குறிப்பிடுவது என்னவெனில், போப்புகள், கார்டினல்கள், பாதிரியார்கள், ஆலோசனை சபையின் உறுப்பினர்கள், கிறிஸ்தவ மத குருமார்கள், போன்றவர்கள் அந்த "வித்தாக" ஏற்கெனவே இருந்தும், தற்போது இருந்துகொண்டும் இருக்கின்றனர்; இந்தச் சுவிசேஷ யுகம் முற்றிலும் முடியும் முன்பாக அழியவிருக்கும் இந்தப் போலியான மத அமைப்புகளோடு நிச்சயமாக இந்த வித்தும் நிறைவிற்கு வரும். ஆயிர வருட நாளான – புது நாளுக்குள் இவர்கள் கொண்டுச் செல்லப்படமாட்டார்கள். ஆதலால் யேகோவா தேவன் எகிப்தின் (உலகின்) முதற்பேறானவர்களை அதம்பண்ணுவார்.

ஆனபோதிலும், இக்காட்சி, இந்தச் சுவிசேஷ யுகத்தின் வரையறையையும் தாண்டி, ஆயிர வருட யுகத்துக்கும் நீட்டிக்கச் செய்யலாம். எவ்வாறெனில், சொல்லர்த்தமான சிவந்த சமுத்திரத்தில் பார்வோனும் அவனது சேனையும் அடைந்த மாபெரும் அழிவில் சித்தரிக்கப்பட்டது போல, சாத்தானும், அவனோடு அடையாளங் கண்டுணரப்பட்டவர்கள் அல்லது கூட்டாளிகள், இரண்டாம் மரணமாகிய – "அக்கினிக்கடலிலே" நித்தியத்திற்கும் அழிக்கப்படுவார்கள். (*F458-459,* தமிழ் – *(F609)*–ஐ பார்க்கவும்)

**"எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்"** – சுவிசேஷ யுகத்தின் இறுதியில், தங்களது "முதற்பேறானவர்களோடு கூடிய" போலியான மத அமைப்புகளின் அழிவானது, எகிப்து தேவர்களின்மேல் செலுத்தப்படும் நீதியான நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதாக இருக்கும், ஏனெனில் அது "நானே கர்த்தர்" என்றுரைப்பவரின் தீர்ப்பாகும். (சங்கீதம் 149:5-9)

**யாத்.4:22, 23: "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ரயேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனைச் செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்."**

## கிறிஸ்தவ மண்டலத்தின்மீது நீதியான சரிகட்டுதல்

> "...எனவே, மொத்தத்தில், ஒவ்வொரு தனிநபரின் அறிவு மற்றும் முறைகேடுகளின் அடிப்படையில் வெகுமதி மற்றும் தண்டனை மிகவும் நியாயமான மற்றும் நேர்மையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடானது, நீதியின் கொள்கையை அங்கீகரிக்கத் தவறியதற்காக கிறிஸ்தவ மண்டலத்தின் மீது நீதி சரிகட்டப்படும் காலமாகிய தற்போது சமீபித்திருக்கும் மகா உபத்திரவ காலம்குறித்துக் கூறும் வேதவசனங்களுக்குச் சரியாகப் பொருந்தி வருகிறது. ஒழுங்கின்மையின் காலப்பகுதியில் நிகழும் உலக அமைப்புகளின் சரிவானது, பொன்னான பிரமாணத்தைப் புறக்கணித்ததற்கான தண்டனையாக இருக்கும்."*(R3995:5)*

## நிஜமான "பார்வோனின்" இறுதி அழிவு

"ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்திலும் நிஜமான மோசேயின்மேலும் இருக்கிறது. அவர் நிஜமான மோசேயின் மூலம் **ஏற்றகாலத்தில்**—தம்முடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற—சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களைக் கொண்டுவருவார்; சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனிடத்தில் இணக்கமாயிருக்கிறவர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு நிழலாக, பார்வோனும் அவனுடைய சேனைகளும் சொல்லர்த்தமான சிவந்த சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது நிழலாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் "இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" *(F459)* தமிழ் – *(F609)*

"எதிராளியானவன் ஒரு குயவனாகப் பொறுப்பேற்று, மனிதபோக்கிற்கும், இலட்சியங்களுக்கும் ஒத்துழைப்புக்கொடுத்து, சில பிரம்மாண்டமான பாத்திரங்களை உருவாக்கியுள்ளான். இவர்கள் பாபிலோனில், சபைகளில், போப்புகள், கார்டினல்கள், பேரரயர்கள், இராஜாக்கள், இளவரசர்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் பல உயரிய பதவிகளின் இடங்களில் காணப்படுகின்றனர். ...வல்லமையானது மாபெரும் இரட்சகரின் கரங்களினால் செயல்படுத்தப்படும், அவ்வல்லமையானது, இப்போதிருக்கும் மகா பெரியதும், மகா அற்புதமுமாகத் தோன்றும் நிறுவனங்களான எதிராளியாகிய குயவனின் பாத்திரங்களை முற்றிலும் பொடிப்பொடியாக உடைக்கும். அவைகள் தூள்தூளாக உடைந்துபோகும்."*(SM 716, 717)*

## முதற்பேறானவர்களின் பாவங்கள் – கடந்துபோகப்படுதல்

"விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தின் மூலமாக முதற்பேறானவர்களின் பாவங்கள் கடந்துபோகப்படுதலைக் குறித்ததான எண்ணங்களுடன், சோதனைகளும் கஷ்டங்களும் இருந்தாலும், நாம் பஸ்கா பண்டிகையை உண்மையில் சந்தோஷமாக ஆசரிக்கக் கூடும்."*(R5643:1)*

## யாத்திராகமம் 12:13

**"நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்."**

**"அந்த இரத்தம்... (ஓர்) அடையாளமாய் இருக்கும்"** – ஏறக்குறைய ஆதிமுதற்கொண்டே, தேவன் இரத்தத்தின்மீது தாம் வைத்திருந்த மதிப்பினைக் காண்பித்தார். ஆதாமும் ஏவாளும் பாவஞ்செய்த சிறிது நேரத்திலேயே, தங்களது நிர்வாணத்தை (அவர்களது பரிசுத்தமான ஆதி நிலையில் அவர்களைக் கலக்கமடையச் செய்யாதிருந்த நிர்வாணத்தை) மறைப்பதற்காக, அவர்கள் "இலைகளினால்" ஆன அரைக்கச்சைகளைத் தங்களுக்காக உண்டாக்கிக்கொண்டனர்; அந்தக் "கச்சைகளும்" இவர்களுக்கு வேண்டிய நிவாரணத்தைத் தரவில்லை, அவர்கள் அதை அணிந்திருந்தபோதிலும், அவர்கள் தேவனுடைய கண்களிலிருந்து தங்களை மறைந்துக்கொள்ள வேண்டிய அவசியத்தினை உணர்ந்தனர் (ஆதி. 3:10). அவர்களுடைய சொந்த பெருமுயற்சிகள் முற்றிலும் பயனற்றவை என்பதைக் கர்த்தர் அவர்களுக்குக் காண்பித்திட நினைத்தார்; மேலும், அவர் "தோல் உடைகளை" உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் என்று பதிவுகள் கூறுகின்றன (ஆதி. 3:21). இது, நிச்சயமாக, ஒரு விலங்கு அடிக்கப்படுதலைக் – அதாவது குற்றமில்லாத இரத்தம்

சிந்தப்படுதலை முன் வைக்கிறது! உண்மையில், இந்தக் காரியம் மிகவும் தெளிவாகக் கற்பிப்பதுபோல், இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு (மூடுதல்) உண்டாகாது என்ற உபதேசத்தைப் பார்க்கிலும் வேதாகமத்தில் மிக முக்கியமான உபதேசம் வேறொன்றும் இல்லை (எபி. 9:22).

தோல் உடைகளை அமைத்துக்கொடுப்பதற்காக, கர்த்தரால் கொலையுண்டிருந்த விலங்கு இன்னது என்பது ஆதியாகமப் பதிவில் கூறப்படவில்லை, நாம் எழுதப்பட்டதைவிடவும் ஞானமாக எண்ணிவிடலாகாது; எனினும், அது ஓர் ஆட்டுக்குட்டியாக இருந்திருக்கும் என்று ஆலோசிக்க அதிக வாய்ப்புள்ளதாக நாம் விசுவாசிக்கிறோம்! வெளிப்படுத்தல் 13:8-ஆம் வசனத்தில், "உலகத்தோற்றமுதல்" அடிக்கப்பட்ட அந்த ஆட்டுக்குட்டியைப்பற்றின குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் தமது முன்னறிவில், இரத்தம் சிந்துதலின் மூலமாக மனிதனுடைய மீட்பராகும்படி ஒருவரை (அந்தத் தேவ ஆட்டுக்குட்டியை) நியமித்திருந்தார் எனும் உட்குறிப்பானது புலப்படுகிறது.

இயேசு, தமது முதலாம் வருகையில் யோர்தான் நதிக்கரையில் வெளிப்பட்டபோது, யோவான்ஸ்நானன் தனது சீஷர்களிடத்தில், "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று அடையாளங்காட்டினார். (யோவா. 1:29, 36) இப்படியாக, ஆதாமுக்குள் தங்கள் ஜீவனை இழந்த அனைவருக்காவும், மீட்கும்பொருளான அவர் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவே வந்தார் (மத்தேயு 20:28; மாற்கு 10:45–ஆம்வ சனங்களைக்க ாண்க). நிச்சயமாகவே, ஈடுபலியின் அல்லது பாவ நிவாரணத்தின் புண்ணியமானது, தமது இரத்தத்தைச் சிந்தி, ஜீவனைக் கொடுத்து, மனுக்குலத்தை மீட்க வந்தவரின் பலியில்தான், முழுவதும் அடங்கி உள்ளது என்னும் கூற்றினை இது நிலைநாட்டுகிறது. (1 தீமோ. 2:6)

இஸ்ரயேலின் மீட்பிலும், அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதலிலும் இப்படியாகவே இருந்தது. இது பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிககப்பட்டதினால் உறுதிசெய்யப்பட்டது (யாத்திராகமம் 12:7, 13) முதற்பேறானவர்கள் மாத்திரமே இராக்காலத்தில் மரண ஆபத்தில் இருக்கையில், சங்காரத்தூதனின் கையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டது, மறுநாள் காலையில் இஸ்ரயேலர் அனைவருக்கும் கிடைக்கப்பெற்ற பொதுவான விடுதலையின் முன்னோடியாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (F457, தமிழ் – *(F607-608)* காண்க) வாசல் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தமே இஸ்ரயேலர் அனைவருக்கும் இரட்சிப்பின் வழிமுறையாக மாறியது. சந்தேகத்திற்கிடமின்றி, சுவிசேஷ யுக சபை ("முதற்பேறானவர்கள்") மாத்திரம் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்படாமல், முழு உலக மனுக்குலமும் – அதாவது தேவனுடைய இஸ்ரயேலராக மாறும் அனைவருமே – அதன் மூலம் மீட்கப்படுவார்கள் என்பதைக் காண்பிப்பதே இதன் நோக்கமாயிருக்கிறது!

"சுவிசேஷ யுக சபை வேத வசனத்தின் அடிப்படையில் 'முதற்பேறானவர்களின் சபை' என்று மாத்திரம் குறிப்பிடப்படாமல், தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள் என்றும் குறிப்பிடப்படுகிறார்கள் (எபிரெயர் 12:23; யாக்கோபு 1:18). இந்த இரண்டு கருத்துக்களும் முழு இசைவாய் உள்ளன; முதற்பிறப்புகள் என்று சொல்லும்போது பிற்பிறப்பினர்கள் என்றவர்கள் இருக்கின்றார்கள் என்று சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. அதேபோல, முதற்பலன்கள் என்று சொல்லப்படுகையில் பிற்பலன்கள் என்ற ஒன்றும் இருப்பது சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. ஆகவே இந்தச் சுவிசேஷ யுகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து அவருடைய திட்டம் மிகவும் கிருபையான தொடக்கத்தைக்கொண்டிருந்தாலும், இவற்றோடு அவருடைய தயவு முடிவடையாது என்னும் கருத்திற்கு கர்த்தர் நம் கவனத்தை ஈர்க்கிறார்." *(R3995:6)*

## இயேசு – தேவ ஆட்டுக்குட்டி

"தேவனுடைய ஆட்டுக்குட்டியென" இயேசுவை நாம் பார்க்கும்போது, அவர் கறைதிரையற்றவர் "பரிசுத்தர், குற்றமற்றவர், மாசில்லாதவர், பாவிகளுக்கு விலகினவர் என்று அறிந்துகொள்கின்றோம். அவர் எப்படி, 'ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்' என்றும், எப்படி 'மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்' என்றும், நாம் அறிந்துகொள்கின்றோம். (அப்போஸ்தலர் 8:32)

> "தம்மை அழிக்க நோக்கம் கொண்டிருப்பவர்களை இயேசு தமது பேச்சினாலேயே எதிர்த்திருக்க முடியும். எந்த மனுஷனும் அவரிடத்திலிருந்து அவருடைய ஜீவனை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அவர்தாமே விரும்பி முன்வந்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்றும் உள்ள காரியங்களை நமக்கு உறுதிபடுத்திக் காட்டியுள்ளார். இயேசு, பிதாவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கெனத் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லை. ஏனெனில் நீதியானது, பலிசெலுத்த வேண்டுமென்று கேட்கவில்லை. மாறாக இயேசு, பிதாவின் சித்தத்திற்கு இசைவாக, "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்று கூறி தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார் (சங். 40:8). இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தமது பலியின் புண்ணியம் முதலாவது, தமது பின்னடியார்களுக்கான நன்மைக்காகவும், பின்னர் சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பதற்காகவும் உதவும் என்பது தெய்வீகத் திட்டமாக இருப்பதை முன்னறிந்திருந்த நிலையில் நமது மீட்பர் தம்மை தப்புவித்துக்கொள்ளாமல், தம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்ததினிமித்தம் கிறிஸ்தவ விசுவாசி அதிகமாய்க் களிகூரக்கடவன்..." *(R4591:2)*
>
> "யோவான்ஸ்நானன் இயேசுவைக்குறித்து, 'இதோ தேவ ஆட்டுக்குட்டி' என்று அறிக்கையிட்டபின்பு, அவரது சீஷரில் இருவர் இயேசுவை தேடிச்சென்று, அவர் தங்கியிருக்கும் இடத்தை விசாரித்து, பின்னர் அவருக்குச் சீஷர்களாக மாறினார்கள் என்று வேதவசனங்களில் நாம் வாசிக்கிறோம். யோவான் ஒரு சீர்திருத்தவாதி என்பதால் அவர்கள் அவருடன் இருந்தார்கள். ஆனால், தன்னிலும் மேன்மையுள்ளவர் ஒருவர் இருக்கிறார், அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் தான் பாத்திரனல்ல என்று யோவான் அவர்கள் நடுவிலே அறிக்கையிட்டபோது, இந்த மேன்மையுள்ளவர் யார் என்று அவர்கள் வியந்தனர்."
>
> "எனவே அவர்கள் தேடிக்கொண்டே இருந்தனர். பிறகு அவர்கள் இந்தப் சாந்தமானவர், தங்களால் அங்கீகரிக்கப்படாதவர் மற்றும் தங்களை எதிர்த்துப் போராடாதவர் ஜனங்களுடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வேண்டுமென்று ஏதோ ஒரு வகையில் அவ்வார்த்தையைப் புரிந்துகொள்ளத் தொடங்கினர். அதற்கு யோவானின் வார்த்தை மாத்திரமே இருந்தது, ஆனால் அவர்கள் அவரை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று நம்பினார்கள்; மேலும் இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்றும், அவர் யோவானை விட பெரியவர் என்றும் அறிவிக்கப்பட்டவுடனேயே, அவர்கள் யோவானை விட்டு, இயேசுவின் சீஷர்களானார்கள். மற்றவர்கள் இந்த விஷயங்களை அவ்வளவாக அங்கீகரியாமல் யோவானுடன் இருந்தனர், ஒருவேளை யோவான் மரித்த பிறகு இயேசுவின் சீஷர்களாக மாறியிருக்கலாம்."

"இது அவ்வருடத்தின் பஸ்கா காலத்தில், ஆட்டுக்குட்டியை அடிக்கும் சமயத்தில் கூறப்பட்டிருந்திருக்குமானால், யோவானுடைய வார்த்தைகளைப் பஸ்கா ஆட்டுக்குட்டிப் பற்றின ஒரு மறை குறிப்பாகக் கருதியிருக்கலாம், ஆனால் அது வருஷத்தின் நேர் எதிர் முனையில் நடந்ததாகும் – அதாவது நமது ஆண்டவர் பிறந்த மாதமான அக்டோபரில் நடந்ததாகும். நமதாண்டவரின் ஊழியம் மூன்றரை வருடங்கள் நீடித்தது என்பதற்கும், அவர் பஸ்கா சமயத்தில் சிலுவையில் அறையப்பட்டார் என்பதற்கும், மேலும் அவர் முப்பது வயதுடையவர் ஆனபோதோ யோர்தானில் தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்பதற்கும் சான்றுகள் தெளிவாக உள்ளன." *(R4750:6)*

## யாத்திராகமம் 12:14

**"அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்."**

**"அந்த நாள்"** – இது நீசான் 14-ஆம் நாளைக்குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம், அந்நாளில்தானே, நடுராத்திரியில், சங்காரத்தூதன் எகிப்து தேசமெங்கும் கடந்துசென்று பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின்கீழ் இல்லாத அனைத்து முதற்பேறானவர்களையும் அழித்தார்; மேலும், அந்தச் சம்பவத்தை ஒட்டி, நீசான் 15-ஆம் நாளன்று இஸ்ரயேல் "சேனைகளின்" விடுதலை சாத்தியமாயிற்று. (யாத். 12:17, 29-33; எண். 33:3–ஐ காண்க)

நீசான் 15-ஆம் நாள், ஆயிர வருட நாளைச் சரியாக அடையாளப்படுத்துகிறது, அங்கு நிஜத்தில் ‘இஸ்ரயேலரை’ அடையாளப்படுத்தும் உலக மனுக்குலம், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவர். ஆகவே, இந்த நிஜமான "இஸ்ரயேலர்களால்" நினைவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய நாள் "நீசான் 14-ஆம் நாள்" ஆகும் – அதாவது அவர்களது (உலகத்தின்) இரட்சிப்புக்கு முன்னோடியாக, "முதற்பேறானவர்கள்" கடந்துபோகப்பட்ட இந்தச் சுவிசேஷ யுகம் ஆகும். (காண்க *F457,* தமிழ் – *(F608)*)

**"நித்திய (நியமமான)... பண்டிகை"** – இந்தச் சுவிசேஷ யுகத்தின் இஸ்ரயேலர் மற்றும் ஆயிர வருட யுகத்தின் இஸ்ரயேலர் அனைவரும், தங்கள் வீடுகளிலிருந்து புளிப்பை அகற்றினவர்களாக, என்றென்றும் சத்தியம் எனும் "புளிப்பில்லாத அப்பத்தால்" போஷிக்கப்படுவார்கள்!

## நீசான் மாதம் 14–ஆம் தேதி [7]

"கிறிஸ்தவர்களாகிய நாமோ, பஸ்கா வாரத்தினை ஆசரிப்பதில்லை. பஸ்கா வாரத்திற்கான நிஜமானது, இராஜ்யத்தின் மகிமை எதிர்காலத்தில் அனுபவிக்கப்படும்போது நிறைவேறுகின்றதாய் இருக்கும். யூதர்கள் அவ்வளவுக்குக் கவனம் செலுத்தாத அல்லது கவனமே செலுத்தாத நீசான் 14–ஆம் தேதியையே நாம் ஆசரிக்கின்றோம்." *(R2115:5)*

## யாத்திராகமம் 12:15

**"புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்க வேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரயேலரிலிருந்து அறுப்புண்டு போவான்."**

இந்தக் கட்டத்தில், எகிப்திலிருந்த யூதர்களால் அனுசரிக்கப்பட்ட முதல் பஸ்காவிற்கும், நித்திய பஸ்கா என்று அழைக்கப்பட்டு யூதர்களால் பின்னர் கொண்டாடப்பட்டு வந்த பஸ்காவிற்கும் வித்தியாசம் இருந்தது என்பதைக் கவனத்தில்கொள்வது நல்லது.

தங்கள் வீடுகளில் (தங்களது குடியிருப்புகளில்) புளிப்பு இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டிய ஏழு (7) நாள் பண்டிகையைக்குறித்து இங்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், அசல் பஸ்காவிற்குப் பொருந்தவில்லை, பொருத்தவும் முடியவில்லை, ஏனெனில் நீசான் 15 முதல் 21 வரையுள்ள நாட்களை

அந்தப் பஸ்கா வருடமும், பிறகு கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள்வரை (அவர்கள் கானானுக்குள் நுழைந்தபோது), அவர்கள் ஒரு நாடோடியாக, குடியிருக்க எந்த வீடுகளும் இல்லாமல் பயணிக்கும் ஜனங்களாக இருந்தனர்!

இஸ்ரயேலர் எகிப்திலிருந்து வெளியேறிய பிறகு, கானானுக்குள் நுழைவதற்கு முன்பதாக (நமக்குத் தெரிந்தவரை) ஒரே ஒரு பஸ்காவையே கொண்டாடினார்கள். இது, அவர்கள் எகிப்திலிருந்து வெளியேரிய இரண்டாம் வருஷம் முதல் மாதத்தில் சீனாய் வனாந்தரத்தில் இருந்தபோது (எண். 9:1-15) நிகழ்ந்தது, ஆனால், ஒரு வாரமளவும் கொண்டாடப்பட வேண்டிய புளிப்பில்லா அப்பப்பண்டிகையைக் குறித்து ஒரு வார்த்தைக்கூட எங்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்!

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் அனுசரிக்கப்பட்ட முதல் பஸ்கா, அவர்கள் கில்காலில் பாளயமிறங்கியிருந்தபோது (யோசுவா 5:10), ஆனால் இன்னமும் நிரந்தரமாக குடியமர்த்தபடாதிருந்தபோது அனுசரிக்கப்பட்டது. (இங்கும்) நீசான் 14 மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், அவர்களது அனுசரிப்புகளானது நீசான் 14–ஆம் தேதியை மாத்திரமல்ல, நீசான் 15 முதல் 21–ஆம் தேதிவரை கொண்டாடப்படும் புளிப்பில்லா அப்பப் பண்டிகையையும் உள்ளடக்கியிருந்தது. ஆகவே, உண்மையில் அவர்கள் புளிப்பில்லா அப்பத்தை எட்டு (8) நாளளவும் புசிக்கவேண்டியிருந்தது. (யாத். 12:17-20, 25; **ஆண்டிக்யூட்டீஸ்** *2:15:1* - **ஜோசஃபஸ் மற்றும் கோயில்,** *177:1* – **எடர்ஷைம்** – இவைகளையும் காண்க)

அநேகமாக, நீசான் 14–ஆம் தேதி இராத்திரியிலே முதற்பேறானவர்கள் கடந்துப்போகப்பட்டதை உள்ளடக்கிய முதலாம் பஸ்காவின் அர்த்தமானது, நிஜத்தில் "முதற்பேறானவர்கள்" கடந்து போகப்படும் சுவிசேஷ யுகத்துடன் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறது.

அதன் பிறகு, கானானில், இஸ்ரயேலர் அனைவரையும் (சபையாகிய "முதற்பேறானவர்கள்" தவிர – முழு உலக மனுக்குலத்திற்கு நிழலானவர்களை) உள்ளடக்கினதாக ஆசரிக்கப்பட்ட பஸ்காவின் நினைவுகூருதலான பண்டிகைகள், மிகக் குறிப்பாக – நீசான் 15 முதல் 21-ஆம் தேதிவரை – ஒரு வார புளிப்பில்லா அப்பப் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டது – இது நிச்சயமாக ஆயிரவருட யுகத்தோடு – அதாவது, பொதுவான இரட்சிப்பிற்கு பின்னர் உள்ள காலத்தோடு அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றன. *(R4492:6)*

**"புளிப்பில்லா அப்பத்தை... புசிக்கக்கடவீர்கள்"** – ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, நீசான் 14-ஆம் தேதி, முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்ட நாள் மட்டுமல்லாது, அது புளிப்பில்லா அப்பம் புசிக்கும் நாளகவும் இருந்தது; அடுத்தடுத்து வந்த நினைவுகூருதலின் ஆசரிப்புகளில், இஸ்ரயேலர் அதைக் கருத்தில்கொள்ள வேண்டியதாக இருந்தது. (யாத். 12:18) ஆயினும், யேகோவா தேவன்தாமே, நீசான் 14-ஆம் தேதிக்கும் – தொடர்ந்து வந்த நீசான் 15-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதிவரையுள்ள – புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் வாரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காட்டினார் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். (யாத்திராகமம் 12:18, 19 ஒப்பிடுக)

இதன் முக்கியத்துவம் என்னவென்றால், இந்தச் சுவிசேஷ யுகத்தின் "முதற்பேறானவர்களாகிய" நாம், இப்போதும்கூட, கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படும்படியாக, சத்தியம்ள னும்பு ளிப்பில்லாஅ ப்பத்தை, "மனித கோட்பாடுகள், கருகல், இலட்சியங்கள், சுயநலம்

போன்ற கெடுதிகள் (புளிப்பு) ஏதுமில்லாமல்" *(F464),* தமிழ் – *(F614)* அதற்கே உரிய துய்மையுடன் புசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

இஸ்ரயேலரால் அநுசரிக்கப்பட்ட தொடர்ச்சியான ஏழு நாள் பண்டிகையானது, ஆயிரம் வருஷ யுகத்தின்போது (நிஜமான இஸ்ரயேலாக) உலகமும்கூட "புளிப்பை" நீக்கிப்போடுவதற்கு மாத்திரமல்லாமல், சத்தியம் எனும் புளிப்பில்லாத அப்பத்தால் போஷிக்கப்படவும் அழைக்கப்படுவார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் கிறிஸ்துவுக்குள் (அவருடனான உறவுக்குள்) வந்து, இப்படியாக உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி. 15:22, 23)

## முதற்பேறானவர்கள் மற்றும் பொதுவான இரட்சிப்பு

"...ஆண்டுதோறும் வசந்த காலத்தில் யூதர்களால் அனுசரிக்கப்பட்ட பஸ்கா, தெய்வீகக் கட்டளையால் எகிப்தின் முதற்பேறானவர்கள் அனைவரும் கொல்லப்பட்ட சமயத்தில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்பட்டதை அல்லது காப்பாற்றப்பட்டதை நினைவுகூரச்செய்தது. இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்தும் அந்த ஆட்டுக்குட்டியின் மரணமானது, அனைத்து ஜனங்களுக்குமானது அல்லாமல், மாறாக 'அந்த இராத்திரியிலே' கடந்து போகப்படும் முதற்பேறானவர்களுக்காக மாத்திரம்தான். 'முதற்பேறானவர்களின் சபை' வேதாகமத்தில் 'விசுவாச வீட்டார்' என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் அந்த இராத்திரியானது, தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கும் நீதியின் சூரியன் ஆனது உதித்து, ஆயிர வருட நாளினைக் கொண்டு வருவதற்கு முன்புவரை காரிருளானது பூமியை மூடி, தொடர்ந்து சூழ்ந்துகொண்டிருக்கும் நிலையிலுள்ள, **இந்தச் சுவிசேஷ யுகத்தினை அடையாளப்படுத்துகிறது.** பிறகு உலகம் என்னும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் பொதுவான இரட்சிப்பு கிடைக்கும். மற்ற வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், ஆயிர வருடத்தின் விடியல் உதயமாகும்போது, கடந்துபோன சபை மாத்திரம் காப்பாற்றப்பட்டு அல்லது கடந்துபோகப்பட்டு அல்லது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் பலனினால் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருப்பர். இருப்பினும், ஜனங்களின் பொதுவான இரட்சிப்பு ஏற்படுத்தப்பட்டது, எனவே ஆயிர வருட யுகத்தின்போது அதை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இரட்சிப்பு வரும். இப்போது சபை மாத்திரமே கடந்து போய்க்கொண்டிருக்கின்றனர். கூடிய விரைவில் உலகத்திற்கான பொதுவான இரட்சிப்பும் முறைமைப்படுத்தப்படும். தேவனுடைய முறைமையில் அந்த இரட்சிப்பானது முதலில் முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் இல்லாமல் நிறைவேற முடியாது..." *(R4492:6)*

## யாத்திராகமம் 12:16

**"முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதலும் இருக்கவேண்டும்; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது; அவரவர் சாப்பிடுவதற்குத் தேவையானதுமாத்திரம் உங்களால் செய்யப்படலாம்."**

**"முதலாம் நாளில் பரிசுத்த சபைகூடுதலும்"** – வெளிப்படையாக, நீசான் 14-ஆம் தேதி, புளிப்பில்லாத அப்பம் (புசிக்கக்கூடிய) முதலாம் நாள் ஆகும் (லேவியராகமம் 23:4, 5) – இது ஒரு **"பரிசுத்த சபைகூடுதலின்"** நாளாகும். சொல்லவேண்டுமென்றால், சபைகூடுதல் என்பது ஒன்றாகக் கூடிவருவதாகும், ஆக **"பரிசுத்த சபைகூடுதல்"** என்பது, தங்களது இரட்சிப்பின் தேவனாகிய யேகோவா தேவனை கனப்படுத்தும் நோக்கத்திற்காக ஒன்றாகக் கூடிவருவதாகும் –

(எடுத்துக்காட்டாக) "ஓய்வு நாளை" பார்ப்போமேயானால், அந்நாளில் அனைத்து வேலைகளிலிருந்தும் ஓய்ந்திருக்க வேண்டும். மேலும், அதில் செய்யவேண்டிய ஒரே வேலை புளிப்பில்லா அப்பத்தைபு சிப்பதே (விருந்துஉ ண்பதே) ஆகும். (யாத். 12:16)

அதுபோலவே, இந்தச் சுவிசேஷ யுகமானது (14-ஆம் நாள்) "பரிசுத்த சபைகூடுதலின்" நாளாகும் – தங்களது இரட்சிப்பின் (கடந்துபோகப்படுதல்) தேவனாகிய யேகோவா தேவனைக் கனப்படுத்தும் நோக்கத்திற்காகப் பரிசுத்தவான்கள் ஒன்றாகக் கூடிவருவதாகும். இது, உண்மையான ஓய்வு நாளில் யூதர்கள் தங்கள் சொந்த அலுவல்களிலிருந்து ஓய்ந்திருந்ததுபோல, கிறிஸ்து இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பில் முழுமையாக இளைப்பாறுவதாகும்; மேலும் அந்நாளில் "அவர்கள் சத்தியம் எனும் புளிப்பில்லா அப்பத்தை" விருந்தாகப் புசிப்பதாகும்!

**"ஏழாம் நாளிலும்..."** ஆயிர வருட யுகமாகிய – மகா நாளான "ஏழாம் நாள்" - நிஜத்தில் இஸ்ரயேலராகிய – உலக மனுக்குலத்திற்கான "**பரிசுத்த சபைகூடுதலின்**" நாளாக இருக்கும். "அந்த நாளில்" அவர்களும் தங்கள் இரட்சிப்பின் தேவனாகிய யேகோவா தேவனை கனப்படுத்தவும், சத்தியம் எனும் புளிப்பில்லா அப்பத்தால் போஷிக்கப்படுகையில், நிறைவேற்றப்பட்ட மீட்பில் "இளைப்பாறவும்" அழைக்கப்படுவார்கள்!

பாவத்தில் தொலைந்துபோன உலக மனுக்குலத்தினுடைய மீட்பு குறித்து தாம் கொண்டிருந்த நோக்கத்தினை ஒரு நிழலின் வழியாக இஸ்ரயேலரைக்கொண்டு பிரதிபலிக்கவே, இந்த முழு பஸ்கா சடங்கும் யேகோவா தேவனால் நிறுவப்பட்டது. "யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டம்" என்று அழைக்கப்படும் தேவனுடைய நோக்கமானது எல்லாரையும் மீட்பவராகிய **கிறிஸ்து** (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) **இயேசு** (இரட்சகர்) (மத்.1:21) எனும் நாமமுடைய ஒருவரில் மையங்கொண்டிருக்க வேண்டும் என்பதாக இருந்தது; (மத். 20:28; 1 தீமோ. 2:6). ஆராயப்பட்டுவரும் இந்த நிழலில், இவர் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடையாளப்படுத்தப்படுகிறார்; ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசலின் நிலைக்கால்களிலும் அதன் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்ட காரியமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் "முதற்பேறானவர்களின் சபையை" அடையாளப்படுத்தும் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் கடந்துபோகப்படுதலை சாத்தியமாக்கிற்று; மேலும் அதைத் தொடர்ந்து ஆயிர வருட யுகத்தில் முழு உலக மனுக்குலத்தை அடையாளப்படுத்தும் இஸ்ரயேலின் பொதுவான விடுதலையையும் சாத்தியமாக்கிற்று.

நிழலில், முதலாம் மாதமான நீசான் 10–ஆம் தேதி அன்று அந்த நோக்கத்திற்காகவே பஸ்கா ஆட்டுக்குட்டியை தெரிந்துகொள்வது (பெற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்வது) அவசியமாக இருந்தது (யாத். 12:3). இந்த நிழலானது நிறைவேறித்தீரும் காலம் வந்தபோது, ஜனங்கள் ஏற்றுக்கொள்வதற்காக தேவ ஆட்டுக்குட்டியான இயேசு (யோவான் 1:29, 36), தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டார். இந்தக் காலத்தைக்குறித்து தீர்க்கதரிசனமாக சகரியா இஸ்ரயேலருக்கு உரைக்கையில், "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் [நீதிமான்; மற்றும் நீதிமானாயிருப்பதினால்] இரட்சிக்கிறவரும் [உங்களுடைய மீட்பிற்காகவும், முழு உலக மனுக்குலத்தின் மீட்பிற்காகவும் – எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுக்க முடிந்தது] (மத். 20:28; 1 தீமோ. 2:6) தாழ்மையுள்ளவரும் [அதாவது, சாந்தகுணத்திலும் தாழ்மையிலும், அதின் பிரதிபலிப்பாக அவர்], கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்." என்றார். (சகரியா 9:9)

இதற்கான பஸ்கா காலம் நெருங்கி வருவதை அறிந்த இயேசு, எருசலேமை நோக்கி தமது பயணத்தை மேற்கொண்டார்; மேலும் அவர் ஒலிவ மலைக்குச் சமீபித்தபோது இஸ்ரயேலுக்குத் தம்மை அதின் இராஜாவாக அறிமுகப்படுத்தும்படியாக அவருக்கென்று கழுதைக் குட்டியைப் பெறுவதற்காகவும் அதின்மேல் பவனி வருவதற்காகவும் தம்முடைய சீஷரில் இரண்டு பேரை அருகே உள்ள கிராமத்திற்கு அனுப்பினார்.

இது தொடர்பாக, லுக்காவின் பதிவில் இது "மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத" ஒரு கழுதைக்குட்டி (லூக்கா 19:30) என்பதை கவனிப்பதற்கு சுவாரஸ்யமாக உள்ளது. என்னைப் பொருத்தவரை, இந்தக்கூற்று மிகவும் முக்கியமானது! அத்தகைய விலங்குக்கு, யாராவது அதன் மீது பயணம் செய்வதற்கு முன்பு ஓர் "இடைவெளிக்" காலம் தேவைப்படும். அதன் மீது பயணம் செய்வதையும், மேலும் அதன் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தப்படுவதையும் அது இயற்கையாகவே எதிர்க்கும். ஒரு கழுதை என்பது ஓர் அசுத்தமான விலங்கு என்பதை நினைவில் வைத்துக்கொண்டாலும், அது மீட்கப்படக்கூடிய ஒன்று (யாத். 13:13; 34:20; எண். 18:15) – இது சுவிசேஷ யுகத்தின் முடிவில் தோன்றுகின்ற முழு உலக மனுக்குலத்தையும் அடையாளப்படுத்தும் – துன்மார்க்கமான, ஒழுங்கற்ற, அசுத்தமான மற்றும் அராஜகமான – இந்த உலகத்தின் இராஜ்யங்கள், "நம்முடைய கர்த்தருடைய இராஜ்யங்களாயின" (வெளி. 11:15); ஆமாம், அவர்கள் இயேசுவின் கீழ் இருந்த கழுதையின் குட்டியைப் போலவே, இனி மூர்க்கமாயிராமல், ஆனால் சாந்தமான, அமைதியான, விருப்பத்துடன் இராஜாவுக்குக் கீழ்ப்பட்டவர்களாக மாறுவார்கள்!

"இதில் ஒவ்வொரு அம்சமும், ஆரவாரம் உட்பட நிறைவேறியது. ஜனங்கள் அனைவரும் 'ஓசன்னா!' என்று கூக்குரலிட்டனர். பரிசேயரோ, கிறிஸ்துவிடம் அவர்களை அதட்டும்படி கூறியபோது, அவர் பிரதியுத்திரமாக 'இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்' என்று கூறினார், ஏன்? ஏனெனில் அங்கே 'கெம்பீர சப்தம்' இருக்குமென்று தீர்க்கதரிசனமாக கூறப்பட்டிருக்கிறது; தீர்க்கதரிசனத்தின் ஒவ்வொரு அம்சமும் நிறைவேறித் தீர வேண்டும். இந்தத் தீர்க்கதரிசனத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட அம்சத்தின் நிறைவேறுதலானது, இவ்வசனத்தின் மற்ற வாக்கியங்களும், வேறு தீர்க்கதரிசனத்தின் வாக்கியங்களும், நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை நமக்குக் கொடுக்கிறது." *(B225)* (தமிழ் – *B242)*

## இராஜாவும் இராஜ்யமும் வருவதாக!

"பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையதாக இருப்பது என்பது, இவ்வுலக இராஜ்யங்கள் அனைத்தும் தேவனிடமாக மாற்றப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, பூமியின் இராஜாக்கள், தற்போது உரிமை கொண்டாடுவது போல தேவனுடைய கிருபையினால் அரசாட்சி செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்பதினாலோ, இப்போது அமைதியற்ற மனிதர்கள் அனைவருமே சாந்தமாகமாறி தற்போதைய ஆளும் சக்திகளுக்குப் பணிந்து கீழ்ப்படிந்திருப்பார்கள் என்பதினாலோ அல்லாமல்; **மாறாக, அது தீர்க்கதரிசி அறிவிப்பதுபோல், தேவன் 'அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்' என்பதினாலே அது கர்த்தருடையதாக இருக்கும், அதாவது, தற்போதைய பூமி, அல்லது சமூக அமைப்பு, மற்றும் தற்போதைய வானங்கள், அல்லது துரைத்தனமான அதிகாரங்கள் ஆகியன யாவும் கடந்துபோகவும், இந்தப் புதிய பூமி இடிபாடுகளின்மீது நிறுவப்படும்.** அமைதியற்ற கடலின் அலைகளாகிய – சமுதாய அமைப்புகள், அவற்றின் வலிமையில் எழுந்து, ஒட்டுமொத்த சமூக ஒழுங்கையும் மூழ்கடித்துவிடும், அதனால் அராஜகத்தின் துன்மார்க்கம் மற்றும் கொந்தளிக்கும் கடல் எங்கும் பெருகி நிற்கும், பின்னர், சேதமடைந்தவைகள், பாழடைந்தவைகளின் மத்தியிலும், பாழ்கடிப்பு மற்றும் உலகளாவிய விரக்தி மற்றும் மனச்சோர்வின் இடையில், யேகோவாவின் குரல் இவ்வாறாகக் கேட்கப்படும், 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.' (சங்கீதம் 46:10) மேலும் அந்தக் கடல் சீற்றத்தின் துன்மார்க்கமான குழப்பத்திலிருந்து தேவன் ஒழுங்கையும், சமாதானத்தையும் கொண்டுவருவார்." *(R3113:6)*

## கொந்தளிக்கும் கடலைப் பார்த்து "இரையாதே, அமைதலாயிரு" எனக் கட்டளையிடல்

"கலிலேயா கடலின் கொந்தளிப்பை அதட்டினவர், அதே அதிகாரத்தோடு, 'இரையாதே! அமைதலாயிரு!' என்று மனுக்குலத்தின் மனவேதனையாகிய கொந்தளிக்கும் கடலுக்குக் கட்டளையிடும்போது, உபத்திரவ காலம் ஏற்றவேளையில் முடிவடையும், சமாதானப்பிரபு அதிகாரத்தோடு 'எழும்பும்போது' மாபெரும் அமைதியே அதன் பலன். அப்பொழுது, கொந்தளித்து, மோதிக்கொள்ளும் இவ்வுலக அமைப்புகள் 'யேகோவாவின் அபிஷேகம்பண்ணப்பட்டவருடைய' அதிகாரத்தை அறிந்துகொள்ளும், 'கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்;' இவ்வாறு கிறிஸ்துவின் ஆட்சி ஆரம்பிக்கும்போது 'பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.'" *(A171)* (தமிழ் – *A235)*

## இயேசு தம்மை தீர்க்கதரிசியாக, ஆசாரியராக மற்றும் இராஜாவாக முன்வைத்திடல்

"யூத யுகத்தின் முடிவில் இயேசு கிறிஸ்து தம்மையே தனிப்பட்ட விதத்தில் ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் இஸ்ரயேலுக்கு ஒப்புவித்தார். இது பூரணமான, மகிமைப் பெற்ற கிறிஸ்துவின் சரீரம் முழுவதையும் முழு உலகிற்கும் அளிப்பதற்கான ஒரு நிழல் அல்லது விளக்கப்படமாகும். தீர்க்கதரிசியாக அவர் அவர்களுக்குப் போதித்தார்; ஆசாரியனாக 'அவர் தம்மைத்தாமே பலியாக்கினார்.' (எபி. 7:27) மேலும் தமது ஊழியத்தின் முடிவிலே ஓர் இராஜாவாக அவர்களது நகரத்திற்குள் பிரவேசித்தார். ஆனால் அவர்கள் இவற்றின் எந்த வெளிப்பாட்டிலும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." *(T50) (*தமிழ் – பச்சை நிற புத்தகம் – *T55)*

## மத்தேயு 21:8, 9

**"திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் (குருத்தோலைகளை – யோவான் 12:13) தறித்து வழியிலே பரப்பினார்கள். முன்நடப்பாரும், பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்."**

லூக்கா, இதற்குத் தொடர்புடைய பகுதியில், (லூக்கா 19:37, 38), திரளான கூட்டத்தைச் சீஷர்கள் என்று கூறுயிருக்கிறார்; இருப்பினும், அதில் சிலர் சீஷர்களாக இருந்தது உண்மை என்றாலும், மற்ற அநேகர் – உண்மையான சீஷர்களாக இருக்கவில்லை – அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் "ஓசன்னா" என்று ஆர்ப்பரிக்கவும், தேவனைத் துதிக்கவும் செய்தார்கள்; ஆனால் வெகு சீக்கிரத்திலேயே, அவர்கள் தங்களது போதகர்கள், வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் தலைமையின்கீழ் மற்றொரு திரளான கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு, பிலாத்துவுக்கு முன்பாக, "அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" (லூக்கா 23:20) என்று உரத்த சத்தமிட்டார்கள்!

"ஓசன்னா" என்னும் வார்த்தையின் உண்மை பொருள், சங். 118:25–ஆம் வசனத்தின் எபிரெய மொழியின்படி, "இப்போதே இரட்சியும்" என்பதாகும்; ஆனால் வெளிப்படையாக அது தனது முதன்மை பொருளை இழந்து இப்படி மாறினது –

"போற்றுதலின் வியப்புணர்வு" ஆகும் (மத்தேயு 21:9; மாற்கு 11:9, 10; யோவான் 12:13). மூன்று சுவிசேஷங்களில் (லூக்கா அதைத் தவிர்க்கிறார்) மொழிபெயர்ப்புக்குப் பதிலாக அது ஒலிபெயர்ப்பு பண்ணப்பட்டிருப்பதே பொருள் மாற்றத்திற்கான சான்று. எபிரெய வார்த்தைக்கு இனி இரட்சிப்புடன் எந்தத் தொடர்புமில்லை என்றாகாது: சங்கீதம் 118:25, 26–ஐ நினைவூட்டுகின்ற பொருளானது, அவ்வசனத்திலிருந்து நேரடி மேற்கோள் அல்லது குறிப்பைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், அது பிதாவாகிய தேவனுக்கும் இயேசுவுக்குமான அதின் பயன்பாட்டில், ஓசன்னா என்பது மேசியாவின் இரட்சிப்பில் தொடர்புகொண்டிருக்கிறது என்பதைக் காண்பிக்கிறது." (**சோண்டெர்வனின் சித்திர பைபிள் அகராதி**)

தமது முதலாம் வருகையில், இயேசு பூமிக்குரிய இராஜ்யத்திற்கு இராஜாவாகும்படி வரவில்லை (லூக்கா 24:26), இருப்பினும் அவர் இஸ்ரயேலுக்கு ஓர் அடையாளமாக தம்மை முன்வைத்து (சகரியா 9:9; லூக்கா 17:25; 19:38), தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய தளத்தில் "வானத்தின்

நட்சத்திரங்களாகும்படி" (ஆதியாகமம் 15:5) ஆபிரகாமின் "வித்துடன்" அடையாளம் கண்டுகொள்ளப்படுவதற்கான முதல் வாய்ப்பை (மத்தேயு 10:6) இஸ்ரயேலுக்கு அளித்தார்! ஆயினும், நாம் வாசிக்கிற வண்ணமாக, "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." (யோவான் 1:11) இதன் நிஜமான மறுபகுதியான இந்தச் சுவிசேஷ யுகத்தின் கிறிஸ்தவ மண்டலத்திலும் அது வேறுபடவில்லை. இந்தப் பிந்தைய வகுப்பார் (கிறிஸ்தவ மண்டலத்தார்) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர், என்றாலும் நிழலான இஸ்ரயேலரைப் போலவே, இவர்களும்கூட அவரை அடையாளம் கண்டுகொள்ளாதிருக்கின்றார்கள்.[8]

> "...மகிமையின் இராஜா ஏற்கெனவே வந்து இருக்கும்போது அவரை அறிக்கைப்பண்ணுகிற பெரும்பாலான ஜீவிக்கிற சாட்சிகள், சத்தமிட்டு களிகூருவதற்குப் பதிலாக, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரிப்பதற்குப் பதிலாக, ஊமையாக இருக்கிறார்கள். சிலர் ஆலயத்தில் இருந்து புறம்பே தள்ளி விடுவார்கள் என்கிற பயத்தினால், சிலர் அசிரத்தையாக இருப்பதால், சிலர் உலகத்தின் மதி மயக்கத்தினால் அவர் வந்திருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். ஆனால் இந்த மகா பிரமிட்டின் சாட்சியின் கற்கள் சத்தமாகக் கூப்பிட்டுக் கொண்டு இருக்கின்றன..."*(C376)* (தமிழ் – *C491, 492)*

கழுதைக்குட்டியின்மீது பயணித்தவராக, எருசலேமுக்குள் காணப்பட்ட இயேசுவின் "வெற்றி பிரவேசம்," நீசான் 10-ஆம் தேதியன்று நிகழ்ந்தது, அந்நாளானது பஸ்கா ஆட்டுக்குட்டியினைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்படி தேவன் இஸ்ரயேலருக்கு அறிவுறுத்திய நாளாகும். ஐந்து நாட்களுக்குப் பிறகு, நீசான் 14-ஆம் தேதியன்று, அவர்கள் அதை அடித்து, அதன் இரத்தத்தின்கீழ் தங்களை உட்படுத்தி அதனைப் புசிக்க வேண்டியிருந்தது! அவ்வாறு செய்வதற்கு முற்காலத்து இஸ்ரயேலர்களில் எவரேனும் தவறி இருப்பார்களானால், தேவனுடைய எதிரிகளாகிய – எகிப்தியர்களுடன் இணைக்கப்பட்டவர்களாக, எகிப்தின் மரண வாதைக்கு அவர்களை உட்படுத்தியிருக்கும். (யாத். 12:5-13, 21-23–ஐ காணவும்)

இஸ்ரயேலர், ஆண்டவராகிய இயேசு தம்மை அவர்களிடம் வெளிப்படுத்தியபோது, அவரைப் புறக்கணித்தனர்; இவ்வாறு அவர்கள் செய்ததினால், ஏறக்குறைய அந்நேரத்தில் தேவனுடைய எதிரிகளாகிய – "எகிப்தியர்களுடன்" இணைந்தவர்களாகினர். மேலும் ஆபிரகாமுக்கு முதலில் பிறந்தவரான இஸ்மயேல், ஈசாக்கைப் பரியாசம் பண்ணினபோது ஆபிரகாமின் வீட்டிலிருந்து புறம்பாக்கப்பட்டார் (ஆதி. 21:9-14). அதுபோல் இஸ்ரயேலரும்கூட இயேசுவைப் புறக்கணித்ததன் காரணமாக புறம்பாக்கப்பட்டார்கள். "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத். 23:37, 38) ஆகையால் இஸ்ரயேலர், "தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமான" (ரோமர் 8:17) - உண்மையான "முதற்பேறானவர்களாகும்" சிலாக்கியத்தை அடைய முடியாமல் "மரித்துப்போயினர்."

## சிறிது காலம்! – இஸ்ரயேல் "தள்ளிவிடப்படுதல்!"

> "ஈசாக்குப் பிறந்தபோது ஆகாரும் இஸ்மயேலும் புறம்பே தள்ளப்பட்டு, ஏறக்குறைய உயிரிழக்கும் நிலைமைக்குச் சென்றதுபோல, யூதர்களும் பதினெட்டு நூற்றாண்டுகளாக தெய்வீகத் தயவிலிருந்து புறம்பே தள்ளப்பட்டிருந்தவர்களாகக் காணப்பட்டு, இன்று ஏறக்குறைய பஞ்சத்தின் நிலையை எட்டியுள்ளனர் (களைத்துப் போயுள்ளனர்). தேவதூதன் தண்ணீர்த் துரவைக் காண்பித்துக் கொடுத்ததும், இஸ்மயேல் புத்துயிர்ப்பெற்றதுபோல, தேவனுடைய செய்தியானது தற்போது, ஒரு நீரூற்றை யூதர்களுக்கு சுட்டிக்காண்பிக்கிறது; அவர்களது சியோனிச நம்பிக்கைகள் புத்துயிரடைகின்றன." (PD23/34)

## நிழலான "முதற்பேறானவர்கள்" என்னும் இஸ்ரயேல் முடிவுக்கு வருதல்

> "மேலும் அந்த நாளில்தான் நமதாண்டவர் கழுதைக்குட்டியின் மீதமர்ந்து நகரத்திற்குள் பிரயாணம் செய்து அவர்களின் இராஜாவாக வந்தபோது – அந்த தேசத்திற்குக் கடைசியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். (யோவான் 12:12-16 ஒப்பிடவும்). ஆனபோதிலும் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தபோது, அவர்கள் அக்கணமே நிழலான சேஷ்டபுத்திரராகுவதிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர்." (யாத். 4:22) (R5191:4)

## இயேசுவின் பாதத்தருகே மரியாள்

**லூக்கா 10:39 - "அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்."**

**யோவான் 12:3 - "அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது."**

**யோவான் 11:32 - "இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து..."**

எருசலேமுக்குள்ளான இயேசுவின் "வெற்றி பிரவேசத்திற்கு" ஒரு நாள் முன்புதான், இயேசு பெத்தனியாவில், மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு ஆகியோரின் வீட்டில் தங்கினார். பஸ்காவுடன் தொடர்புடைய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களைப்பற்றி காண்பதற்கு முன், அந்தச் சந்திப்பின் நிகழ்வுகளைக் கருத்தில்கொள்வது பயனுள்ளதாக இருக்கக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம். இயேசு மிகவும் நேசித்த இந்த அருமையானவர்கள், அவரைக் கனம்பண்ணும் விதமாக இராவிருந்து பண்ணினார்கள்.

இராவிருந்து நடந்துகொண்டிருந்தபோது, எப்போதும் இயேசுவின் பாதத்தருகே காணப்படும் மரியாள், விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியை உடைத்து, இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமையிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவான் 12:3). இவ்வாறு அவள் தனது மகுடமான மகிமையை அவரது சரீரத்தின் மிக தாழ்மையான அங்கத்தினர்களுக்கு ஊழியஞ்செய்யப் பயன்படுத்தினாள்! தைலத்தைப் பணத்துக்கு விற்று, வந்த வருமானத்தைத் தரித்திரருக்கு ஊழியஞ்செய்யக் கொடுத்திருக்கலாம் என்று கூறி, இதற்காக அவளை விமர்சித்தவர்களும் அங்கிருந்தனர். இவ்வாறு பரிந்துரைத்தது யூதாஸ் என்று யோவான் கூறுகிறார்; அது அவருடைய சீஷர்கள் என்று மத்தேயு கூறுகிறார் (யோவான் 12:4, 5; மத். 26:8-ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்)

இந்த ஆலோசனையை வழங்கினவர் யூதாஸ்தான் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாகும், மேலும், சீஷர்களில் சிலர், இதைவிடவும் சிறப்பான ஒன்றை அறியாததினால், அவருடன் உடன்பட்டனர். இருப்பினும், கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், "இவளைவி ட்டுவிடு,எ ன்னைஅ டக்கம்பண்ணும்ந ாளுக்காகஇ தைவ வத்திருந்தாள்.த ரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்" (யோவான் 12:7, 8) என்று இயேசு அவர்களிடத்தில் கூறி மரியாளுக்கு ஆதரவாயிருந்தார் என்பதாகும்.

பின்னும் அவர் தொடர்ந்து, "இவள் தன்னாள் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்எ ன்றுெ மய்யாகவேஉ ங்களுக்குச்ெ சால்லுகிறேன்." (மாற்கு 14:8, 9) மேலும், இயேசுவின் சார்பாக அவள் செய்த இந்த நறுமணச் (வாசனை) செயலானது அந்த வீட்டை நிரப்பியது மட்டுமல்லாமல், அதற்கும் அப்பால் கடந்துச் சென்றிருக்கிறது. இயேசுவை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமாக மரியாள் செய்திட்ட இயேசுவுக்கான இந்த ஊழியத்தை சிலர் வாசிக்கும்போது, அதன் மூலம் தங்கள் சொந்த சிறு பொக்கிஷமான மனதினை – விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியை – திறந்து, அதே ஆண்டவருக்காக, அதாவது தற்போது அவரை அடையாளப்படுத்தக்கூடிய "பாத அங்கத்தினருக்காக" ஊழியம்புரியம் உணர்வுகளால் தூண்டப்பட்டுள்ளனர். இது எவ்வளவு விலையேறப்பெற்றது!

> "...ஒரு நறுமணமிக்க இனிமையான தைலம் யாத்ரீகரை எவ்வாறு புதுப்பித்து, களைப்படைந்தவர்களைப் புத்துணர்வூட்டும் என்பதை கிழக்கு நாடுகளில் குடியேறியவர்கள் அல்லது பாலைவன தரிசு நிலங்கள் வழியாகப் பயணித்தவர்களுக்கும் மற்றும் ஒரு சிலருக்கே தெரியும். களைப்படைந்த மனுஷன் விருப்பமுறும் நறுமண தைலத்தின் உயர்வான வாசனையை விட, விடாய்த்த மனுஷனுக்கு குளிர்ந்த தண்ணீர் அதிகமான வரவேற்பைப் பெறாது. தூசி மற்றும் வெப்பத்தால் உண்டாகும் சோர்வு அல்லது களைப்பைப் போக்க அதிக சக்திவாய்ந்த

அமைதிப்படுத்தும் மருந்து எதுவுமில்லை. ஆனால், இந்த விலையேறப்பெற்ற நறுமணங்களை வாங்கக்கூடிய வசதி உடைய பலர் இருந்ததில்லை, மற்றும் ஒரு சிலரால் மட்டும் அனுபவிக்கக்கூடிய ஓர் ஆடம்பரமாக அது இருந்தது. வெயிலால் வாட்டி வதைக்கப்பட்ட கானான் தேசத்தின் நீளம் அகலம் என முழுதும் கர்த்தராகிய இயேசு மேலும் கீழும் பயணம் செய்வதினால் பல சமயங்களில் தாகமும் சோர்வும் அடைந்தார். அவரது தாகத்தைத் தணிக்க ஓடும் ஓடை அல்லது ஓய்வெடுக்க வேண்டிய அமைதியான நிழல் ஆகியவைகளே அவரது சக மனிதர்களுடன் அவர் பொதுவாக அனுபவிக்க இருந்தவைகள். ஆனால், அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நமது நிமித்தம் தரித்திரரானார், அப்படிப்பட்டவரின் சோர்வுற்ற ஆவியை, விலையேறப்பெற்ற பரிமள தைலங்கள் அரிதாகவே புத்துயிரூட்டவோ அல்லது நிவாரணமளிக்கவோ முடிந்தது." *(**பெத்தானியா ஊராளாகிய மரியாள் – லோன், பக்கம் –** 94)*

"அவரை இந்த பூமியின் சிங்காசனத்தின்மேல் அவளால் அமர்த்த முடியாவிட்டாலும், தான் அவருக்கு என்றுமே பயபக்தியுடன் காணப்படும் ஓர் ஊழியக்காரி என்பதை அவளால் காட்ட முடிந்தது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக அவரை மகிமைப்படுத்த அவளால் இயலாதபோதிலும், தன்னுடைய சொந்த வீட்டிற்குள் அவரை மகிமையும், கனமும் செய்யமுடிந்தது. அவளால் அவருடைய புகழை எடுத்துக்கூறவோ. அவருடைய மகத்துவங்களை எடுத்துக்கூறி பாட முடியாவிட்டாலும், அவளுடைய இருதயத்திற்குள் அவளால் அவரைக்குறித்துப் பாட முடிந்தது. இன்னுமாக அவர் மேல் நறுமண தைலத்தையும் அவளால் ஊற்றவும் முடிந்தது. இந்த நறுமண தைலமானது, அவளுடைய வீட்டை நறுமணத்தினால் நிரப்பியதோடல்லாமல், அவளுடைய நாள் துவங்கி தற்காலம்வரையிலும் காணப்படும் பெண் இனத்திற்குரிய கனத்திற்கு இனிமையான நறுமணத்தை வழங்குவதாகவும் இருக்கின்றது. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கர்த்தர் கூறினார். அதாவது, இவள் தன்னால் இயன்றமட்டும் தன்னுடைய அன்பை வெளிப்படுத்தி உள்ளாள் என்ற விதத்தில் கர்த்தர் குறிப்பிட்டுள்ளார். "இந்தச் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இவள் செய்ததும் அறிவிக்கப்படும்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மையாக இந்நாள்வரைக்கும் நிறைவேறிவருகிறது! இது, ஓர் அன்பான இருதயத்தைக் குறித்தும், இனிமையான குணலட்சணம் குறித்ததுமான ஓர் இனிமையான நினைவுகூருதலாகும். இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய ஜனங்களின் அனைவர் மேலும் ஊற்றப்பட்ட நறுமணத்தினிமித்தம் உண்டான புத்துணர்வு, ஆசீர்வாதம் மற்றும் சுகந்தவாசனையின் வெளிச்சத்தின் கீழ்ப் பார்க்கும்போது, மரியாளுடைய நளதம் என்னும் தைலம் விலையுயர்ந்ததாக இருப்பினும், அது உண்டுபண்ணின பலன்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது மிகவும் விலை குறைந்ததாக நிரூபணமாகிறது." *(R3535:5)*

பிறகு நீசான் 13-ஆம் நாளின் சாயங்காலம் வந்தது, சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு, 14-ஆம் தேதி தொடங்கியபோது– இ ஸ்ரயேலுக்கு,ே யகோவாே தவனால்க ட்டளையிடப்பட்டஅ ந்தஒ ருந நாள், அவர்களின் தலைமுறைதோறும் எப்போதுமே நினைவில் வைக்கப்பட வேண்டிய நாள். ஆகவே அந்த நாளை மிகவும் சிறப்பான வகையிலே நினைவுகூருவது என்பது இயேசுவின் மீதும் அவருடைய சீஷர்களின் மீதும் விழுந்த கடமையாக இருந்தது.

"'நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக' பிறந்த யூதர்களாக இருந்தபடியால் நம்முடைய ஆண்டவருக்கும், அவருடைய சீஷர்களுக்கும் இந்த மாதிரியை, அதற்குரிய நேரத்தில் கொண்டாடுவது கடமையாயிருந்தது." *(F462)* (தமிழ் – *F614)*

## பெத்தானியாவில் விருந்து

"...மறியின் மீதேறி எருசலேமுக்குள் சென்ற மாபெரும் போதகரின் வெற்றி பிரவேசமும், இஸ்ரயேல் தேசத்திற்கு அவர்களது இராஜாவாக தம்மையே ஒப்புவித்ததும் சகரியா 9:9-12–ஆம் வசனங்களில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக உள்ளது. அது பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன் நடந்ததாகும். அநேக நாட்களாக இயேசு தேவாலயத்தில் போதித்து, இரவு நேரத்தில் பெத்தானியாவில் உள்ள லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீட்டிற்குச் செல்வார். அவர் தாம் எதிர்நோக்கவேண்டியது இன்னது என்பதை அறிந்திருந்தார் – அதாவது தம்முடைய வேளை வந்துவிட்டது என்பதை

அறிந்திருந்தார். அப்போதும்கூட பிரதான ஆசாரியரும், ஜனத்தின் மூப்பரும் அவருடைய அழிவை கருத்தில்கொண்டு, அது கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக மாத்திரமே தயங்குகிறார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர்கள் போதித்தபடியே அவர் போதிக்கவில்லை என்பதாலும், அவர்களுடைய அனைத்து ஒன்றிணைந்தப் போதனைகளைப் பார்க்கிலும் அவரது போதனைகள் ஜனங்களிடம் அதிக வல்லமையுள்ளதாக/அதிகாரமுடையதாக இருந்தது என்பதாலும், அவர்கள் மாபெரும் போதகருக்கு எதிராக கோபம் கொண்டார்கள். கோபம், பொறாமை, வெறுப்பு ஆகியவை அவரை ஒரு வஞ்சகனாக முத்திரை குத்துவதிலும், 'நன்மையான காரணத்திற்காக' அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தலிலும் ஒன்றிணைந்தது."

"குறிப்பிடப்பட்டுள்ள பெத்தானியாவின் இராவிருந்து... கர்த்தருடைய காட்டிக்கொடுக்கப்படுதலுக்கு முந்தைய இரவில், பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இருந்திருக்கலாம்... இயேசுவும் அவருடைய சீஷர்களும் அங்கிருந்தார்கள். விருந்தின்போது ஒரு ஸ்திரீ மிகவும் விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியோடு அணுகினாள். அவள் அதை அவர் சிரசின்மேல் ஊற்றினாள், அறை முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அந்த ஸ்திரீ லாசரு மற்றும் மார்த்தாளின் சகோதரியான மரியாள் ஆவாள்."

"சீஷர்கள் இவ்விஷயத்தை வீணென்று காட்டி எதிர்த்தது, கர்த்தருடைய சீஷர்களாகிய சிறிய கூட்டத்தினுடைய பொக்கிஷக்காரனான யூதாஸால் தூண்டப்பட்டது என்பதை மற்றொரு பதிவுக் காட்டுகிறது. யோவான் அவரை ஒரு திருடன் என்று குறிப்பிட்டு, பணப்பையை வைத்துக்கொண்டு, தரித்திரரைவிடவும் பையிலே போடப்பட்ட பணத்தின்மீது அதிக அக்கறை கொண்டவர் என்றும், ஏழைகளைப் பற்றி அவர் குறிப்பிடுவது வெறும் சூழ்ச்சி என்றும் கூறுகிறார். ஆனால் மாபெரும் போதகர் தமது சீஷர்களை இவ்வாறாகக் கூறிக் கடிந்துகொண்டார், 'நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்திலிருக்கிறார்கள். நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.' (மத். 26:10-13) மாபெரும் போதகர் எவ்வளவு அக்கறையுள்ளவர்! எவ்வளவு அனுதாபமுள்ளவர்! அவருக்காகச் செய்த அனைத்தையும் எவ்வளவாய்ப் பாராட்டுகிறவராய் உள்ளார்!" *(R4702:2)*

## பெத்தானியா ஊராளாகிய மரியாள்

"...அவள் தன் பிரியமான மற்றும் மீட்கப்பட்ட சகோதரனின் முன்னிலையிலும், இன்னும் ஆழமாக வணங்கப்பட்ட ஆண்டவரின் முன்னிலையிலும் அமர்ந்தாள், மரியாளின் உணர்வுகளை இனி கட்டுப்படுத்த முடியாது என்னும் நிலையில்... அவள் எழுந்து இந்த பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியை எடுத்து, இயேசு அமர்ந்திருந்த இடத்திற்குப் பின்னால் மெதுவாக வந்து, வெள்ளைக்கல்பரணியை அவள் கைகளில் உடைத்து, தாராளமாய் விலையேறப்பெற்ற பரிமள தைலத்தை முதலில் அவரது தலையின்மீதும், பின்னர் அவரது கால்களின்மீதும் ஊற்றினாள், பின்னர் – ஒவ்வொருவரின் இருப்பையும் மறந்து, அவரை மட்டும் சிந்தையில் வைத்து – அந்தக் கால்களைத் தனது தலைமுடியின் நீண்ட மயிர்ச்சுருளினால் துடைத்தாள், அதே சமயம் முழு வீட்டின் சூழலும் தைலத்தின் இனிமையான பரிமளத்தினால் நிறைந்திருந்தது. இது நேர்த்தியான சுயத்தை – கைவிடுதலுடைய அர்ப்பணிப்புள்ள பலியின் செயலாகும்; இயேசுவைப் பின் தொடர்ந்த ஏழை கலிலேயர்கள், எந்தவொரு ஆடம்பரத்திற்கும் அவ்வளவு பழக்கமில்லாத அவர்கள், அன்பளிப்பின் விலையுயர்ந்த தன்மைக்கு முழுமையாக உணர்வுள்ளவர்களாய், இது ஒரு குறுகிய நேரத்தின் செழிப்பான ஆடம்பரத்திற்கான ஊதாரித்தனமாகஎ ண்ணிஆ ச்சரியப்பட்டிருக்கலாம்.அ ங்குமி குந்தஆ விக்குரியஇ ருதயத்தைக் கொண்டவர்களால் மாத்திரமே இந்த நறுமணமுள்ள வீட்டின் வழியாக சுவாசிக்கும் நுட்பமான நறுமணமானது தேவனுக்கு ஒரு சுகந்த வாசனையாக இருந்திருக்கும் என்பதை உணர்ந்திருக்க முடியும்; அவள் எவருக்கு வழங்கினாளோ அவரின் அன்பையும், அல்லது எவருக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டதோ அவரின் கனத்தையும் பூர்த்திச் செய்வதற்கு இஃது அளவிடப்பட முடியாத அளவுக்கு மிகக் குறைவானதே." (**கிறிஸ்துவின் வாழ்க்கை – ஃபாரார், பக்கம்** *189*)

# மாற்கு 14:12-15[9]

**"பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள். அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள். அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ, அந்த வீட்டு எஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளம் முதலானவைகளை விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்."**

இந்தக் கட்டத்தில் நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவர் – நல்ல மேய்ப்பன், மறைத்து வைத்திருக்கும் அந்தச் சிறிய தங்கக்கட்டிகளில் இன்னொன்றை, அநேகமாய் முக்கியமாக அவருக்கு மிக நெருக்கமாகஇ ருக்கும்அ வருடைய "சிறுஆ ட்டுக்குட்டிகளுக்கும்", அவருக்குமி கெ நருக்கமாக இருப்பவர்களுக்கு; மேலும் குறிப்பாக, சுவிசேஷ யுகத்தின் முடிவில் – அதன் அறுவடை காலத்தில் வாழ்ந்து வருபவர்களுக்காக வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். "...அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்..." என்னும் இந்த வார்த்தைகளை நன்கு கவனியுங்கள்.

இந்தச் சம்பவம், ஒரு "நாள்" ஆன – யூத யுகம் முடிவடைந்து, ஒரு புதிய "நாள்" ஆன – சுவிசேஷ யுகம் தொடங்கிய இடத்திலிருந்தே நிகழ்ந்ததால், சுவிசேஷ யுகத்தின் இந்த அறுவடையில், இப்போது வாழ்ந்து வருபவர்களுக்கு இது சில சிறப்புப் பயன்பாட்டைக் கொண்டிருக்கக்கூடுமல்லவா?

கி.பி.1829-இல் [C84-89-ஐ பார்க்கவும்] (தானியேல் 12:11-இன் 1290 நாட்களின் முடிவில்) ஒரு "பரிசுத்த ஸ்தல வகுப்பார்" நடைமுறைக்கு வந்தனர்; கி.பி.1846 முதல் (தானியேல் 8:14–இன் 2300 நாட்களின் முடிவில்), இவர்கள் 'சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தல வகுப்பாராக" மாறினர். அந்த நேரத்திலும், தானியேல் 12:12–இன் 1335 நாட்கள் – (1874) முடியும்வரை இந்த சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்த ஸ்தல வகுப்பார் "ஒரு ஒழுங்கமைக்கப்படாத கரு" *[C119]* ஏறக்குறைய "நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதுமான ஜாதி" ஆக இருந்தது! (ஏசா. 18:2) எவ்வாறாயினும், சிறிது காலத்திற்குப் பிறகு, அவர்கள் "புளிப்பில்லாத சத்தியத்தின் அப்பத்தில்" ஒன்றாக விருந்துண்ண ஓர் "இடத்தை" தேடிக்கொண்டிருந்தபோது,க ர்த்தர்அ வர்களைத்த ண்ணீர்க்குடம்சு மந்துவருகிறஒ ரு மனுஷன் அவர்களுக்கு எதிர்ப்படும்படியாக வழிநடத்தினார், மேலும் அவன் பின்னே போங்கள் என்றும், அவன் எங்கே பிரவேசிக்கிறானோ அங்கே அவர்களும் பிரவேசிக்கக் கட்டளையிட்டார். அந்த "மனிதன்" நமது அன்புக்குரிய பிரியமான சகோதரர் ரசல் என்றும் [லூக்கா 12:42; எசேக்கியேல் 9:3; *R5400:1, 4* -ஐ காண்க] மற்றும், பின்னர் சீயோன் காவற் கோபுரத்தில் அமைக்கப்பட்டபடி தண்ணீர்குடமானது சத்தியத்தைக் குறிக்கிறது என்றும் நாம் நம்புகிறோம். அப்போதுதான், "வீட்டு எஜமான்" – யேகோவா, அவர்களது "பஸ்காவை" ஒன்றாகக் கொண்டாடிடுவதற்கு வேண்டிய "விருந்தினர் அறையை" (நெருங்கிய உறவுகளுடைய மனங்களின் ஐக்கியம்) அவர்களுக்குக் காட்டினார்!

இயேசுவின் இரண்டு சீஷர்களும் (பேதுரு மற்றும் யோவான், லூக்கா 22:8), அவர்களுக்குச் சொன்னபடியே செய்தார்கள்; இயேசு சொல்லியிருந்த அந்த மனிதரை அவர்கள் சந்தித்தார்கள். அவர்கள் அவரைப் பின்தொடர்ந்து அவர் பிரவேசித்த வீட்டிற்குள் பிரவேசித்தார்கள், அவர்கள் அனுப்பப்பட்ட பணியை அறிந்தவுடன், தங்கள் பஸ்காவுக்குத் தயாராவதற்கான சிலாக்கியத்தைப் பெற்றார்கள். இது "புளிப்பில்லாத அப்பத்தின் முதல் நாள்," "பஸ்காவை" அவர்கள் கொன்ற – நீசான் 14-வது நாளாக இருந்தது என்பது கவனத்தில் இருக்கட்டும்! ஆயினும், அன்றைய தினம் "சாயங்காலங்களுக்கு மத்தியில்" (மாலை 3 மணியளவில்) நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியாக கொல்லப்படுவதற்கு, மீதமுள்ள இஸ்ரயேலர்கள் அனுசரித்த நிழலான பஸ்காவில் இயேசு பங்கெடுக்க அவரால் காத்திருக்க இயலாது, ஏனென்றால் அந்தச் சமயத்தில் அவர் உயிருடன் இருக்கப்போவதில்லை. அதன்படி, இயேசுவும் அவருடைய சீஷர்களும் அந்த பஸ்காவை 14-ஆம் தேதி, அத்தகைய ஆட்டுக்குட்டி அடிக்கப்படும் காலத்திற்கு முன்பே நினைவுகூர்ந்தனர். இயேசு வாழ்ந்த நாளின் யூதர்கள் 14-ஆம் தேதி பஸ்காவை

சாப்பிட்டிருந்தால், அது மாலை 3 மணி முதல் 6 மணிவரை ஏதோவொரு நேரத்தில் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் 15-ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கியது; மேலும், அவர்கள் 15-ஆம் தேதியின் துவக்க நேரம்வரை அவர்கள் தங்கள் பஸ்காவை சாப்பிடவில்லை என்பதற்கும் சாத்தியமிருக்கிறது.

> "...பதிவுகளை வைத்துப்பார்க்கும் போது நமது கர்த்தரும், அவரது சீஷர்களும், யூதர்கள் பொதுவாய்ப் புசித்ததான நாளுக்கு முந்தினநாளில் பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில் யோவானுடைய சுவிசேஷத்தில், நமது கர்த்தர் பஸ்காவைப் புசித்தப் பிற்பாடு பிலாத்துவிற்கு முன்னிலையில், அவரது அரண்மனையில் காணப்படுகையில், அவரைக் குற்றப்படுத்தினவர்களாகிய பரிசேயர்கள் பஸ்காவை இன்னும் புசிக்கவில்லை என்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டப் பின்னர் சாயங்காலம் வரையிலும் அவர்கள் புசிக்கவில்லையென்றும் நாம் வாசிக்கின்றோம்." (யோவான் 18:28; 19:14) *(R2771:5)*

இங்கேக வனிக்கே வண்டியமு க்கியமானவி ஷயம்ள ன்னவென்றால்,அ ந்தத்த ருவாயில் இஸ்ரயேல் பஸ்காவை எப்பொழுது புசித்திருக்கலாம் என்பதல்ல. ஆனால் இயேசு – தேவ ஆட்டுக்குட்டி, நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டி, அதே நாளான – நீசான் 14-ஆம் தேதி அன்று கொல்லப்பட்டார்; பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் நடந்த நிஜ பஸ்கா ஆட்டுக்குட்டியைப் போலவே (சாயங்காலங்களுக்கு மத்தியில்) அதே நேரத்தில் கொல்லப்பட்டார்.

> "நமது ஆண்டவருடைய ஊழியத்தின் இறுதிக் கட்டத்தில், முதலாம் மாதம் 14-ஆம் தேதியன்று, 'அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே,' அவர் நிழலான ஆட்டுக்குட்டியாக மரித்த அதே நாளிலே யூதர்களின் நிழலான பஸ்காவைத் தம்முடைய சீஷர்களோடு போஜனம்பண்ணி, நிழலாயிருந்த ஆட்டுக்குட்டி அவருக்கே அடையாளமாக இருந்தது; உலகத்தின் பாவங்களுக்காகத் தம்முடைய சொந்த பலியாக இருந்தது; அது "உண்மையான மாம்சமாக" இருந்தது; இதன் பெலத்தினால் மாத்திரமே ஜீவனும், தேவபுத்திரரின் விடுதலையும் ஆசீர்வாதங்களும் கிடைக்கப் பெறுகின்றன. நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கு முந்திய இராத்திரியில், இந்தப் போஜனத்தை அவர் புசித்திருந்தாலும் அதே நாளன்றே அது எப்படி சாத்தியமானது என்றால், யூதர்களின் வழக்கப்படி ஒரு நாளானது நடுராத்திரியில் அல்ல சாயங்காலத்தில் ஆரம்பமானது. ஆண்டவர் இஸ்ரயேலின் எல்லா காரியங்களையும் அவர்கள் செய்ய வேண்டியிருந்த மாதிரிகளின்படியாகவே ஆண்டவர் ஒழுங்குபண்ணினார் என்பது தெரிகிறது." *(F462)* (தமிழ் – *F614)*

சந்தேகத்திற்கிடமின்றி, இந்தச் சமயத்தில் இரண்டு இராப்போஜனங்கள் இருந்தன, ஒன்று பஸ்கா இராப்போஜனம் – 16 நூற்றாண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் நிகழ்ந்ததின் ஞாபகார்த்தமாகக் கொண்டாடுவது; மற்றொன்று, இயேசுவால் நிறுவப்படப்போகும் நினைவுகூருதலின் இராப்போஜனம், இது எகிப்திய பஸ்காவின் நிஜமான பொருளாகும். இவற்றில் முதலாவது ஏற்பாடாகிக் கொண்டிருந்தபோது, மிகவும் அவசியமான மற்றும் முக்கியமான பாடம் – சாந்தம் மற்றும் பணிவு என்பதை தம்முடைய சீஷர்களுக்குக் கற்பிப்பதற்கான வாய்ப்பை இயேசு மீண்டும் ஒருமுறை ஏற்படுத்தினார்.

லூக்காவின் பதிவின்படி, தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று (லூக்கா 22:24-31). இதுபோன்ற விவாதங்கள் இதற்கு முன்னர் எழுந்தன, மேலும் அதற்காக இயேசு அவர்களைக் கண்டித்தும் இருந்தார். ஆனாலும், நிச்சயமாக, அவர்கள் வெறும் சாதாரண மனிதர்களே; மேலும், இந்த நேரத்தில், உண்மையில், ஒரு விருந்தளிப்பவர் அவர்களுக்கு இல்லாமல்—அவர்கள் அனைவரும் விருந்தினர்களாக இருந்தனர் என்று தோன்றுகிறது. இதனால், அவர்களின் கால்களைக் கழுவுவதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இந்த வேலையை அவர்களில் யாராவது ஒருவரோ, அல்லது அவர்களில் பலர் இணைந்தோ, அவர்களுக்குள்ளே அவ்வாறு செய்யத் தேர்ந்தெடுத்திருந்தால், செய்திருக்கலாம். ஆனால் மீதமுள்ளவர்களில் ஊழியக்காரனாக இருக்க எவரும் தேர்வு செய்யப்படவில்லை. மேலும், வெளிப்படையாக, இயேசு –

> "...அவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைக்காமல், அல்லது அவர்களுள் ஒருவனை இந்த மதிப்புக்குறைவான வேலையைச் செய்யும்படிக்கு நியமிக்காமல், இவ்விதமாய் அவர்கள்

ஒத்துப்போகாமல் இருக்க அனுமதித்துவிட்டார். அவர்களே, அக்காரியத்தைக்குறித்துச் சிந்திக்கும்படி அனுமதித்தார். அதாவது, அக்காரியத்தை மீண்டும் சீர்தூக்கிப்பார்க்கவும் இருதயத்தைத் தாழ்த்தவும், அவர்களுக்கு நேரத்தையும்விட்டுக்கொடுத்தார். அவர்களோ வழக்கத்திற்கு மாறாக கழுவப்படாத பாதங்களுடன் இராப்போஜனத்தைப் புசிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்."

பின்னர் இயேசு எழுந்துநின்று தமது மேலங்கியைக் கழற்றிப்போட்டு, ஒரு சீலையை எடுத்து தமது சல்லடங்களைச் (உள்ளாடைகளைச்) சுற்றி அரையில் கட்டிக்கொண்டு, ஒரு பாத்திரத்தையும், தண்ணீர் எடுக்க ஜாடியையும் எடுத்துக்கொண்டு, தண்ணீர் வைத்து தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவ ஆரம்பித்தார். பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிவிட்ட பிற்பாடு பாதங்களைத் தண்ணீருக்குள் வைத்துக் கழுவுவது கிழக்குப் பகுதிகளில் உள்ள வழக்கமாக இராமல், கழுவப்பட வேண்டிய பாதங்கள்மீது தண்ணீர் ஊற்றப்படுவதே வழக்கமாயிருந்தது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் கழுவுவதற்குச் சுத்தமான தண்ணீர் இருக்கும். மேலும் தண்ணீரும் குறைவாகவே செலவழிக்கப்படுகின்றது – ஏனெனில் நம் நாடுகளைக் காட்டிலும், கிழக்கே உள்ள நாடுகளில் தண்ணீர் மிகவும் தட்டுப்பாடு உடையதாகவும், விலையேறப்பெற்றதாகவும் கருதப்படுகின்றது. மேலும் நாம் பயன்படுத்தும் மேஜைகளும், இருக்கைகளும் அக்காலக்கட்டத்தில் கிழக்குப் பகுதிகளில் வழக்கத்தில் இல்லை என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய மேஜைகள் உயரம் குறைந்தவைகளாகவும், கிட்டத்தட்ட குதிரையின் பாதங்களில் அணியப்படும் லாடத்தினுடைய வடிவிலும் காணப்படும். மேலும் மேஜையில் இருப்பவர்கள் உண்மையில் மேஜையின்மீது பக்கவாட்டில் சாய்ந்து படுத்துக்கொள்வார்கள். அவர்களுடைய இடது முழங்கை, தலையணை அல்லது திவான்மீது வைக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய தலை குதிரை லாடம் போன்ற வடிவம் உடைய மேஜையின் உட்பக்கம் நோக்கியிருக்கும். இந்த உட்பக்கத்தில் உணவு வைப்பதற்கான இடமும், உள்ளே வந்து உணவை வைக்க பணியாளர்களுக்கு இடமும் காணப்படும். இவ்விதமாய் இருப்பதினால் பாதங்கள் வெளி நோக்கிக் காணப்படுவதினால், சாப்பிட்டுக்கொண்டிருக்கும் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமலேயே பாதங்களை எளிதில் கழுவுவதற்காகப் பாதங்களின் பக்கம் செல்லலாம்.

"பாதங்கள் கழுவப்படுவதினால் வெளியான அன்பையும், சௌகரியத்தையும்விட மிக ஆழமான அர்த்தங்கள், பாதங்கள் கழுவின விஷயங்களில் இருக்கின்றது எனவும், சீஷர்கள் மத்தியில் தாழ்மையின் ஆவி குறைவாக இருப்பதைக் கடிந்துகொள்வதாக இருக்கின்றது எனவும், பேதுரு கற்றுக்கொண்டபோது, தன்னுடைய பாதங்கள் மாத்திரமல்லாமல், தனது கைகளும், தனது சிரசும்கூட கழுவப்பட வேண்டுமென விரும்பினார். பெருந்தன்மையான, தளர்வில்லாத ஊக்கமுடைய, ஆர்வமிக்க, மனப்பூர்வமாய்க் காணப்படும் பேதுரு! 'இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்'." (யோவான் 13:10–டயக்ளாட்)

"அனைவருடைய பாதங்களைக் கழுவும் வேலையை முடித்த பிற்பாடு, இயேசு தமது மேலங்கியை உடுத்திக்கொண்டு இராப்போஜனத்திற்காக (இது பஸ்கா இராப்போஜனமாகும்; அப்பமும், திராட்சரசமுமுள்ள நினைவுகூருதல் இராப்போஜனமானது பிற்பாடு நிறுவப்பட்டது) மேஜையில் பக்கவாட்டில் சாய்ந்து, படுத்த நிலையில் இருந்தார்."

"கர்த்தருடைய பின்னடியாளர்களாக உண்மையாய்க் காணப்படும் அனைவரும் சாந்தம் மற்றும் தாழ்மை மற்றும் அவருடைய சரீர அங்கங்களுக்கு ஊழியம் புரிதல் எனும் போதகரின் ஆவிக்கான உண்மையான மாதிரிக்குக் கவனமாய்ச் செவிசாய்த்து, அப்படியே பின்பற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இக்காரியங்கள் அனைத்தும், 'மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் (ஜீவனுக்கடுத்த இந்த காரியங்கள் அனைத்திற்கும் உரித்தான இந்த கோட்பாடுகளை நீங்கள் அறிந்துணர்ந்தும்), இவைகளைச் செய்வீர்களானால் (இந்த நியமத்திற்கு இணங்க நீங்கள் நேசிக்கவும் ஒருவர் மற்றவருக்கு ஊழியஞ் செய்யும்படி வாழ்ந்தால்), பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்ற வார்த்தைகளுக்குள் அடங்குகின்றது. (யோவான் 13:16, 17)" *(R2449, 2450)*

## கர்த்தருடைய பாடத்தின் முக்கியத்துவம்

"இயேசு தம்முடைய துக்கம் மற்றும் துயரத்தின் பாரத்தை மறந்தவாராக, தம்முடைய பின்னடியார்களின் நலன்களில் அக்கறைக்கொண்டவராக, அனைவருக்கும் தாழ்மையின் ஒரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்கென வாய்ப்பைப் பயன்படுத்தினார். அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும், சீலையையும் எடுத்து பாதங்களைக் கழுவினார். சீஷர்களோ வெட்கப்பட்டு, குழம்பிப்போய், இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் என்ன சொல்ல வேண்டும் என்றோ அல்லது என்ன செய்ய வேண்டும் என்றோ தெரியாமல் காணப்பட்டனர். பேதுரு மாத்திரம் போதகர் தன்னுடைய பணிவிடைக்காரன் போன்று நடந்துகொள்வதற்குத் தன்னால் அனுமதிக்க முடியாது என்ற மறுப்பைத் தெரிவித்தார். ஆனால் இவ்விஷயத்திற்கு ஓர் அடையாள அர்த்தம் இருக்கின்றது என இயேசு விவரித்தபோது, பேதுரு கழுவப்படுவதற்கு ஆவலாய்க் காணப்பட்டார். பாடத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தவறிவிடக்கூடாது என்பதற்காக, அனைத்தையும் செய்து முடித்தப் பிற்பாடு, நமது கர்த்தர், உங்கள் கர்த்தரும், போதகருமாகிய நானே உங்கள் பாதங்களைக் கழுவி, உங்களில் யாருக்கேனும் மிகவும் கனம் குறைந்த வேலையையும் செய்வதில் வாஞ்சையையும், தாழ்மையையும் வெளிப்படுத்தியிருக்க, நீங்களும் இதே மாதிரியை ஒருவரிலொருவர் பின்பற்றுவதற்கும், ஒருவருக்கொருவர் மிகவும் கனம் குறைந்த வேலையைச் செய்வதற்கும், அதுவும் ஒருவேளை வாய்ப்பு அனுமதிக்கும்பட்சத்தில் ஒருவர் மற்றவருடைய பாதங்களைக் கழுவுமளவுக்கு உள்ள வேலையைச் செய்வதற்கும் வாஞ்சையுடன் காணப்பட வேண்டும் என்றும் விளக்கினார். *(R4167:2)*

## "நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதுமான ஜாதி"

"தூது எந்தத் தேசத்திற்குச் செல்கிறது? நாம் பதிலளிப்பது யாதெனில், இது **'பரிசுத்த ஜாதியான' இராஜரீகமான ஆசாரியக்கூட்டத்திற்குச்** செல்கிறது என்பதே. (1 பேதுரு 2:9) பல்வேறு தேசங்களைச் சேர்ந்த பலர் இந்தத் தூதுகளைக் கையாண்டு படிக்கக்கூடும், ஆனால் அவை ஒருவருக்கு மட்டும் தான்; **தற்போதைய காலத்தில்** மற்றவர்கள் அவர்களுடைய தூதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியுமா என்பது சந்தேகமே. மேலும் அந்த விளக்கம் வேறு எந்த தேசத்திற்கும் பொருந்தாது. அது 'நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதுமான (மெருகூட்டப்பட்டதுமான) ஜாதி [R.V/ஆர்.வி. **'மென்மையான'**] - துவக்கமுதல் இதுவரைக்கும் [அவர்களின் அனுபவங்களில்] கெடியாயிருந்ததுமான ஜாதி; அளவிடப்பட்டதுமான ஒரு ஜாதி [வாழ்க்கையின் போக்கையும் அனுபவங்களையும் தேவன் அவர்களின் மிக உயர்ந்த நலனுக்காக அளவிட்டுள்ளார்] மற்றும் [அவர்களின் தேவையான அனுபவத்தின் ஒரு பகுதியாக] மிதிக்கப்பட்டதும், நதிகள் பாழாக்குகிறதுமான ஜாதி (R.V/ஆர்.வி.)' இந்த நதிகளைப் பற்றிய குறிப்பு, மரண நதியானது, இந்தப் 'பரிசுத்த ஜாதியை' யோர்தானின் மறுபுறத்திலுள்ள அதன் சுதந்தரத்திலிருந்து பிரிக்கிறது என்பதைக் குறிப்பதாகவோ; அல்லது சங். 46:4-இல் உள்ளது போலவோ எடுத்துக்கொள்ளலாம்." *(R3405:4)*

## "பரிசுத்த ஸ்தல வகுப்பார்"

"தேவன் தம்முடைய ஞானத்தின்படி, இப்பொழுது பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படுகிற பெரிய வெள்ளம் போன்ற வெளிச்சத்தை, அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களை இன்னும் பிடித்திருந்த போப்பின் அசுத்தங்களில் இருந்து, முதலாவதாக அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, பின்னர் அவர் அவர்களைப் படிப்படியாக வழிநடத்தினார். இப்படியாகத் தேவன் அவர்களை இழுத்துக்கொண்டபோது, 1846-ஆம் வருஷம்வரை பழைய வஞ்சகங்களைச் சுட்டிக்காட்டிய சத்தியம் என்னும் சத்தத்தில், நல்ல மேய்ப்பனின் சத்தத்தை கேட்டுணர்ந்த **பரிசுத்த ஸ்தல வகுப்பார்** அவரைப் பின்பற்றிச் சென்றார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் தான், பரிசுத்த ஜனங்களின் ஓர் உட்கரு, (அதாவது) "பரித்த ஸ்தலமாக" இருக்கிறவர்கள், போப்பின் வஞ்சகங்களில் இருந்து விடுபட்டும், அசுத்தங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்டும், மனிதர்களின் அசுத்தமான கருத்துக்களுக்குப்

பதிலாக சுத்தமானதும் ஆழமானதுமான சத்தியத்திலும் நிரப்பப்படுகிற காலம் (1846) என்று கூறுகிறது. இந்தச் சத்தியத்தின்மேல் தான் ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் சபையை ஸ்தாபித்தார்கள். இந்த யுகத்தின் அறுவடையின்போதும், ஆண்டவர்தாமே வரும்போதும், பெரிதான மொத்த ஆசீர்வாதத்தின் உச்சக்கட்டத்தை எதிர்பார்க்கும்படி படிப்படியாக **அவர்கள் வழிநடத்தப்பட்டார்கள்.** அவர்கள் தேவனுடைய வார்த்தையை கவனமாகப் படித்ததும், தேவ தூதர்களும் உற்றுப்பார்க்கும்படி ஆசையாயிருக்கிறவைகளை (1 பேதுரு 1:12) அறியும்படியான நல்ல வாஞ்சையும், அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டது. ஆனாலும் அவர்களுடைய வாஞ்சைகள் முற்றிலுமாக அருளப்படவில்லை."

"விசுவாசமும் உண்மையுமுள்ள ஒரு சிலர் இப்படியாக சத்திய வார்த்தையினால் போதிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, தூய்மையாக்கப்பட்டு உலகத்தில் இருந்து முற்றிலுமாகப் பிரிக்கப்பட்டு, பெருமையில் இருந்து நீக்கப்பட்டு இருந்தார்கள். 1844-இல் ஏற்பட்ட ஏமாற்றத்தினால் தேவன்மேல் அதிகமாகச் சார்ந்து இருக்கும்படியாக தாழ்மைக்குள் கொண்டுவரப்பட்டார்கள். மேலும் ஏற்கனவே கூறப்பட்ட 30 வருட காத்திருத்தல் பரிசுத்தமானவர்களிடத்தில் பொறுமையையும், தாழ்மையையும், அன்புடன்கூடிய பணிவையும் உருவாக்கியது... கவனித்துக்கொண்டிருப்பவர்கள் 1335 நாட்களின் இறுதியில் (1874, அறுவடையின் காலம்) "இதோ மணவாளன்!" என்கிற சந்தோஷமான தூதைப் பெற்றுக்கொண்டு எல்லா பரிசுத்த ஸ்தல வகுப்பினருக்கும் அறிவிக்கும்படி அனுப்பப்பட்டார்கள்..." *(C123) (*தமிழ் – *C144)*

"...இப்படியாக கிபி 1846-இல், 2300 நாட்களின் முடிவில், மேலே காட்டியபடி ஒழுங்குபடுத்தப்படாத கிறிஸ்தவ உட்கருவைக் காணமுடிந்தது. இவர்கள், சபைகள் எளிமையான விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதில் 'சீஷர்கள்' என்கிற சபையுடன் ஒத்திருந்தது மாத்திரமல்ல, வேதத்தைத் தவிர மற்ற எல்லா கோட்பாடுகளையும் அகற்றியதோடு குருவானவர்களின் பட்டங்களையும் நீக்கிப்போட்டதில் அவர்களோடு இசைந்து இருந்தார்கள்; மேலும், அவர்கள் வெளிப்புறமான ஞானஸ்நானம் என்கிற கருத்தில் பேப்டிஸ்ட் சபை உடன் இசைந்து இருந்தார்கள். மேலும், லூத்தர் உடன் போப்பின் ஆட்சிமுறைதான் "பாவ மனிதன்" என்கிற கருத்தில் இணைந்து இருந்ததோடு, கீழ்த்தரமான நிலையில் உள்ள இந்தச் சபை வேசிகளுக்கும் அருவருப்புகளுக்கும் தாய் என்கிற கருத்தோடும் இணக்கம் காட்டினார்கள்; இவர்கள் எந்தவிதமான விட்டுக்கொடுக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமலும் அல்லது உலகத்தோடு எந்த உறவும் வைத்துக்கொள்ளாமலும் தனித்து நின்று முக்கியமான பக்தி, சர்வவல்லமையுள்ள தேவனிடத்தில் வைக்கக்கூடிய எளிமையான நம்பிக்கை, அவருடைய மாறாத கட்டளைகளில் விசுவாசம் வைத்தல் போன்றவைகளைக் கற்றுக்கொடுத்தார்கள்..." *(C119) (*தமிழ் – *C136)*

## தானியேலின் தீர்க்கதரிசனங்கள்

"2300 நாட்கள் என்பது 1846-ஐ சுட்டிக்காட்டியது. அந்தக் காலம்தான் போப்பு மார்க்கத்தின் கொள்கைகளாலும், பிழைகளாலும் மாசுபடுத்தப்பட்ட தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் காலம் ஆகும். மேலும் இதன் நிறைவேறுதலை நாம் பார்த்திருக்கிறோம். அந்தக் காலத்தில் சுத்திகரிக்கப்படுதல் நிறைவேறிவிட்டது என்பதையும் நாம் கவனித்திருக்கிறோம். தானியேல் 8:13, 14-இல் 1260 நாட்கள் அல்லது காலம், காலங்கள், அரைக்காலம் இந்தக் காலமாகிய போப் மார்க்கத்தின் துன்புறுத்தும் காலத்தின் ஆரம்பத்தையும் முடிவு காலமாகிய 1799-இல்அ தன்மு டிவையும்,ந ாம்ப ார்த்திருக்கிறோம். 1290 என்பதுதீ ர்க்கதரிசனத்தின் இரகசியத்தை அறிந்துகொள்ளும் காலத்தின் ஆரம்பம் கிபி 1829 என்பதையும், அது உச்ச நிலையை அடைந்து கிபி 1844-இல் இரண்டாம் வருகையின் இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும் அது குறிப்பிட்டது என்பதையும் நாம் பார்த்தோம். ஆண்டவரின் முன்னறிவிப்பின்படி அவரது உண்மையான வருகைக்கு முப்பது வருஷங்களுக்கு முன்பதாகவே புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனை சந்திக்கச் சென்றார்கள். முன்னரே சொல்லப்பட்ட காத்திருத்தலும்

நிறைவேறியது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். மேலும், பதினைந்து வருஷங்களாக "இதோ, மணவாளன்" என்கிற நடு ராத்திரி சத்தம், சென்றுவிட்டது என்பதையும் பார்த்தோம். 1335 நாட்கள் குறிப்பிடுகிற 1874 தான் நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையின் சரியான தேதி என்பதையும் மிகவும் சந்தோஷத்துடன் பார்த்தோம். தானியேல் 12:7-13 அந்த நாளிலிருந்து தேவ திட்டத்தின் ஆச்சரியமான இரகசியங்கள் தெளிவாக வெளியாக்கப்பட்டு வருவதின் மூலம் நாம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை அனுபவித்து வருகிறோம்." *(C305)* (தமிழ் – *C397)*

## லூசிஃபர்

யேகோவா தேவனுடைய சிருஷ்டிப்பின் "நாளின்" துவக்கத்தில், 'அதிகாலையின் மகன்' (ஏசாயா 14:12) என்னும் அர்த்தமுடைய, அதாவது "பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாகிய," லூசிஃபர் என்ற நாமத்தில், வேத வசனங்களில் பெயரிடப்பட்ட ஓர் அற்புதமான சிருஷ்டிப்பை அவர் உண்டாக்கினார். தேவன் இந்தப் பூமியின் ஆதாரங்களை ஸ்தாபித்தபோது, அதை ஒரு மாபெரும் பொதுக்காட்சி அரங்கத்தின் மேடையாகவும், அதன் மீது "தூதருக்கும், மனுஷருக்கும் காட்சியாக" (1 கொரிந்தியர் 4:9) யுகங்களின் நாடகம் இயற்றப்படுவதற்கும் தயார்படுத்தினார். லூசிஃபர் ஏகமாய்ப் பாடிய "விடியற்காலத்து நட்சத்திரங்களில்" ஒருவன் ஆவான். (யோபு 38:7) சிறிது காலத்திற்குப் பிறகு, இந்த லூசிபர் ஒரு தூய்மையற்ற இலட்சியத்தினால் ஆட்கொள்ளப்பட்டார்; 'நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்' என்று அவன் கூறினான் (ஏசாயா 14:13, 14 முதலியன) அவரிடத்தில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதும் (எசேக்கியேல் 28:15) அவன் தேவனுடைய எதிராளியான பிசாசாக மாறினதுமான இந்த நாளில்தான் அவன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்! (லூக்கா 10:18)

நிச்சயமாக யேகோவா அவனை அங்கேயே அப்போதே அழித்திருக்க முடியும் (மேலும் இறுதியில் அவர் – எபிரெயர் 2:14). ஆனால் அவர் தன்னை வெளிப்படுத்த வேறு வழியைத் தெரிந்தெடுத்தார், அதாவது சாத்தானைத் தொடர அனுமதித்து, ஆனால் இறுதியில் மற்றெல்லோரின் நன்மைக்காக எல்லா தீமைகளையும் அதிகாரத்தால் நீக்கும் வழியைத் தெரிந்தெடுத்தார். (யோபு 1:6-12; 42:12–ஐக் கவனத்தில்கொள்ளவும்)

தன்னை முற்றிலும் அழிக்காமல் இருப்பது யேகோவா தேவனுடைய ஞானம் மற்றும் கிருபையைத் தவறாகப் புரிந்துகொண்டு, அது அவரின் இயலாமை என்றெண்ணி, சாத்தான் துணிவுக்குமேல் துணிவுகொண்டான். மேலும், ஏற்றகாலத்தில் லோகோஸ் – "விடியற்காலத்து நட்சத்திரம்" மற்றுமொரு (வெளி. 22:16) – தேவனுடைய வல்லமையான கரத்தின்கீழ் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகமாற தம்மை தாழ்த்தினபோது, அவரை அழிக்கவும், இதனால் தேவனின் திட்டத்தை முற்றிலுமாக முறியடிக்கவும் சாத்தான் ஒரு மாபெரும் முயற்சியை மேற்கொண்டான். யூதேயாவின் பெத்லகேமில் இயேசு பிறந்த சமயத்தில் இராஜாவாக இருந்த ஏரோதுவின் பொறாமையைத் தூண்டுவதன் மூலம் அவன் அந்த முயற்சியைத் துவங்கினான். ஆகவே, பெத்லகேமின் சகல ஆண் பிள்ளைகளும் ஒழித்துக்கட்டுவதற்காகக் கொல்லப்பட்டனர், ஏனென்றால் அது ஏரோதுவின் பொறாமைக்குரிய விஷயமாகும். (மத். 2:16) பினனர், இயேசு தம்முடைய எல்லாவற்றையும் யேகோவாவிடம் அர்ப்பணித்தப் பிறகு, சாத்தான் மீண்டும் முயற்சி செய்தான், ஆனால் இன்னும் மெல்லிய நயத்துடன், தேவனுக்கு முன்பாக இயேசு தமது நிலையை விட்டுக்கொடுக்கும்படி முயற்சி செய்தான் (மத். 4:3-10); ஆனால் அவன் தோல்வியுற்றான்.

**10**
சந்தேகத்திற்கு இடமின்றி, சாத்தான் இயேசுவின் பாதையில் அவரைத் தடுமாறச் செய்வதற்கு அல்லது அவரை வீழ்த்துவதற்கு வீசிய தடைகள் பல இருந்திருக்கும்; இவை அனைத்தும் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், அவன் இறுதியில் இயேசுவின் சீஷர்களில் ஒருவரான யூதாசை ஏமாற்றுவதில் வெற்றி பெற்றான். மேலும் இவரேதான் தன் எஜமானுக்கு துரோகியாகவும் மாறினார். யூதாஸ் இராப்போஜனத்தில் இருந்தார், மற்றும் அவரது கால்களைக் கழுவும்வரை அங்குப் போதுமான நேரம் இருந்தார் –

"தம்முடைய சீஷர்களுடைய இருதயங்கள் உண்மையாய் இருந்ததைக் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்களை அவர் தம்முடைய சீஷர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் குறைவுகளை மூடத்தக்கதாக, தம்முடைய பலியின் புண்ணியத்தை அவர்களுக்கு சுமத்தப்பட்டதாக எண்ணப்பட்டது; இவைகளுக்கான முழுச் சாட்சியும் பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர்களின் சார்பிலான கர்த்தருடைய பாவநிவாரணபலியானது, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனப் பரிசுத்த ஆவி பகிர்ந்த சாட்சியின் மூலம், இவர்களுக்கு வழங்கப்படப்போகின்றது. ஆனால் இவர்கள் மத்தியில், ஒருவருடைய இருதயம் சுத்தமாக இருக்கவில்லை. நமது கர்த்தர் யூதாசைவிட்டுக் கடந்துபோகவில்லை, மாறாக மற்றவர்களுக்குச் செய்வதுபோல யூதாசின் பாதங்களையும் கழுவினார்; யூதாசின் துரோகத்தை அறிந்த நிலையிலும், யூதாஸ் ஏற்கனவே பிரதான ஆசாரியர்களுடன் பேரம் பேசிவிட்டார் என்றும், தனது தீயத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தகுந்த தருணத்திற்காக மாத்திரமே காத்துக்கொண்டிருந்தார் என்றும் அறிந்த நிலையிலும், கர்த்தர் யூதாசின் பாதங்களைக் கழுவினார்."

"நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளை மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், அந்த வார்த்தைகளையும், பின்னர் யோவான் 13:18, 26, 27, 28-ஆம் வசனங்களிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையும் யூதாஸ் கண்டிப்பாக புரிந்துகொண்டிருப்பார். யூதாசையும் அவனுடைய உண்மையற்ற தன்மையை பொதுவான விருந்தோம்பலையும் கூட்ட மீறுவது பற்றிய தீர்க்கதரிசனத்தையே நமது கர்த்தர் மேற்கோள் காட்டினார். இவைகள் எதுவும் யூதாசை அசைக்கவில்லை; யூதாஸ் தனது போக்கை மாற்றிக்கொள்ளத்தக்கதாக, இவைகளில் எதுவும் அவனது இருதயத்தின் கவனத்தை ஈர்க்கவில்லை. இவ்வாறாக யூதாஸ் குற்றஞ்சாட்டப்படுவதற்குக் காரணமான அவரது துணிகரத்திற்குப் பலமான ஆதாரத்தைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் துணிகரத்திற்கான இந்த ஆதாரமானது, யூதாசை 'கேட்டின் மகன்' என்று நம்முடைய கர்த்தர் பெயரிட்டு அழைத்து, 'அவன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்' என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளுக்கான அர்த்தத்தை இன்னும் வலியுறுத்துகின்றது. 'என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்' என்பதே சங்கீதத்தில் இடம்பெறும் வசனமாகும்." *(R3543:3)*

## ஆட்டுக்குட்டி: தம்முடைய பலியில் கிறிஸ்து இயேசு மாத்திரமே

"ஆட்டுக்குட்டி என்பது ஒரு விசித்திரமான குற்றமற்றதும், தற்காத்துக்கொள்ளவோ அல்லது எதிர்க்கவோ முற்றிலும் தயாராக இராததுமான விலங்காகும், ஆகவே இது, எதிர்க்காதவரும், தமது உரிமைகளையும் பூமிக்குரிய நலன்களையும் முதற்பேறானவர்களின் சார்பாக முழுமையாகவும் சுதந்தரமாகவும் ஒப்படைத்த நமதாண்டவருக்குப் பொருத்தமான பாடம், அல்லது நிழலாகும்..."

"கர்த்தரின் பலியில் அவரோடேகூட பங்கெடுப்பதைக்குறிக்கும் சபையைப் பற்றின நிழல்கள் உள்ளன; ஆனால் இந்தப் பஸ்கா நிழலானது இவற்றில் ஒன்றல்ல. பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நம்முடைய கர்த்தராகிய இயேசுவை 'உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்று அடையாளப்படுத்துகிறது. (யோவான் 1:29) ஆனால் உலகத்தின் பாவம் இன்னும் முற்றிலும் அகற்றப்படவில்லை. நம்முடைய கர்த்தர் தம்முடைய புண்ணியத்தை இன்னும் உலகத்திற்காகப் பிரயோகப்படுத்தாமல், மாறாக விசுவாச வீட்டாருக்கு மாத்திரமே வெளிப்படையாக பிரயோகப்படுத்தியுள்ளார். மற்றொரு பலியில், நமதாண்டவரையும், திருச்சபையையும் ஒன்றிணைத்தவாறு பலிசெலுத்துவதை அடையாளப்படுத்த, தலை மற்றும் அங்கங்களாக, மிருகத்தின் உடல் துண்டுகளாக வெட்டப்பட்டு, தலையுடன் பலிபீடத்தின்மீது வைக்கப்பட்டது, கிறிஸ்து இயேசுவை தலையாகவும், திருச்சபையை அவருடைய அங்கத்தினர்களாகவும் அடையாளப்படுத்துகிறது. (யாத்திராகமம் 29:15-18) ஆனால் பஸ்கா பலியானது பிரிவுற்றதாக இராமல் இருப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அதை முழுவதுமாக புசிக்கப்பட வேண்டும் – ஓர் எலும்பும்கூட முறிக்கப்படக்கூடாது. இது கிறிஸ்துவையும் திருச்சபையையும் குறிக்காமல், மாறாக அவருடைய பலியில் கிறிஸ்துவை மட்டுமே குறிக்கிறது." *(SM 558, 559)*

## கிறிஸ்து – "அப்பம்"

"அப்பம் என்பது, உணவு அனைத்திற்குமான அடையாளமாய் இருப்பதுபோல (ஆம், கோதுமையில் அனைத்து விதமான ஊட்டச் சத்துக்களும் சரியான விகிதத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது உண்மையே), இந்த அடையாளம் போதிப்பது என்னவெனில், கிறிஸ்து கொடுக்கப்போகின்றதான ஜீவனை, ஒருவன் பெறவேண்டுமெனில், அது அவரது பலியின் பலன் என்று அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். நாம் ஜீவிக்கத்தக்கதாக அவர் மரித்தார். அவர் மனமுவந்து, விரும்பி ஒப்புவித்ததுமான, உரிமைகளையும், சிலாக்கியங்களையும், அவரில் விசுவாசம் வைத்து, அவரையும், அவரது போதனைகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவராலும் புசிக்கவும், பயன்படுத்தவும், சொந்தமாக்கிக்கொள்ளப்படவும் வேண்டும்; இப்படிப்பட்டவர்கள் ஆதாமினால் இழந்து, கிறிஸ்துவினால் மீட்கப்பட்டதுமான உரிமைகளுடனும், சிலாக்கியங்களுடனுமுள்ள பரிபூரண மனுஷீகச் சுபாவத்தினால் தரிப்பிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். வானத்திலிருந்திறங்கின இந்த அப்பத்தைப் புசித்தால் மாத்திரமே ஒழிய, மற்றபடி எவரும் நித்திய ஜீவனைப் பெறமுடியாது. இது தற்காலத்தினுடைய விசுவாசிகளுக்கு மாத்திரமல்லாமல், இனிவரும் யுகத்திலுள்ளவர்களுக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. அவர்களுக்கான ஜீவிக்கும் உரிமைகளும், சிலாக்கியங்களும், அவரது பலியின் மூலமாக வந்ததென அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பமானது, அவரது பலியை ஏற்றுக்கொள்வதன் மூலமான நம்முடைய நீதிமானாக்கப்படுதலை விளக்குகின்றதாய் இருக்கின்றது." *(R3879:6)*

## கிறிஸ்து – "ஜீவ அப்பம்"

"...நீதிமானாக்கப்படுதலுக்கு அவசிமானது, **கிறிஸ்துவை ஜீவ அப்பமாக ஏற்றுக்கொள்வதாகும்;** இந்த நீதிமானாக்கப்படுதலுக்கு முன்னதாக, தகப்பனாகிய ஆதாமின் மீறுதல் மூலமாக நமது சந்ததியின்மேல் மரணம் கடந்து வந்துள்ளதால், நமக்குள் ஜீவன் இல்லை என்பதையும், தகப்பனாகிய ஆதாம் மீதும், அவர் காரணமாக அவரது சந்ததியின் மீதுமுள்ள தண்டனையைச் சந்திக்கத்தக்கதாகக் கர்த்தராகிய இயேசு மாம்சமாக்கப்பட்டார் என்பதையும், இப்பொழுது, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய இந்த இலவசமான கிருபையை ஏற்றுக்கொள்பவர்களும், **கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்பவர்களும்,** உலகத்தின் ஜீவனுக்காக தமது ஜீவனை ஈடுபலியாக வழங்கின அபிஷேகம்பண்ணப்பட்டவரில், தேவன் ஏற்பாடுபண்ணியுள்ள மாபெரும் நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களில் பங்குகொள்ளுபவர்களுமே புசிக்கின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். **யாரொருவன் இந்தஉ ண்மையைம னதளவில்ஏ ற்றுக்கொண்டு,த னதுஇ ருதயத்திலேஅ தனைபு சிக்கின்றானோ,அ வனே மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கிறவனாக அடையாளப்படுத்தப்படுகிறான்—அதாவது, அவருக்குள் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் (அல்லது இந்த யுகத்தின் நீதிமானாக்கப்படுதல்) ஆகியவற்றில் பங்கடைவதாக அடையாளப்படுத்தப்படுகிறான்.**" *(R2652:1)*

## மத்தேயு 26:26

**"அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்."**

முதல் இராப்போஜனம் முற்றிற்று, இரண்டாவது துவங்கியாயிற்று; அவர் ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை எடுத்து அவர்களுக்கு வழங்கினார் என்று நாம் எங்கும் வாசிக்கவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு ஒரு காரணம் யாதெனில், அது முதல் இராப்போஜனத்திற்குச் சொந்தமானது, மற்றும் தெய்வீக கட்டளைகளுக்கு இணங்க, அதிலே ஒன்றையும் மீதியாக வைக்காமல் முற்றிலுமாகப் புசித்திருக்க வேண்டும் – அல்லது மீதியானால் அக்கினியால் சுட்டெரிக்கப்பட வேண்டும் (யாத்திராகமம் 12:10). அநேகமாய், பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நிஜத்தில், கிட்டத்தட்ட அவருடைய

சீஷர்களாகிவிட்டவர்களான முதற்பேறானவர்களுக்காகக் கொல்லப்பட்டதன் உண்மையை வலியுறுத்துவதற்காக இது இருக்கலாம். ஆகையால், அந்த ஆட்டுக்குட்டி, அவர்களது ஈடுபலியாகிய இயேசுவையும், இயேசுவை மாத்திரமே அடையாளப்படுத்துகிறது – அந்தப் பலியானது அவர்கள் பகிர்ந்துகொள்ள முடியாத விஷயமாகும் (அதாவது பகிரப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை). இயேசுவும் அவருடைய சீஷர்களும் புளிப்பில்லாத அப்பத்தை முதல் போஜனத்தோடு புசித்திருப்பார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அந்தப் போஜனத்தில் அவர் அதை அவருடைய சரீரம் என்று அறிவித்ததற்கான (அல்லது அடையாளப்படுத்தியதாக) எந்தக் குறிப்பிடுதலுமில்லை! இது முக்கியமானது: இயேசு ஒருவரே மீட்பர்! ஆகவே, இதைத்தான். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே;" என்று அப்போஸ்தலர் பவுலும் நமக்கு நினைவூட்டுகிறார் (1 கொரிந்தியர் 5:7). இயேசுவின் இந்தத் தனித்துவமும் புளிப்பில்லாத அப்பத்தின் அடையாளத்தில் இழக்கப்படவில்லை; ஏனென்றால் முதற்பேறானவர்கள் மரிக்காமல் இருப்பதற்காக பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதுப் போல, சில கோதுமையின் மணிகளும் (இதுவும் இயேசுவையே குறிக்கும்) நிலத்தில் விழுந்து சாக நேரிட்டது, செத்ததேயாகில் பிற்பாடு மிகுந்த பலனைக்கொடுக்கும் (யோவான் 12:24). ஆகவே, முதலாவது அடையாளமான, அப்பம், பஸ்கா ஆட்டுக்குட்டியைப் போல, இயேசுவையும், இயேசுவை மாத்திரமே அடையாளப்படுத்துகிறது; ஏனென்றால், நாம் இப்போது, தேவனுடைய கிருபையினால், "ஒரே அப்பமாக" அவருடன் ஒன்றிணைந்து இருப்பது என்பது, முதலில் நாம் அந்த ஒரே அப்பத்தில் பங்குபெறுகிறவர்களாக ஆனதால்தான் அல்லவா? (1 கொரிந்தியர் 10:16, 17-ஐ காண்க).

> "அப்போஸ்தலர் மறுக்காமல், முக்கியமாக அப்பம், நமக்காகப் பலியாகச் செலுத்தப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளமாக உள்ளது என்பதை வலியுறுத்துகிறார் ..." *(F465)* (தமிழ் – *F619)*

இந்த அப்பம் புளிப்பில்லாத மாவால் ஆனது, இது நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் பாவமற்ற தன்மையைக்குறிக்கும்; இதில் மாவு மட்டுமே மூலப்பொருளாக இல்லை. சில ஈரப்பதமுள்ள மூலப்பொருள் இல்லாமல் அப்பம் என்பதைத் தயாரிக்க முடியாது. இந்த விஷயத்தில், அந்த ஈரப்பதமுள்ள மூலப்பொருள் பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தும், எண்ணெயாகும். அப்பரிசுத்த ஆவியானது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவானவர் தம்மை அர்ப்பணித்து, யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் பெற்ற காலத்திலிருந்து, கல்வாரி சிலுவையில் அவர் மரிக்கும்வரை அவரில் வெளிப்படுத்தப்பட்டது. ஓர் ஊட்டமளிக்கும், ஜீவிக்க உதவும் போஜனமாக அப்பத்தை மாற்றும் அப்பஞ்சுடுதல் செயல்முறையானது, இயேசுவை பரிபூரணப்படுத்துகிற வெப்பத்தையும் சோதனைகளையும் அடையாளப்படுத்துகிறது. (எபிரெயர் 2:10; யாத்திராகமம் 12:8, 9)

**லூக்கா 22:19** - " ...என்னை (என் மரணத்தை) நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்."

அப்போஸ்தலர் பவுல் இவ்வாறாக அறிவிக்கிறார், "நீங்கள் இந்த அப்பத்தைப் புசிக்கும்போதெல்லாம்... கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1 கொரி. 11:26) சகோதரர் ரசல் இவ்வாறாகக் கூறுகிறார்:

> "...அப்போதிலிருந்து வருடந்தோறும் இராப்போஜனத்தைக் ஆசரிப்பது என்பது ஆண்டவரைப் பின்பற்றி வருபவர்கள் எல்லாருக்கும் ஒரு புதிய அர்த்தத்தை உடையதாக இருக்க வேண்டும் என்பதை சீஷர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை இது காட்டுகிறது. அதாவது பிட்கப்பட்ட அப்பம் ஆண்டவருடைய சரீரத்தையும், பாத்திரம் அவருடைய இரத்தத்தையும் குறிக்கிறது என்பதாகும். இந்தப் புதிய நியமம் அவரைப் பின்பற்றி வருபவர்கள்மேல் ஒரு சட்டமாக சுமத்தப்படவில்லை என்றாலும், மேலும் அதைச் சரியானபடி கடைபிடிக்க தவறும்பட்சத்தில் தண்டனை எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஆண்டவர், அவரை விசுவாசிக்கிறவர்களும், நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அவரை ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இப்படியாக அவர் உண்டுபண்ணின நினைவுகூருதலைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். இன்றைக்கும் அது அப்படியே இருக்கிறது. ஈடுபலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை "அவர் வரும்வரைக்கும்" என்ற இந்த எளிமையான நினைவுகூருதலில் இன்னும் காண்கிறது; "அவர் வரும்வரைக்கும்" என்பது நம்முடைய ஆண்டவரின் வருகைவரை அல்லது பிரசன்னம்வரை என்பதையல்ல. அறுவடை அல்லது இந்த

யுகத்தின் இறுதிவரை என்பதையல்ல, நம்முடைய ஆண்டவர் கூறியபடி, "தேவனுடைய இராஜ்யத்திலே நவமானதாய் இதைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும்" என்பதைக் குறிக்கும்; இதற்கேற்ப இதில் இன்னும் நிறைவான அளவுக்கு பங்குபெறும்படியாக அவருடைய வருகையில் அவருடையவர்கள், "திரைக்கு அப்பால் ஒவ்வொருவராகக் கூட்டிச் சேர்க்கப்படும்வரை அவரது ஈடுபலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை இந்த நினைவுகூருதலில் தொடர்ந்து காணும்." *(F465)* (தமிழ் – *F618 - 619)*

ஆனால், உண்மையில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் இராததும் இருக்க முடியாததுமான ஏதோ ஒரு விஷயம், அப்பத்தில் பிரதிபலித்தது; அஃது யாதென்றால் ஒரு பிரிக்கப்படாத கலப்பு இயல்பாகும்; ஏனென்றால், ஒரே அப்பத்தில் காணப்படுவதற்காக தங்கள் தனித்துவத்தை விட்டுவிட்ட கோதுமையின் பல மணிகளால் ஆனதுதான் ஓர் அப்பமாகும். இதைப்போலவே திருச்சபையின் அங்கத்தினர்களும், "அவரில்" காணப்படுகின்றவர்களாய் இருக்கின்றனர். ஆகவே, அப்பமானது நமக்காகப் பலியிடப்பட்ட நம்முடைய கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரத்தை முதன்மையாகக்குறிக்கிறது –

"...இது கூடுதலாக...அந்த இரத்தம் நம்முடைய மன்னிப்பை உறுதிப்படுத்துகிறது என்பதையும், ஆனால் இப்பொழுது அதற்கு மேலும், நாம் சபையின் அங்கங்களாகவும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகவும், புது சிருஷ்டியாகிய முதற்பேறானவர்களாகவும் இருந்து, நம்முடைய ஆண்டவரின் மரணத்திலும், அவருடைய பலியிலும் பங்கு பெறுகிறவர்களாகிறோம்; மேலும் அவர் இன்னொரு இடத்தில் கூறியபடி, "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக... நிறைவேற்றுகிறேன்" (கொலோசெயர் 1:24) என்பது நம்முடைய உடன்படிக்கையின் ஒரு பங்காக இருக்கிறது. 'அவருடைய மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு இருக்கிறோம்' என்ற வசனத்தில் உள்ள அதே அர்த்தம்தான் இங்கும் இருக்கிறது. இப்படியாக நம்முடைய ஆண்டவரின் மாம்சம் இந்த உலகத்திற்காகப் பிட்கப்படுகிற அப்பமாக இருந்தபோது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகளும், உண்மையானவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், புது சிருஷ்டியும், கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களுமானவர்கள் அந்த ஓர் அப்பத்தின் பகுதிகளாக எண்ணப்படுகிறார்கள். ஆகவே அந்த அப்பம் ஆண்டவர் நமக்காகச் செய்த பலி என்று உணர்ந்தப் பின்னர், அப்பம் பிட்கப்படுவது, முழுச் சபைக்கென பிட்கப்படுவது அல்லது பலியாகச் செலுத்தப்படுவது என உணர வேண்டும்; மேலும் அவரோடு மரிக்கும்படியாக அர்ப்பணம் செய்துகொண்ட அனைவரும், அவரோடு பிட்கப்படவும் அவருடைய பாடுகளில் பங்குள்ளவர்களாகும்படியாகவும் அந்த அப்பம் பிட்கப்பட்டது என்பதையும் உணர வேண்டும்." *(F466)* (தமிழ் – *F619 - 620)*

## "ஒன்றாகப் பிட்கப்படுதல்"

"...நமது கர்த்தருடைய பலியின் மூலமான நமது நீதிமானாக்கப்படுதலை, நாம் முதலாவதாகப் பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. முழுமையான கிறிஸ்து, அபிஷேகம்பண்ணப்பட்ட முழுக்கூட்டத்தாரும் தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, அநேக அங்கத்தினர்களை உடைய ஒரு சரீரமாக இருக்கின்றது என்றும், இந்தச் சபை, இந்தச் சரீரம் முழுவதும் பிட்கப்பட வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் கர்த்தர் இயேசுவின் சாயலாக வேண்டும் மற்றும் அவரது பலியின் அடிச்சுவடுகளில் நடக்க வேண்டுமென்றும் நாம் உணர்ந்துகொள்வதும் ஏற்றகாரியமாய் இருக்கின்றது (1 கொரி. 12:12-14). இதை நாம் நம்முடைய ஜீவியங்களைச் சகோதர சகோதரிகளுக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் செய்கின்றோம்; அதாவது இயேசு தம்முடைய ஜீவியத்தை நேரடியாய்த் தமது யூத சகோதரர்களுக்காய், ஆனால் உண்மையில் – பிதாவின் நோக்கத்தின்படி முழு உலகத்திற்காய் ஒப்புக்கொடுத்ததுபோல், நாமும் செய்வதின் மூலம் செய்கின்றோம்."

"இயேசு தம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காதது போன்று, நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர் தம்முடைய உண்மையான பூரண மாம்சத்தை, தம்முடைய மனுஷீகத்தைப் பலி செலுத்தினதுபோன்று, நாமும் உண்மையாய்ப்

பூரணமாய் இராததும், ஆனால் இயேசுவினுடைய புண்ணியத்தினால், பூரணமானதாகக் கருதப்படுகிறதுமான நீதிமானாக்கப்பட்ட நம்மைப் பலிசெலுத்திட வேண்டும். இதுபோலவே அப்பமும், பாத்திரமும் பாடுகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கோதுமை மணிகளானது, மனிதனுக்கான அப்பமாகுவதற்கு முன்னதாக நொறுக்கப்பட்டு, மாவாக்கப்பட வேண்டும்; அவைகளால் அதன் ஜீவனையோ. மணியாக அதன் தனித்தன்மையையோ தக்கவைத்துக்கொள்ள முடியாது. திராட்சப்பழங்களானது, உலகத்திற்கு ஜீவனளிக்கும் மருந்தாக வேண்டுமானால் அதன் சாறு அனைத்தையும் பிழிந்தெடுக்கப்படுகிறதான அழுத்தத்திற்கு அது அதனைக் கீழ்ப்படுத்தி, ஒப்புக்கொடுத்திட வேண்டும் மற்றும் திராட்சப்பழங்கள் எனும் அதன் அடையாளத்தை இழந்துபோய்விட வேண்டும். இப்படியாகவே கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரம் எனும் கூட்டத்தாரின் விஷயத்திலும் ஆகும். இப்படியாகக் கர்த்தருடைய ஜனங்கள் ஒரே அப்பத்திலும், ஒரே பாத்திரத்திலும் பங்கெடுப்பவர்களாய் இருக்கின்றார்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களுடைய வார்த்தையினுடைய அருமையையும், அழுத்தத்தையும் நாம் பார்க்கின்றோம்..." *(R5871:3)*.

## "அப்பம்" மற்றும் "பாத்திரம்"

"இந்த அப்பம் மற்றும் பாத்திரத்திற்கு இன்னும் கூடுதலான மற்றும் ஆழமான அர்த்தம் இருப்பதை அப்போஸ்தலர் பவுல் நமக்குக் காட்டுகின்றார். 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்' என்பதைப்பற்றின தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருந்தவர் அப்போஸ்தலர் பவுலேயாவார். அதாவது நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கமாய் இருக்கின்றோம் என்றும், இப்பொழுது அவருடைய பாடுகளில் பங்காளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், அவருடைய மகிமையின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும், அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர்களாகவும் இருப்போம் என்றுமுள்ள இரகசியத்தைக்குறித்தத் தெளிவான புரிந்துகொள்ளுதலை அப்போஸ்தலர் பவுலே பெற்றிருந்தார். இக்கண்ணோட்டத்தின்படிப் பார்க்கையில், அப்போஸ்தலர் விவரித்துள்ள பிரகாரமாக, பிட்கப்பட்ட அப்பம் என்பது கர்த்தர் இயேசு தனிப்பட்ட விதத்தில் பிட்கப்படுவதை மாத்திரம் குறிக்காமல், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதுமுள்ள அவருடைய மறைப்பொருளாயிருக்கும் அங்கங்கள் பிட்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் பாத்திரத்தில் பானம்பண்ணுவது என்பது, அவர் மனுக்குலத்தின் சார்பாக புது உடன்படிக்கையை முத்திரைப்பண்ணத்தக்கதாக, அவர் மரணத்தில் பங்கடைவதை மாத்திரம் உள்ளடக்கவில்லை. இன்னுமாக பாத்திரத்தில் அவரோடுகூட நாம் பங்கடையத்தக்கதாக, 'நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்' என்ற அவரது அழைப்பானது தற்காலத்தில் அவரோடுகூட உபத்திரவப்படுவதிலும், மரிப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும், ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை ஆரம்பித்து வைப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இக்கருத்து எத்துணைப் பிரம்மாண்டமாகவும், எத்துணை ஆழமாகவும், எத்துணைப் பரந்தமனப்பான்மையுடனும் காணப்படுகின்றது! கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதும், எதிர்காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடைவதற்கு எதிர்நோக்குவதும், எத்துணை அருமையான சிலாக்கியமாகும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, 'நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?' என்ற சீஷர்களுக்கான அவருடைய வார்த்தையிலுள்ள முக்கியத்துவத்தை நம்மால் காணமுடிகின்றது (மத்தேயு 20:22). இப்படிப் பங்குகொள்வதற்கென அழைக்கப்படுவதற்கு அனைவரும் பாத்திரமாய் இராததுபோல, அழைக்கப்பட்டவர்களில் அனைவரும்கூட இப்படிப் பங்குகொள்வதற்குரிய சிலாக்கியத்தை மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் உணர்ந்துகொள்ளமாட்டார்கள். நம்மில் ஒவ்வொருவரும் உறுதியுடன் யாக்கோபையும், யோவானையும் போன்று, கர்த்தரிடம், 'கர்த்தாவே, எங்களால் கூடும்,' நாங்கள் விருப்பத்துடன் இருக்கின்றோம் என்றும், உம்முடைய உதவியினால் நாங்கள் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வருவோம் என்றும் சொல்லுவோமாக. *(R3364:6)*

## மத்தேயு 26:27-28

**"பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது."**

இந்த பாத்திரம் எப்போது நினைவுகூருதலோடு அடையாளம் காணப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது: ஏனென்றால், நிஜமான பஸ்காவில் அதற்கு இடமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், இதற்கான ஓர் ஏற்றக் காரணத்தை நாம் காணலாம். ஏனென்றால் இந்தச் சந்தர்ப்பத்தில் இஸ்ரயேலர்கள் அனைவரும் ஒன்றுகூடி அதில் பங்கெடுத்திருப்பார்கள். இஸ்ரயேல் பொதுவாக முழு உலக மனுக்குலத்தையும் குறிக்கிறது; மற்றும் இந்த பாத்திரம், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, கிறிஸ்து இயேசுவின் பாடுகளில் பங்கேற்பதைக் குறிக்கிறது; ஆகவே, இந்த நிழலானது, பிதாவானவர் இயேசுவுக்கு ஊற்றிக்கொடுத்திருந்த பாத்திரத்தில், ஏற்றகாலத்தில் முழு உலக மனுக்குலமும் பங்காளிகளாக இருப்பார்கள் என்பதை அடையாளப்படுத்துவதாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய சித்தம் அதுவல்ல; கிறிஸ்துவும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் அவருடைய சபையும் மட்டுமே அந்தப் பாத்திரத்தில் பங்குகொள்பவர்களாக இருக்க வேண்டுமென்பதே அவருடைய சித்தம்.

> "நமது கர்த்தருடைய பாத்திரத்தில் பங்குகொள்வதற்கான சிலாக்கியமானது, உலகத்திற்குரியதல்ல. அவர்கள் கிறிஸ்துவினுடைய பாடுகளில் பங்கடைபவர்களாக இருக்கமாட்டார்கள்; ஏனெனில் சபை மகிமையடைவதோடு, அவருடைய பாடுகளிலும், மகிமையிலும் பங்கடைவதற்கான வாய்ப்புகள் அனைத்துமே முடிவடைந்துவிடும். 'நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்' முழுவதையும் பானம்பண்ணுங்கள் என்று கர்த்தர் கூறினார். உலகம் பானம்பண்ணுவதற்கு எதுவுமிராது. சபை வகுப்பாராகிய நாம், 'கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் [விட்டுவைக்கப்பட்ட] குறைவானதை நிறைவேற்றுகின்றவர்களாய் இருப்போம்' (கொலோசெயர் 1:24)." *(R5342:3)*

> "உலகமானது, இரத்தத்தில் பங்குகொண்டு, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுக்கும் என்று வேதவாக்கியங்களில் எங்குமே, அடையாளமான விதத்தில் காண்பிக்கப்படவில்லை." *(R5342:5)*

ஆனால் பாத்திரம் என்பது பஸ்காவின் வழக்கமான அநுசரிப்புக்குள் எப்பொழுதோ காலபோக்கில் வந்துவிட்டது; மேலும் ஆதாரப்பூர்வமாக, தெய்வீக ஒப்புதலுடன், புதிய நினைவுகூருதலை நிறுவ இயேசு தயாராக இருந்தபோது, அவருடைய பயன்பாட்டிற்காக அது ஏற்கெனவே வந்தாயிற்று!

> முக்கியமாக பாத்திரம் நம்முடைய பாவமன்னிப்பை அருளும் விதமாக அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது என்பதை அப்போஸ்தலன் மறுப்பதில்லை, மாறாக அவர் அதை வலியுறுத்துகிறார்..." *(F465)* (தமிழ் – *F619)*

மேலும் **தம்முடைய இரத்தம்** பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிறதாயிருக்கிறது என்று இயேசு அதைப்பற்றி பேசும்போது, இதைத்தான் குறிப்பிட்டார். "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" (எபிரெயர் 7:26). மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவால் மாத்திரமே, மற்றவர்களுக்காக – முழு மனுக்குலத்திற்காக, ஒரு சிறப்பான அர்த்தத்தில், இன்னும் குறிப்பாக சபையான நமக்காக (கலாத்தியர் 1:4; எபேசியர் 5:2, 25; தீத்து 2:14) தம்மையே மீட்கும்பொருளாகக் கொடுக்க முடியும். (மத்தேயு 20:28; 1 தீமோத்தேயு 2:6)

> "...அவருடைய மரணத்தினால், இயேசு தம்முடைய புண்ணியத்தின் பலனைச் **சபையாகிய நமக்குக்** கொடுத்தார். அப்பலன் யாதெனில், ஆதாமுக்குள் இழந்து, கல்வாரியில் முடிக்கப்பட்ட கிறிஸ்துவினுடைய பலியின் விலையேறப்பெற்ற புண்ணியத்தினால் மீட்கப்பட்ட அனைவருக்குமான 'நீதிமானாக்கப்படுதல்' என்னும் பூமிக்குரிய உரிமைகளே..." *(R4453:2)*

இருப்பினும், இந்தப் பாத்திரத்தை இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தது, அந்த நேரத்தில், அவர்களால் பகுத்துரைக்க முடிந்ததைவிட மிக ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அஃது எப்படி இருந்ததெனில், அதை அவருடன் "பகிர்ந்துகொள்ளவும்," அவரது பாடுகளில் பங்குகொள்பவர்களாகவும், ஏற்றகாலத்தில், அவருடைய மகிமையில் பங்குகொள்பவர்களாகவும்

இருக்கப்போவதற்கான ஓர் அழைப்பாக இருந்தது (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:12). இயேசு இதை ஏற்கெனவே, செபெதேயுவின் இரண்டு குமாரர்களான யோவான் மற்றும் யாக்கோபு ஆகியோரிடம், **தம்முடைய இராஜ்யத்தில்** அவர்களுக்கான இடத்தைப் பெறுவதற்காக, அவரது பாத்திரம் மற்றும் அவரது ஞானஸ்நானம் இரண்டையும் பகிர்ந்துகொள்ள அவர்கள் விரும்புகின்றனரா என்று கேட்டபோது பரிந்துரைத்திருந்தார். (மத்தேயு 20:20-22)

"நம்முடைய கர்த்தர் பலியின் பாடுகளைப்பற்றிக் கூறும்போது, அது அவருடைய 'பாத்திரம்' என்று குறிப்பிடுகிறார். கடைசி இராப்போஜனத்தில், அவரது மரணத்தின் நினைவுகூருதலின் போது, இந்தப் பாத்திரத்தை அடையாளமாகக் குறிப்பிடுகையில், 'இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்' (மத்தேயு 26:27, 28) என்று கூறுகிறார். அந்தப் பாத்திரம், நம்முடைய கர்த்தருடைய மரணத்தையும், தம்முடைய பூமிக்குரிய உரிமைகளை தியாகம் செய்த நம்முடைய கர்த்தருடைய பலியையும் குறிக்கும், புதிய உடன்படிக்கையை முத்திரைப் போடுவதற்குப் போதுமானதாக இருந்தது. அப்போஸ்தலர்களிடமோ, நம்மிடமோ, அல்லது யாரிடமோ அவருடைய சீஷர்களாக மாறவும், அவருடைய பாடுகளையும், அவரது பாத்திரத்தையும், மேலும் இவற்றின் வெகுமதிகளான – அவரது மகிமை, கனம் மற்றும் அழியாமையைப் பகிர்ந்துகொள்ளுமாறும் அவர் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும், அவர் பாத்திரத்தை வழங்குவதன் மூலம், புண்ணியத்தை நமக்கு வழங்கினார்; அல்லது, அவருடைய பலியின் புண்ணியத்தை, அவருடைய சீஷர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களான நம் மூலமாக வழங்கினார். அது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் அவர் இதைச் செய்தார்; ஏனென்றால், அப்போஸ்தலர் பேதுருவும் இதையே அறிவிக்கிறார். 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் நம்மை ஜெநிப்பித்தார்.' இயேசுவை முன்னறிந்தவர் இயேசுவின் மூலமாக நம்மையும் முன்னறிந்திருக்கிறார்." *(R4453:6)*

இயேசு தம்முடைய சீஷர்களிடம் அவற்றில் முழுவதையும் பானம்பண்ணுங்கள் என்று கேட்டுக்கொண்டபோது (பாத்திரம் – மத்தேயு 26:27) அவர்கள் **அனைவரும்** அதைப் பானம்பண்ண வேண்டும் என்று மட்டுமல்லாமல், ஆனால் எதுவும் மீதியாகாதவாறு அவர்கள் அதில் **அனைத்தையும்** பானம்பண்ண வேண்டும் என்பதையே அர்த்தப்படுத்தினார். அடையாளப் பூர்வமாகப் பேசினால், வேண்டுமென்றே, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக விட்டுவைக்கப்பட்டிருக்க வேண்டும் (கொலோசெயர் 1:24); ஆனால், சரீரம் இதைச் செய்தவுடன், கிறிஸ்துவின் உபத்திரவங்களும் முடிந்துவிடும்; ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அவற்றில் எதுவும் உலகத்திற்காக மீந்திருக்காது.

"...நமதாண்டவர் கடைசி இராப்போஜனத்தில் திராட்சப்பழரசத்தில் தாமே பங்கெடுத்த பின்பு, அவர் பாத்திரத்தை தம்முடைய சீஷர்களிடம் கொடுத்து, 'இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்' என்றார். அடையாளமானப் பாத்திரத்தைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுப்பதற்கு முன்பதாக நம்முடைய கர்த்தர், அந்த அதே பாத்திரத்தில் அவரும் பானம்பண்ணினார், மேலும், அதில் பங்கெடுப்பது என்பது அவருடைய சீஷர்களாக நாம் நம்முடைய விசுவாசத்திற்கு சான்று பகிர வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறார் என்பதாகும். இது அவமானம், துக்கம், ஏளனப் பழிப்பு, மற்றவர்கள் சார்பாக சுயத்தை வெறுத்தல் ஆகியவற்றின் பாத்திரமாகும். பிதா அவருக்காக ஏற்படுத்தினப் பாத்திரமென எஜமான் அதைப்பற்றிப் பேசினார். அவருடைய உபத்திரவங்களிலேயும், அவருடைய ஆவிக்குரிய சரீரத்தின் கடைசி அங்கத்தினர் மகிமைப்படுத்தப்பட்டவுடன் வரும் மகிமையையும் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தை நாம் பெறுவதற்காக, அவற்றில் சிலவற்றை அவர் நமக்காக விட்டுச் சென்றிருக்கிறார். நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் அவர் தமது சீஷர்களிடம் பாத்திரத்தை வழங்கியபோது, 'நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்' என்ற அவரது வார்த்தைகள், அவருடைய சீஷர்களாக இருக்கும் அனைவரும் அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், அவருடைய சீஷர்கள் அவற்றில் எதுவும் மீந்திராதபடிக்கு அதை முற்றிலுமாகப் பானம்பண்ண வேண்டும் என்பதை அர்த்தப்படுத்தினார். வேறு வார்த்தைகளில் கூற

வேண்டுமென்றால், கிறிஸ்துவின் உபத்திரவங்கள், இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே பிரத்தியேகமானது, அதன் துவக்கத்தில் அவர் தாமே அனுபவித்த உபவத்திரவங்களால் குறிக்கப்பட்டு, இராஜ்யத்தில் அவருடைய மகிமையின் வெளிப்பாட்டுடன் அது முடிவடைகிறது. ஆயிரமாண்டு யுகத்தின் போது உலகம் பானம்பண்ண கிறிஸ்துவின் உபத்திரவங்கள் எதுவும் இருக்காது. மீட்பருடன் உடன் சுதந்தரராவதற்கு அவர்களில் எவருக்கும் வாய்ப்பு இருக்காது, இந்தப் பாத்திரம் புது உடன்படிக்கைக்குரிய – புது சித்தம், அவருடைய சித்தம் அல்லது ஏற்பாடு மூலம், அவர் தமது பூமிக்குரிய உரிமைகளையும், பூமிக்குரிய கனங்களையும் ஆபிரகாமின் பூமிக்குரிய வித்துக்கும் அவற்றின் மூலம் உலக மனுக்குலத்திற்கும் மரபுரிமையாக வழங்குகிறார் என்று (நம்முடைய) எஜமான் கூறினார். புது உடன்படிக்கையை முத்திரையிட அவசியமானது, அவரது அந்த இரத்தமே. மேலும் அவருடைய பாத்திரத்தில் பங்குபெறவும், முத்திரைப் போடப்படுதலில் பங்குபெறவும், புது உடன்படிக்கை ஆசீர்வாதங்களை இஸ்ரயேலுக்கும், உலகிற்கும் வழங்குவதில் பங்குகொள்ளவும் நாம் அழைக்கப்படுகிறோம்." *(R4429:2)*

## "பாத்திரம்" நீதிமானாக்கப்படுதலைக் குறிக்காது

"சில அன்பான நண்பர்கள், நம்முடைய கர்த்தர் பானம்பண்ணின பாத்திரத்தில் நாமும் பானம்பண்ணுவதன் முக்கியத்துவத்திற்கு நாம் மிகவும் அதிகமான அழுத்தம் கொடுக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ...கிறிஸ்து பானம்பண்ணின பாத்திரத்தில் பானம்பண்ணாதவரையில் யாக்கோபோ, யோவானோ அல்லது யாதொருவரும்கூட அவருடைய சிங்காசனத்தில் அமர முடியாது. **கர்த்தருடைய 'பாத்திரம்' நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது என்று நினைப்பதில் நமது எதிரணியினர் ஆபத்தான பிழை செய்கிறார்கள்.** மாறாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள் மாத்திரமே அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணும் பாக்கியத்தைப் பெறுகிறார்கள். பாத்திரம் நம் பரிசுத்தமாக்கப்படுதலின் வழிமுறையைக் குறிக்கிறது. இதன் மூலம் பரலோக சுதந்தரத்திற்காகவும் உடன் சுதந்தரராவதற்கும், நமது நீதிமானாக்கப்பட்ட பூமிக்குரிய உரிமைகளைப் பரிமாறிக்கொள்கிறோம்." *(R4547:2)*

சகோதரர் ரசல் இங்கே, அநேகமாய் பாவநிவாரணபலியில் திருச்சபையின் பங்கை நம்பாத தனது எதிரணியினரின் – வாதத்தை எதிர்க்க முயற்சிக்கிறார் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. பாத்திரம் நீதிமானாக்கப்படுதலை மாத்திரமே குறிக்கிறது என்று இவர்கள் சொல்வது மிகவும் இயல்பானதே. இது தொடர்பாக இயேசு கூறுகிறார்: "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28).

மற்ற சந்தர்ப்பங்களில், சகோதரர் ரசல் அவர்களே "பாத்திரம்" நீதிமானாக்கப்படுவதைக் குறிக்கிறது என்று சுட்டிக்காட்டுவது போலத் தெரிகிறது; இந்த வார்த்தையைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடும் என்ற பயத்தில் அந்தப் பதத்தைப் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக, நாம் பரிசுத்தமாக்கப்படுவதற்கு முன்பே, இயேசுவின் இரத்தமே நம்மை நீதிமானாக்குகிறது... (*R4331:1; R5871:5*-யும் பார்க்கவும்)[11]

"...பாத்திரம் அடையாளமாக இருந்தது மற்றும் அது அவரது சொந்த மரணத்தையே சுட்டிக்காட்டியது. இது, உலகத்திற்கு அல்லாமல் அவரது பின்னடியார்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. அது அவர்களுக்காகச் சிந்தப்பட்டது, மேலும் பிதாவிடம் **அவர்கள் ஒப்புரவாவதற்கு அடிப்படையாக இருந்தது;** ஆனால் அது ஏற்றகாலத்தில் புது உடன்படிக்கையின் இரத்தத்தினால் – அந்த இரத்தத்தினால் மாத்திரமே புது உடன்படிக்கையானது தெளிக்கப்பட்டு, முத்திரைப் போடப்பட்டு, பயன் அளிக்கக்கூடியதாகும். இது புது உடன்படிக்கையின் முத்திரையிடப்படுதலுக்கான காலத்திற்கு பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே திருச்சபைக்கு வழங்கப்பட்டது, திருச்சபைக்கு, ஜெயங்கொண்டவர்களுக்கு, கிறிஸ்துவின் பலியில் பங்கேற்பதற்கான சிலாக்கியத்தை அளித்தது. **இது நீதிமானாக்கப்படுதல் என்னும் அர்த்தத்தில் மாத்திரமல்லாமல்,** பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது அவருடனான மரணம் என்னும் அர்த்தத்திலும் இருந்தது." *(R4331:3)*

"நித்திய உடன்படிக்கையின் இரத்தமானது 'இயேசுவின் இரத்தம்,' அவருடைய பலியாகும். இதன் புண்ணியத்தின் மூலம் விசுவாசிகள் இப்போது கிருபை அல்லது சாராளின் உடன்படிக்கையின்கீழ் 'நீதிமானாக்கப்படுகிறார்கள்'..."

"எபிரெயர் 10:29-இல், உடன்படிக்கையின் இரத்தமே பரிசுத்தஞ்செய்தது, மாறாக நீதிமானாக்கப்பட்ட இரத்தம் அல்ல, அதற்கு எதிராக பாவஞ்செய்தால், இரண்டாம் மரணத்திற்குத் தகுதியானதாகிறது என்பதையும் கவனியுங்கள். **இயேசுவின் இரத்தத்தில் விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம்.** அவருடைய பாத்திரத்தை – புதிய உடன்படிக்கையின் இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்கான நமது அர்ப்பணிப்பின் மூலம் **பரிசுத்தமாக்கப்படுகிறோம்...**" *(R4321:2, 4)*

இருப்பது ஒரே ஒரு இரத்தம்; அது இயேசுவின் இரத்தம்; ஆனாலும் மாறுபட்ட நிலைப்பாடுகளிலிருந்து இதைக் காண முடியும்! **அவருடைய இரத்தம்** மாத்திரம்தான் பாவமன்னிப்புண்டாகும்படி சிந்தப்பட முடியும். "பாத்திரம்" என்பதன் மூலம் நாம் சாதாரணமாக இயேசுவுடனான உடன் சுதந்தரர் என்று அர்த்தங்கொண்டால், அது நீதிமானாக்கப்படுதலைக் குறிக்க முடியாது. இருப்பினும், இந்த வார்த்தையை அதன் பரந்த அர்த்தத்தில் நாம் பயன்படுத்தினால், நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது என்பதாக நமக்குத் தோன்றுகிறது!

"...இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கையில், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுக் காணப்படும் நமது இனத்தை, தெய்வீகப் பிரமாணத்தை மீறாமல் ஜீவனுக்குள் சீர்ப்பொருந்துவதற்கு இயேசுவின் மரணம் அவசியமாய் இருப்பதை அவருடைய சிந்தப்பட்ட இரத்தம் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது..." (*R4591:2;* மேலும் பார்க்கவும் *R4591:5* - "திராட்சப்பழரசமுடைய பாத்திரமானது...")

## உலகத்தால் பகிர்ந்துகொள்ளக்கூடாத – பாத்திரம்

**யோவான் 6:53 - "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை."**

"இந்த அதிகாரத்தில், கர்த்தர் தம்மைப் பரலோகத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் என்று கூறியதின் நிமித்தமாக, முறுமுறுத்தவர்களாகவும், தம்மை விசுவாசியாதவர்களாகவும் காணப்பட்ட யூதர்களிடம்அ வர்பே பசியவைகள்இ டம்பெ றுகின்றது. "மாம்சத்தைப்பு சியாமலும்,. . . இரத்தத்தைப் பானம்பண்ணாமலும்" எனும் அவரது வார்த்தைகளானது, **ஆழமான ஆவிக்குரிய அர்த்தம் உடையவையாகவும், உத்தம இஸ்ரயேலர்களால் மாத்திரம் பெற்றுக்கொள்ள முடிகின்றதாகவும் காணப்படுகின்றன.** மேலும் இது இன்றும்கூட உண்மையாகவே இருக்கின்றது. உலகமானது அடுத்த யுகத்தில், இயேசுவினால் கையாளப்படும்போது, அவரது மாம்சத்தைப் புசிப்பதற்கும் அவரது பலியினுடைய புண்ணியங்களைத் தங்களுடையதாக்கிக்கொள்வதற்குரிய வாய்ப்பினை நிச்சயமாய்ப் பெற்றுக்கொள்ளும்; எனினும் அவர்கள் அவரது பாத்திரத்தில் பங்குகொள்வதற்கு, அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்குரிய எந்த வாய்ப்பினையும் அடையமாட்டார்கள். அடையாளப் பாஷையில் பாத்திரமானது, பலியாக்கப்பட்ட ஜீவனைக் குறிக்கின்றது. பாத்திரத்தினால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்துவினுடைய பாடுகளில், உலகத்திற்கு எந்தப் பங்கெடுப்பும் கிடைக்கப்பெறாது..."

"**உலகமானது, இரத்தத்தில் பங்குகொண்டு, இவ்வாறாக கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுக்கும் என்று வேதவாக்கியங்களில் எங்குமே, அடையாளமான விதத்தில் காண்பிக்கப்படவில்லை...**" *(R5342:2)*

## "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்கா 22:19)

"கடைசி இராப்போஜனம் என்று அழைக்கப்பட்ட அவருடைய நினைவுகூருதலான இராப்போஜனத்தை நம்முடைய கர்த்தர் ஏற்படுத்தினபோது, இது...ஒரு புதிய அடையாளமாகவும், நிழலான பழைய பஸ்காவுடன் சம்பந்தமுள்ளதாகவும், அதன் மேல் கட்டப்பட்டதாகவும், இருப்பினும் அதன் ஒரு பகுதியாக இல்லாமல், நிஜமானதற்கு ஒரு ஞாபகார்த்தமாகத்தான் இருந்தது, நாம் வாசிக்கிறபடி, அவர் 'அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது (இது நிஜமான ஆட்டுக்குட்டியான எனக்கு அடையாளமாக இருக்கிறது, இது என் மாம்சத்திற்கு அடையாளமாக

இருக்கிறது) என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.' நம்முடைய ஆண்டவரின் நோக்கம் இதன்படி நிஜமான முதற்பேறானவர்களுக்கும், விசுவாச குடும்பத்தாருக்கும் தம்மைப் பின்பற்றிவருபவர்களுக்கும், அவர்களின் மனதில் தாம் தான் நிஜமான ஆட்டுக்குட்டி என்ற உண்மையை தம்மைப் பின்பற்றுபவர்களின் மனங்களில் பதிய வைக்க வேண்டும் என்பதுதான் என்று தெரியவருகிறது. 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று சொல்லுவது, முந்தயதைப் பின்பற்றிய அவருடையவர்கள், அது இப்பொழுது நிறைவேற்றப்பட்டு தேவையற்றதாகிவிட்டதால், இந்த புது ஏற்பாடு நடைமுறைக்கு வருகிறது என்பதை உணர்த்துகிறது. 'போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புது உடன்படிக்கையாயிருக்கிறது.' உடன்படிக்கையின் இரத்தம், புது உடன்படிக்கைக்கு முத்திரை இடுகிற இரத்தம். 'நீங்கள் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.' *(F464) (தமிழ் – F617 )*"

"இந்த நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகையில், அவர் ஆண்டவருடைய வார்த்தைகளாகிய, 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்பதைக் குறிப்பிட்டு, பின்னர் 'நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்' என்றும் குறிப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 11:24-26). நம்மை அன்புகூர்ந்து, நம்மை வாங்கினவரோடுகூட நாம் பங்கடையப் போகின்றதான கனங்கள், மகிமை மற்றும் சந்தோஷம் எனும்ந வமானதி ராட்சரசத்துடன்ந ாம்கெ ாண்டாடப்பே ாகின்றதானஇ ராஜ்யத்தின்க ாலம் வருவதுவரையிலும் இந்த மாபெரும் செய்கையை நாம் நினைவுகூர வேண்டும் என்பதே இவ்வசனத்தில் இடம்பெறும் கருத்தாகும். அப்போஸ்தலன் (parousia) பரோசியாவரை, அதாவது தம்முடைய ஊழியக்காரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், அவர்களுக்குப் பலனளிக்கிறதற்குமெனக் கர்த்தர் பிரசன்னமாகும் காலம்வரை என்ற அர்த்தத்தில் குறிப்பிடாமல், மாறாக அனைவரும் சேர்க்கப்பட்டு, இப்படியாக இராஜ்ய வகுப்பார் அனைவரும் நிறுவப்பட்டு, மகிமைப்படுத்தப்படுவதுவரை என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார்."

"அதே அப்போஸ்தலன், அதே நிருபத்தில், சபை ஒருவரோடொருவரும், கர்த்தரோடும் கொண்டிருக்கும் ஐக்கியத்தையும், ஒருமையையும் குறித்த கருத்தினை வலியுறுத்துகின்றார், அவர் கூறியுள்ளதாவது: 'நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;' 'கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம், ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம், உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்' (1கொரிந்தியர் 10:16, 17; 12:12; KJV & திருவிவிலியம்). தேவனுடைய கண்ணோட்டத்தில், தெரிந்துகொள்ளப்பட்ட தலை மற்றும் அவரது சரீரத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட அங்கத்தினர்களை உள்ளடக்கின ஒரு மாபெரும் மேசியா காணப்படுகின்றார் என்பதே கருத்தாய் இருக்கின்றது, இவர்கள் அனைவரும் ஒரே அப்பமென, தேவனுடைய கண்ணோட்டத்தில், உலகம் நித்திய ஜீவன் பெறுவதற்கான அப்பமாய்க் காணப்பட்டும், இந்த அடையாளம் நிறைவேற வேண்டுமெனில், அவரது மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாகவே, ஒவ்வொருவரும், மற்றும் அனைவரும், நிச்சயமாக பிட்கப்பட்டும், ஒவ்வொருவரும், மற்றும் அனைவரும் கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணம் எனும் அவரது பாத்திரத்தில் நிச்சயமாக பங்கெடுக்கவும் வேண்டும். இந்தப் பாடுகள் அனைத்தும் நிறைவேறின பிற்பாடே, உலகத்தின் விஷயத்திலுள்ள புதிய யுகத்திற்கான, புதிய நாளுக்கான, சபிக்கப்படுதலுக்குப் பதிலாக ஆசீர்வாதத்தின் நாளுக்கான, மரிப்பதற்குப் பதிலாக கர்த்தருடைய திரும்பக்கொடுத்தலின் நாளுக்கான, விழுகைக்குப் பதிலாக தூக்கிவிடுதலின் நாளுக்கான, காலம் வருகின்றதாக இருக்கின்றது." *(R3880:6)*

# 1 கொரிந்தியர் 10:16, 17

**"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா [பொதுவான பங்கெடுத்தல் – மொன்ட்கோமரி மொழிபெயர்ப்பு] நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்."**

அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறபடி, அப்பத்தையும் பாத்திரத்தையும் இயேசுவோடு பகிர்ந்துகொள்வது என்பது, அவருடைய பாடுகளில் ஒரு பொதுவான ஐக்கியத்தை, ஒரு பொதுவான பங்கெடுத்தலைக் குறிக்கிறது.

> "...நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.' இந்தப் பத்தியானது ஆங்கிலத்தில் பார்க்கும்போது மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் இருக்கிறது. ஆனால் இரத்தம் மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தைக்குறித்து இருமுறை ஐக்கியம் என்று கிரேக்க வார்த்தையில் வந்துள்ளதை நாம் சுட்டிக்காட்டும்போது, இந்தப் பத்தியானது இரட்டிப்பாக வலுவாகிறது. இங்கு வரும் கிரேக்கப்பதம் **கொயினோனியா** *(koinonia)* ஆகும். இது கூட்டாண்மை அதாவது பங்கேற்றலைக் குறிக்கிறது." *(R4435:6)*

ஆயினும்கூட, எந்தவொரு பாவநிவாரணப் புண்ணியத்திலும் நாம் பங்களிக்கவுமில்லை, பங்களித்திருக்கவும் முடியாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசுவின் ஈடுபலியான மீட்பின் இந்த அம்சத்தில் நாம் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெறவில்லை. மாறாக, நம்முடைய கர்த்தரின் உபத்திரவங்களில், பாவநிவாரண பலிகளாக – அதாவது, உலகத்திற்கான அவரது ஈடுபலியினுடைய புண்ணியத்தின் வாய்க்கால்களாகும் பாக்கியத்தில் பங்குகொள்கிறோம்.

> "ஒரு மாபெரும் நீரூற்றின் தண்ணீர்கள் ஒரு பெரிய நகரத்தின் விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதின் திட்டமிட்ட நோக்கங்களை நிறைவேற்றிட இது பல குழாய்கள் மற்றும் அடைப்பான்கள் வழியாக அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு அடைப்பானிலும் இது ஒரே நீர்தான், ஏனெனில் ஒரே நீரூற்றில் இருந்து இவையனைத்தும் வருகிறது. அதன் புத்துணர்ச்சியான நீரைச் சுவைத்திட, நாம் அந்நீரைக்கொணர்ந்துவரும் அடைப்பானைக் குறிப்பிடுவோம், அல்லது அந்த நீரூற்றையே குறிப்பிடுவோம் அல்லது சில சமயங்களில் ஒன்றைக் குறிப்பிடுவோம். சில சமயங்களில் மற்றொன்றைக் குறிப்பிடுவோம். ஆகவே, நம்முடைய கர்த்தராகிய இயேசுவினுடைய பலியின் புண்ணியத்தினைப்பற்றி சிந்திக்கும்போது, நம்முடைய கர்த்தருடைய பலியான மரணத்திலிருந்துதான் – எங்கு எப்படிப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், எல்லா பாவ–நிவாரணப்புண்ணியங்களும் தோன்றின என்பதை நினைவில்கொள்ள வேண்டும். அவரே மீட்பர். அவருடைய இரத்தமே, ஆதாம் மற்றும் அவருடைய சந்ததியின்மீது மரண தண்டனையைக் கொண்டுவந்த ஆதாமின் பாவத்திற்கான பிராயச்சித்தத்தின் இரத்தமாகும். அந்த மீட்கும் பொருளில் யாரும் கூட்டவுமில்லை. அதிலிருந்து யாரும் எடுக்கவுமில்லை. இது தெய்வீகத் திட்டத்தில், 'தெரிந்தெடுக்கப்பட்டவர்களான' திருச்சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. அதினால் நாம் கர்த்தருடன் அவருடைய 'அங்கத்தினர்களாக' ஆவதற்கும், அவருடன் மரிப்பதால், அவருடைய பலியின் பங்காளர்களாகிய நாம் அவருடைய புண்ணியத்தைப் புதிய உடன்படிக்கையின் மூலம் மாம்சீக இஸ்ரயேலுக்கும், உலகத்திற்கும் தாழ்மையாகக் கொண்டுச்செல்லுவதற்குமான சிலாக்கியத்தைப் பெறுகிறோம். அவர்தான் அந்த ஜீவ ஊற்று, நாம்தான் குழாய்கள்." *(R4352:4)*

சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் (1 கொரிந்தியர் 12:12) என்னும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பொதுவான–ஐக்கியம் பற்றியதான விஷயத்திற்கு நாம் இப்போது வரலாம். இது, நிச்சயமாக, **இழந்த அடையாளங்களைப்**பற்றி சுட்டிக்காட்டுகிறது. அது இயேசு அந்தச் சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுத்த இரண்டு அடையாளங்களில் – அப்பம் மற்றும் திராட்சப்பழரசத்தில் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அப்பம் கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அது தயாரிக்கப்படும் செயல்முறையில் – நசுக்குதலானது – ஒவ்வொரு தனி மணியையும், இறுதியில் ஒரே அப்பமாகக் காணப்படுவதற்காக, அவற்றின் அடையாளத்தை இழக்கச் செய்கிறது. அதேபோன்றுதான், திராட்சப்பழரசத்திற்கும், அது தயாரிக்கப்படும் செயல்முறையில் – நசுக்குதலானது – ஒவ்வொரு தனி திராட்சையையும், இறுதியில் ஒரே திராட்சப்பழரசமாகக் காணப்படுவதற்காக, அவற்றின் அடையாளத்தை இழக்கச் செய்கிறது. இந்தச் சிந்தனை எவ்வளவு விலையேறப்பெற்றது! இது, நீங்கள் விரும்பினால், உண்மையான சீஷத்துவத்திற்கு மிகவும் அடிப்படை என்று இயேசு அறிவித்த அந்தச் **சுயத்தை வெறுத்தலை** வலியுறுத்துகிறது (மத். 16:24). எவர் ஒருவர் தன்னைத்தான் வெறுக்க விருப்பமுள்ளவராக இருக்கிறாரோ, அவரால் மட்டுமே இன்னொருவருக்குள் தன்னையே மறந்து இணைந்திட (absorbed) முடியும். "கிறிஸ்துவில்" இருப்பது என்பது ஒருவரின் சொந்த அடையாளத்தை அவருக்குள் இழப்பதாகும்; அப்படிப்பட்ட ஒருவரால் மட்டுமே அப்போஸ்தலர் பவுலைப் போலவே கூற முடியும், "...பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலாத்தியர் 2:20); மேலும், "கிறிஸ்து எனக்கு ஜீவன்..." (பிலிப்பியர் 1:21). அப்போஸ்தலன் பேதுரு கூறும்போது இதேபோன்ற சிந்தனையை வெளிப்படுத்துகிறார். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு **நீங்கள் பங்காளிகளானதால்** சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானது உங்கள்மேல் தங்கியிருக்கிறது; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்." (1 பேதுரு 4:12-14)

கிறிஸ்துவுக்குள் இத்தகைய அடையாளத்தின் இழப்பு, இந்தச் சரீரத்தில் உள்ள சக உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும்அ ன்பைஇ ன்றியமையாதுெ சலுத்துகிறது.இ யேசுத ம்முடையசீ ஷர்களுக்கு அறிவுறுத்தியதை நினைவில்கொள்வோம், "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாக இருக்கிறது." (யோவான் 15:12)

> "...இதேபோல் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, இதேபோல் ஒரே அப்பத்தின் அங்கங்களாகப் பிட்கப்படும்படியாக உறுதிமொழி எடுத்துக்கொண்டு, மேலும் அதே பரிசுத்த ஆவியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அபிஷேகம்பண்ணப்பட்ட சரீரமான சபையின் சக அங்கங்கள் நமக்கு உண்டு; நாம் இதை நினைவுகூரும்போது, சபையில் மிகச் சிறியவர்களுக்கு எதைச் செய்தாலும் அது தலையாயிருக்கிறவருக்கே செய்யப்படுகிறது என்பதையும், அது அவரால் பாராட்டப்படுகிறது என்பதையும் நினைவில் வைத்து, சபையில் நம்முடன் இருக்கிற அங்கங்களுக்கு அதிக உதவியாய் இருக்க நாடுவோமாக..." *(F478)* (தமிழ் – *F636)*

> "...அவரைப் பின்பற்றுபவர்களிடமும், அவருடைய சீஷர்களிடமும் இருக்கும் அன்பு அவருடைய வார்த்தைகளில் வெளிக்காட்டப்பட்டது. 'நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்' (யோவான் 15:12). இவ்வாறு செய்வது மற்றவருக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் இருப்பதைவிட அதிக மேலானதாக இருக்கும். இது நியாயப்பிரமாணத்தினால் கேட்கப்படும் எந்தவொரு தேவைக்கும் அப்பாற்பட்டது. ...கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் நாம், இயேசு நம்மை நேசித்ததைப் போல, (அதாவது) மற்றவர்களின் நலனுக்காக நம்முடைய நலன்களையும், சுகங்களையும், சிலாக்கியங்களையும், தியாகம் செய்யும் அளவிற்கு, ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும்." *(R4850:2)*

## மத்தேயு 26:29

**"இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

"தமது மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றதான அப்பத்தையும், தமது இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதான பாத்திரத்தையும் ஆண்டவர் சீஷர்களிடத்தில் கொடுத்தபோது, அவர் அவர்களுக்கு **நீதிமானாக்கப்படுதலையும், பரிசுத்தமாக்கப்படுதலையும்** அடையாளமான விதத்தில் கொடுத்தவராய் இருந்தார் மற்றும் பரிசுத்தவானாகிய பவுல் விவரித்தது போன்று, இதைக் காட்டிலும் அவர் அதிகமாய்ச் செய்தார்; அதாவது தற்காலத்தின் பாடுகளிலும், எதிர்கால மகிமைகளிலும் அவரோடுகூடப் பங்கெடுப்பதற்கு வாய்ப்பளித்தார் (1 கொரிந்தியர் 10:16, 17; மத்தேயு 26:29). பாத்திரத்தினுடைய நிஜமானது, அதன் உயர்வான கோணத்தில் பார்க்கையில், அது மகிமையின் மகா இராஜாவாகிய கிறிஸ்து, தமது மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக்கொள்ளும்போது, அவரோடுகூட, அவருக்குள் உண்மையுள்ளவர்கள் அனைவரும், பங்கடைகின்றதான புதிய சந்தோஷங்களைக் குறிக்கின்றதாய் இருக்கும்." *(R4703:6)*

## புது உடன்படிக்கையின் இரத்தம்

**மத்தேயு 26:28 - "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது."**

**மாற்கு 14:24 - "இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது."**

**லூக்கா 22:20 - "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது."**

**1 கொரிந்தியர் 11:25 - "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது."**

இந்த வேதவசனங்களிலிருந்து, இயேசு தம்முடைய சீஷர்களைப் பங்குபெறுகிறவர்களாக அழைத்தப் "பாத்திரமானது" ஒருவிதத்தில் புதிய உடன்படிக்கையுடன் (ஏற்பாட்டுடன்) தொடர்பு உள்ளதாக அடையாளம் காணப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், அதினுடைய **முத்திரையிடப்படுவதற்காகவும் உள்ளது! !**

ஒரும த்தியஸ்தரைஉ ள்ளடக்கியஅ த்தகையஉ டன்படிக்கைகளுக்கு,அ ந்தம த்தியஸ்தரின் இரத்தத்துடன், அது முத்திரைப் போடப்படுதலும் அவசியமாகிறது. சீனாய் மலையின் முந்தைய நியாயப்பிரமாண உடன்படிக்கையிலும் அவ்வாறாகவே இருந்தது. அதற்கு மோசே மத்தியஸ்தராக இருந்தார். கன்றுக்குட்டிகள் (காளைகள்) மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களால் மற்றவர் சார்பாக வழங்கப்பட்டிருந்தாலும், அதன் முத்திரைப் போடப்படுதலுக்காக அவரது இரத்தம் தேவைப்பட்டது. (எபிரெயர் 9:19-20-ஐ பார்க்கவும்)

"...அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருந்த **தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மிருகத்தை** மோசே கொன்றார். மேலும் அவர் மிருகத்தின் இரத்தத்தை எடுத்து உடன்படிக்கை புஸ்தகத்தின்மேல் தெளித்தார். இது கர்த்தரையும் அவருடைய வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் அவர் உண்மையுள்ளவராய் இருப்பதையும் அடையாளப்படுத்துகிறது; அவர் இரத்தத்தை ஜனங்களெல்லார்மேலும் தெளித்தார் – அநேகமாக இரண்டு மில்லியன் ஜனங்கள் மீது அல்லாமல், மாறாக அனைவரின் பிரதிநிதிகள் மீதும், கோத்திரத்தலைவர்கள் அல்லது பிரபுக்கள் மேலும் தெளித்தார். இவ்வாறாக நிழலில் அல்லது அடையாளத்தில், மோசே ஜனங்கள் சார்பாக தேவனிடத்திலும், தேவனின் சார்பாக ஜனங்களிடத்திலும் நின்று, இருபுறமும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என உறுதியளித்தார்." *(R3046:2)*

இருப்பினும், அறிவுறுத்தியபடி, மோசே புதிய (நியாயப்பிரமாணம்) உடன்படிக்கையின் மத்தியஸ்தரை – கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் அந்த உதராணத்தில் அடையாளப்படுத்தினார். இவ்வாறு அந்தக் கன்றுக்குட்டிகளும் (காளைகள்) மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களும் – அவற்றின் இரத்தத்தின் மூலம்

முந்தைய நியாயப்பிரமாண உடன்படிக்கை முத்திரைப் போடப்பட்ட விதமானது – நிழலாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின் "விசேஷித்த பலிகளை" அடையாளப்படுத்துகின்றன; காளைகள், கிறிஸ்து மற்றும் வெள்ளாட்டுக் கடாக்கள், சபையாகும். ஆம், பாவநிவாரண நாளில் காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்கள் பயன்படுத்தப்பட்டன, மேலும் அவை ஒரே கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் அடையாளப்படுத்துகின்றன. முந்தைய உடன்படிக்கையின் முத்திரைப் போடப்படுதலுடன் தொடர்புடையதைத் தவிர, இந்தக் காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்கள் பாவநிவாரண பலிகள் மாத்திரமல்ல, மாறாக உற்சாக, தகன மற்றும் சமாதான பலிகளாம். இது, இயேசுவோடு "பாத்திரத்தில்" பங்குபெறுகிறவர்களும், அதினால் புது உடன்படிக்கையின் முத்திரைப்போடப்படுதலில் பங்கடைபவர்களும், தங்களையே மனமுவந்த பலிகளாக, மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் முன்வைக்கிறார்கள் என்னும் உண்மையை மிகவும் அழகாகப் பிரதிபலிக்கிறது!

"பாவநிவாரணபலியும், சர்வாங்கதகனபலியும், சமாதானபலியும், தெளிவாக ஒரே பலிகளையே, ஆனால் வெவ்வேறு நிலைப்பாடுகளிலிருந்து சித்தரிக்கின்றன. ஒவ்வொரு நிகழ்விலும், காளை நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் குறிப்பதையும், வெள்ளாட்டுக் கடாக்கள் ஆசாரியத்துவத்தின் கீழுள்ள சபையைக் குறிப்பதையும் நாம் புரிந்துகொள்வோம். கிறிஸ்துவின் பாடுகளையும், கர்த்தருடனான தங்கள் உறவைப் பொறுத்து, 'பாளயத்துக்குப் புறம்பாகவும்' மற்றும் புதிய சிருஷ்டிகளாக பரிசுத்த ஸ்தலத்துக்குள் சென்று, இறுதியில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் இரண்டாவது திரைக்கு அப்பால் செல்லும் அவர்களின் போக்கிலும், அவருடைய அடிச்சுவட்டில் நடந்துச் செல்லும் அனைவரின் பாடுகளையும் பாவநிவாரணபலிகள் அடையாளப்படுத்துகிறது. மேலும், பலியின் புண்ணியம் இறுதியில் கிருபாசனத்தில் தெளிக்கப்படுவதையும், யாருக்காகத் தெளிக்கப்படுகிறது என்பதையும் இது காட்டுகிறது – முதலாவது காளையின் இரத்தம், சபைக்காகவும்; வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தம், எல்லா ஜனங்களுக்காகவும் தெளிக்கப்பட்டது."

"சர்வாங்கதகனபலியும் அதே பலிகளைத்தான் காட்டுகின்றன, ஆனால் வேறு நிலைப்பாட்டில் இருந்து – அதுவும் தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலிலிருந்து காட்டுகின்றன. பலிகள் தேவனுக்காக வழங்கப்பட்டது மற்றும் முற்றிலுமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை இது காட்டுகிறது. இருப்பினும் பாவநிவாரணபலியில் காட்டப்பட்டுள்ளபடி, பாடுகள் மனுஷர்களால் இழைக்கப்பட்டன. அதனால் அதற்கான அருளுதவிகள் மனுஷர்களுக்குச் செய்யப்பட்டன."

"சமாதானபலிகளானது (லேவியராகமம் 3) அதே பலிகளின் மற்றொரு பார்வை அல்லது படமாகத் தோன்றும், இது பலி செய்த தனி நபரின் மனமுவந்தத் தன்மையை அடையாளப்படுத்துகிறது – அதாவது தேவனைப் பொறுத்தவரை எதுவும் கட்டாயமில்லை, மேலும் தேவனுக்கும் பலிகளுக்கும் இடையில் சமாதானம் இருந்தது, அதனால் பாவங்களுக்காக பலிகள் ஏற்படுத்தப்படவில்லை."

"ஆகவே, **யாத்திராகமம் 24-இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சமாதானபலிகள் மற்றும் தகனபலிகளின் இரத்தமே நியாயப்பிரமாண உடன்படிக்கையை முத்திரையிட்டது என்பது மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது.** பாவநிவாரணபலியின் அம்சம் திருப்தியுடன் செய்யப்பட வேண்டும். **ஆனால் தகனபலிகளும் சமாதானபலிகளும், புதிய உடன்படிக்கையின்கீழ் ஆசீர்வதிக்கப்படுபவர்களின் நலன்களுக்காக, பலிசெலுத்துபவர்கள் தங்கள் பூமிக்குரிய உரிமைகளைத் தானாக முன்வந்து கொடுப்பதையும், மேலும் தேவன் இந்தப் பலிகளை அந்தப் புதிய உடன்படிக்கையை முத்திரையிடுவதுபோல ஏற்றுக்கொள்கிறார் என்பதையும் குறிக்கிறது – ஆதாமின் பாவத்திற்கான பாவநிவாரணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு, அதே பலிகளால் நிறைவேற்றப்பட்டு, பாவநிவாரண பலியின் நிலைப்பாட்டிலிருந்தும் பார்க்கப்படுகிறது.**" *(R4389:3)*

## மத்தேயு 26:30[12]

**"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்."**

"தாம் கைது செய்யப்படுவதற்கும், மரிப்பதற்குமான வேளை அருகாமையில் இருப்பதை அறிந்திருந்த நமது அருமை ஆண்டவரின் விசுவாசமானது, அந்தத் துயரான வேளைகளினுடைய பரீட்சைகளிலும் நிலைநின்றது. அப்பத்திற்கும், பாத்திரத்திற்கும் அவர் பிதாவுக்கு ஸ்தோத்திரம் ஏறெடுத்ததான காரியமானது, அப்பம் பிட்கப்படுதலும், திராட்சப்பழம் நசுக்கப்படுதலும் குறிக்கின்றதான பாடுகள் யாவற்றிலும், சந்தோஷத்தோடே உடன்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏற்கெனவே

அவர் பிதாவின் ஏற்பாட்டில் திருப்தியடைந்தவராய் இருந்தார். இதைத் தொடர்ந்து அவர் பெரிதும் களிப்புறும் விதமாக நன்றி செலுத்த முடிந்தது. இந்த ஒரு மனநிலைக்கு இசைவாகவே, அவர்கள் புறப்படுகையில், பாட்டுப்பாடினார்கள், சந்தேகத்திற்கிடமின்றி பூமியில் அவரது ஓட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்ததற்காகவும், இதுவரையிலும் தமக்குத் தேவையான கிருபை போதுமானதாய் இருந்ததற்காகவும்துதிமற்றும்ஸ்தோத்திரப்பாட்டைஏறெடுத்திருக்கவேண்டும்." *(R2773:2)*

## நியாயப்பிரமாண உடன்படிக்கை முத்திரையிடப்படுதல் அதின் நிஜமான முக்கியத்துவம்

"மோசே உண்மையில் ஆசாரியனல்ல மற்றும் நிழலான பாவநிவாரணமும் செய்ததில்லை; அது ஆசாரியனாகிய ஆரோனின் வேலையாகும். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவே மோசே அடையாளப்படுத்தப்படுகிறார், தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார்."

"எவ்வாறாயினும், புது உடன்படிக்கையை முத்திரையிடும் எதிர்கால மத்தியஸ்தரின் பணியானது பாவநிவாரணப் பணியுடன் முக்கியமாக அடையாளம் காணப்படுவதாகக் காணலாம். இதற்குரிய உறுதியான அறிவிப்பு, நியாயப்பிரமாண உடன்படிக்கையை முத்திரையிட மோசே பயன்படுத்திய நிழலான காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தம் என்னும் நிழலில் நமக்குக் கிடைக்கிறது. மிகத் தெளிவாக, இதன் பாடம் என்னவென்றால், மாபெரும் மத்தியஸ்தர், திருச்சபையின் தலைவரான இயேசுவும் அவருடைய 'அங்கத்தினர்களும்,' புது உடன்படிக்கையை, நிழலான காளை (நமது ஆண்டவர், நமது மீட்பர்) மற்றும் அவரது 'அங்கத்தினர்களின்' (சபை) நிழலான வெள்ளாட்டுக் கடாக்களாகிய இரு பலிகளின் புண்ணியமான இரத்தத்தாலுமே தெளிப்பார்கள் அல்லது முத்திரைப்போடுவார்கள்." *(R4354:5)*

## நியாயப்பிரமாண உடன்படிக்கையின் துவக்கம்

### மோசேயின் பதிவு:

**யாத்திராகமம் 24:4-8 - "மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரயேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான். இஸ்ரயேல் புத்திரரின் வாலிபரை அனுப்பினான்; அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து, உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடேபண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்."**

### பவுலின் பதிவு:

**எபிரெயர் 9:19-21 - "எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும் தெளித்து: தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தான்."**

"நியாயப்பிரமாண உடன்படிக்கையின் துவக்கமானது ஒரு நிழலான உபத்திரவ காலத்தில், மலை அதிரச் செய்து, ஜனங்களைப் பயந்து நடுங்க வைத்து நிறைவேற்றப்பட்டது. சீனாய் மலையில் நிகழ்ந்தவற்றின் நிஜமான நிறைவேற்றம், 'தேர்ந்தெடுத்தல்' முடிவடைந்து புதிய யுகம் துவங்கியவுடன் சீயோன் மலையில் (கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில்) நடைபெறும். மாபெரும் மத்தியஸ்தர் (தலை மற்றும் சரீரம்) திரையிடப்பட்டு, ஆவிக்குரிய நிலைமையின் மகிமையை மறைத்து, நியாயப்பிரமாணத்தை முன்வைத்து, அதன்மீது தமது புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் இரத்தத்தைத் தெளிப்பார் – எவ்வாறெனில், நிழலில் மோசே இரத்தத்தை எடுத்து (பழைய) நியாயப்பிரமாணத்தில் தெளித்தது போல. வித்தியாசம்

என்னவென்றால், மோசே நியாயப்பிரமாண கற்பலகைகளின் மீது காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தத்தைத் தெளித்தார், ஆனால் புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் மத்தியஸ்தரான, நிஜமான மோசே (அடையாளமாக) விசேஷித்த பலிகளின் (காளை மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களின் நிஜங்கள்) நிஜமான இரத்தத்தை எடுத்து நியாயப்பிரமாணத்தின்மீது தெளிப்பார் – அது 'அவருடைய சொந்த இரத்தம்' – அதில் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம் மாத்திரமல்ல, "அவருடைய சரீர அங்கங்கள்" என்று அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் அனைவரின் பலிகளின் இரத்தமும் அடங்கும். பின்னர், மோசே நிழலாக அனைத்து ஜனங்களின்மீதும் சீனாய் மலையில் தெளித்தபடி, நிஜத்தில், பெரிய அளவில், கிறிஸ்து – இயேசுவும் அவருடைய அங்கங்களும், ஆயிர வருட யுகத்தின் போது, எல்லா ஜனங்களின்மீதும் தெளிப்பார்கள். அதாவது எல்லா மனுக்குலத்தையும் சத்தியத்தைப்பற்றிய அறிவுக்கும். தேவனுடனும் அவருடைய தெய்வீகப் பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடனும் இணக்கமாக திரும்புவதற்காக அவர்களுடைய சிலாக்கியங்களைப் பாராட்டும் உணர்வை ஜனங்கள் பெறுவதற்குமாக இருக்கும்." *(R4366:5)*

## 1 கொரிந்தியர் 5:7, 8 [13]

**"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."**

புளிப்பு என்பது ஒரு வகை பாவமாகும்; நினைவில்கொள்ளுங்கள், புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். (கலா.5:9)

புளிப்பு, நேரடி அர்த்தத்தில், நொதித்தலாகும்; மேலும், நொதித்தல் என்பது நேரடி மற்றும் அடையாள அர்த்தத்தில், சீர்கேடு (corruption) ஆகும்: இப்படியாக புளிப்பு என்பது பாவத்திற்கான மிகவும் பொருத்தமான அடையாளமாகிறது! பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் சீர்கேடாகிய (corruption), புளித்தமாவைக்குறித்து இயேசு தம்முடைய சீஷர்களை எச்சரித்தார் (மத்தேயு 16:6); மேலும் இவ்வாறாக புளிப்பு என்பது சீர்கேட்டைக் (corruption) குறிப்பதால், தேவன் தமது முந்தைய பலிபீடங்களில் அதைப் பயன்படுத்துவதைத் தடைசெய்திருந்தார் (லேவியராகமம் 2:11).

இருப்பினும், அந்தப் பலிபீடங்களின்மீது செலுத்த வேண்டிய பலிகள் சுவிசேஷ யுகத்தின் "விசேஷித்த பலிகளுக்கு" நிழலானவை – காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்கள், கிறிஸ்து இயேசுவையும் அவருடைய சபையையும் அடையாளப்படுத்துகின்றன. நிச்சயமாக, இயேசுவின் பலியில் "புளிப்பு" இல்லை; ஏனென்றால், அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார்." (எபிரெயர் 7:26). ஆனால் இது சபைக்குப் பொருந்தாது இருக்கும், ஏனென்றால், அவருடைய "சரீரமான" அவர்கள் பாவத்தில் பிறந்தவர்கள், துர்குணத்தில் உருவானவர்கள் (சங்கீதம் 51:5) – சர்வாங்க தகனபலியின் தலையானது கழுவப்படத் தேவையில்லை, மாறாக, லேவியராகமம் 9:14-இன் படி "குடல்கள் மற்றும் தொடைகள்" (சரீர அங்கத்தினர்கள்) மாத்திரமே கழுவப்பட வேண்டும்!

> "...புளிப்பு என்பது குறிப்பாக அப்பம் பண்ணுவதற்கெனப் பிசைந்துள்ள மாவில் பரவக்கூடிய ஒன்றாகும். தேவனுடைய வார்த்தை என்பது சத்தியம் ஆகும்; அதாவது தேவனுடைய ஜனங்கள் புசிப்பதற்குரிய அப்பமாக இருக்கின்றது, ஆனால், தேவனுடைய ஜனங்கள் புளிப்பில்லாத அப்பத்தை அதாவது, மனித கோட்பாடுகள் என்னும் புளிப்பினால் கலப்படம் பண்ணப்படாத தூய்மையான சத்தியத்தைப் பயன்படுத்த வேண்டும்." *(R5111:4)*
>
> "பஸ்காவைப் புசிப்பதற்கு ஆயத்தமாக, பாவமாகிய – புளிப்பு – யாவற்றையும் களைந்துபோடுவதற்கு நம்மில் யாவரும் மறவாமல் இருப்போமாக. 'மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.' (2 கொரிந்தியர் 7:1; 1 யோவான் 1:7) இப்படியாக, மீதி உள்ள ஜீவிதம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையாக இருக்கும்."

"புளிப்பானது கள்ள உபதேசத்தை மாத்திரமே அடையாளப்படுத்துகின்றது என்று மிகவும் தவறாய் எண்ணிவிடாதிருங்கள் (மத்தேயு 16:6-12); புளிப்பானது பொல்லாப்பான தன்மைகளைக் குறிக்கின்றது என்று அப்போஸ்தலன் அர்த்தம் கொடுப்பதையும் நினைவில் கொள்ளுங்கள். பொல்லாத தன்மைகள் என்பது (பொல்லாப்பின் மிகவும் கொடிய வடிவங்களாகிய) திருட்டு, பொய் மற்றும் கொலைப்பாதகம் எனும் பொல்லப்புகளை மாத்திரமல்லாமல், பெயரளவில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கின்றதானவர்களைக்கூடத் தாக்குவதற்கு இடம் தருகின்றதான 'பொல்லாப்புகளாகிய' துர்க்குணம், பகைமை உண்டுபண்ணுதல், பொறாமைகள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல்கள், தீமை பேசுதல்கள் மற்றும் மாம்சம், பிசாசின் கிரியைகளையும் குறிக்கின்றதாய் இருக்கின்றன. அன்பின் ஆவியானது நம்முடைய இருதயங்களுக்குள்ளாகக் கடந்துவந்து, துர்க்குணம் எனும் புளித்தமாவைக் களைந்துபோடுவதாக." (1 கொரிந்தியர் 5:6-8; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; தீத்து 3:3 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்) *(R2283:4)*

## புளிப்பை புறம்பாக்குதல்

"...பாவங்களோ, அனலற்றத் தன்மைகளோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ, நம்மைத் தடைச் செய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில் போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் மறைக்காமல் கூறிவிடுங்கள். உங்கள் சகோதர சகோதரிகளிடத்தில் அல்லது நீங்கள் யாருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தீர்களோ, அவர்களிடத்தில் போய், அவர்கள் உங்களிடத்தில் தவறுகளை ஒப்புக்கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாய் ஒப்புக்கொண்டுவிடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகிக்கொள்ளுங்கள் மற்றும் கூடுமானமட்டும் அனைத்து மனிதர்களுடனும் ஒப்புரவாகிவிட்டு வந்து புசியுங்கள், ஆம், இப்பொழுதோ அல்லது பின்னர் 'ஏற்றகாலத்திலோ' ஏற்றுக்கொள்ளும் அனைவருக்குமான கர்த்தருடைய ஐசுவரியமான ஏற்பாட்டில் பங்கெடுங்கள்."

"இப்படியானதொரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும், யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதான பஸ்கா நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகிறோம். தங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசிப்பதற்கென்று கூடுவதற்கு முன்பதாகவே, புளிப்பான அல்லது அழுகிப்போனதான ஏதாகிலும் பொருட்கள், எலும்புகள், ரொட்டித் துண்டுகள் அனைத்தும் காணப்படுகின்றதா என்று தங்களது குடியிருப்புகளில் எல்லாம் அவர்கள் தேடினார்கள். இவைகளெல்லாம் எரிக்கப்பட்டன – அழிக்கப்பட்டன. ஆகையால் நாமும் நிஜத்தை நிறைவேற்றி, கோபம், பகைமை, சண்டை, துர்க்குணம் எனும் 'பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துபோட வேண்டும்' (1 கொரிந்தியர் 5:7, 8)."

"இவ்வகை பாவம் எனும் புளிப்பானது, எரிக்கப்படாமல், முற்றிலுமாகப் புறம்பே கழித்துப் போட முடியாது என்பதையும், அன்பு, பரம அன்பு, தேவ அன்பு மாத்திரமே இதை எரித்துப்போட முடியும் என்பதையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்த அன்பானது, நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், இது எதிர்ப்பண்புடைய அனைத்தையும், அதாவது பொறாமை, பகைமை, தீய பேச்சுக்கள் முதலானவைகள் அனைத்தையும் பட்சித்துப்போட்டுவிடும். இவைகளையெல்லாம் புறம்பே கழித்துப்போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, அவரது ஆவியில் நிரம்பிடுவதற்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார். மனம் தளர்ந்துபோக வேண்டாம். பாடத்தைக் கற்றுக்கொண்டு, புதிய தீர்மானங்களுடனும், ஆண்டவருடைய உதவியில்லாமல், நீங்கள் நீங்களாகவே பரிசை ஒருபோதும் அடையமுடியாது என்ற உண்மையினைப்பற்றின அதிகமானப் புரிந்துகொள்ளுதலுடனும், மீண்டுமாகத் தொடருங்கள். மேற்கூறிய உண்மையினை நம்மைவிட அவர் நன்றாய் அறிவார், அதனால் 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக்கூடாது' என்றும் கூறுகின்றார். நமக்கான தேவையின் காரணமாகவே, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடுபண்ணியுள்ளார். 'தைரியங்கொண்டிருங்கள்!' என்பதே 'ஜெயங்கொள்ளுகிற' வகுப்பைச் சார்ந்தவராவதற்கு நாடுகிற மற்றும் ஏங்குகிற அனைவருக்குமான ஆண்டவருடைய வார்த்தைகளாக இருக்கின்றன." *(R5193:3)*

"வருஷத்தினுடைய இந்த ஒரு காலபகுதியில் சோதனைகளானது, விசேஷமாய் அனுமதிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. எப்போதும் 'கசப்பான வேர்களானது' முளைத்தெழும்பி,' வளர்வது வழக்கமாகும்; ஆனால் இந்த ஒரு காலபகுதியிலோ பத்து மடங்கு வலிமையோடு வளர்கின்றன. நம்முடைய சீஷத்துவத்திற்கான இறுதிப் பரீட்சையானது, அறிவின் விஷயத்தில் இல்லாமல் அன்பின் விஷயத்தில்தான் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. 'நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதானக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.' அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமானளவுக்கு அன்புக்கொண்டிராததாலேயே, ஒருவருக்கொருவர் தாழ்த்திக்கொள்ளமாட்டோம் என்று மிகவும் தீர்மானமாய்க் காணப்பட்டு, இதனால் ஆண்டவருடைய பாதங்களையும் கழுவும் காரியத்தினையும் புறக்கணித்தவர்களாக, கனம் குறைந்த வேலையிலும், அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கத்தக்கதாக, அவருக்கு வாய்ப்பளித்தவர்களாகக் காணப்பட்டனர். இந்தத் தவறான சிந்தையே, அதாவது கர்த்தருடைய சிந்தை இல்லாமையே, அவர்கள் எதிராளியானவனுடைய வல்லமையினால் தாக்கப்படுவதற்கு மற்றும் பேதுரு தனது அபிஷேகம் பண்ணப்பட்ட கர்த்தரை மறுதலிப்பதற்கும், யூதாஸ் காட்டிக் கொடுப்பதற்கும் ஏதுவாயிற்று."

"ஆகையால் நாம் சோதனைக்குள் விழுந்துவிடாதபடிக்கு நம்மைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக, விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக, மிகுந்த தாழ்மையுடனும், மிகுந்த அன்புடனும் காணப்படுவோமாக. இயேசுவினுடைய பின்னடியார்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கும் அல்லது அவர்களைச் சிக்க வைப்பதற்கும் அல்லது அவர்களை இடறப்பண்ணுவதற்கும் நமது மாபெரும் எதிராளியானவன் அன்றுமுதல் இன்றுவரையிலும் அதிக உற்சாகத்துடன் செயல்பட்டு வருகின்றான்." *(R4153:2)*

## எபிரெயர் 10:21-24

**"தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;"**

"ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு, இப்பொழுது இது எதைக் குறிக்கிறது? இரத்தம் தெளிக்கப்படுவதின் அர்த்தம் என்பது நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியென நமது கர்த்தர் இயேசுவின் பலியினுடைய மீட்பின் புண்ணியத்தின்மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதையே குறிக்கிறது என்று நாம் பதில் கூறுகின்றோம். இந்த விஷயங்களைக்குறித்ததான கர்த்தருடைய வார்த்தைகளைக் காணும் யாவரும் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதை உணரமுடியும். மேலும் இப்படியாக நம்முடைய இரட்சகரின் மரணத்தினுடைய முக்கியத்துவத்தை உணரும் ஒருவர், வீட்டின் நிலைக்கால்களின்மீது தெளிக்கப்படும் இரத்தத்தினால் அடையாளப்படுத்தப்படுவதுபோன்று, அதை அறிக்கையிடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படலாம். கதவுகளில் இரத்தம் காணப்படுவது என்பது, கதவுக்குள் இருக்கும் அனைவரும் இரத்தத்தின் மீது நம்பிக்கைக்கொண்டிருப்பதால், அதன் புண்ணியத்தின்கீழ் இருப்பதைக்குறிக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் மீட்பைப்பற்றின உபதேசமானது, நூற்றாண்டுகள் காலமாக அரைகுறையான தெளிவோடு காணப்பட்டிருந்த போதிலும், இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களுக்கும், மேம்பட்ட போதகர்கள் என்று தங்களையே அழைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும், உயர் விமர்சகர்களுக்கும் இது கேள்விக்குறியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகையவர்கள் கர்த்தருடைய பார்வையில் இஸ்ரயேலர்களாய் இராமல் எகிப்தியர்களாகவே இருக்கின்றனர். உத்தம இஸ்ரயேலர்கள் என்றும், தம்முடைய ஜனங்கள் என்றும் அவர் அடையாளம் காணும் யாவரும், அவரையும், அவருடைய வார்த்தைகளையும் மற்றும் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து இயேசு விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினதின் மூலம், அவர் தங்களுக்காக நிறைவேற்றின வேலையையும் அடையாளம் கண்டுகொள்வார்கள்."

"பதிலீட்டு உபதேசமானது இந்த நிழலில் மிகுந்த அழுத்தத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரத்தமானது இரத்த நாளங்களில் இருக்கும்போது ஜீவனைக்குறிக்கின்றது. ஆகவே அது சிந்தப்படுவது மரணத்தைக்குறிக்கும். மரணத்தீர்ப்பானது நம்முடைய மனுஷ சந்ததிக்கு எதிராக இருந்தபடியால், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. ஆகவே இந்த யுகம் முழுமையிலும் அவர் அங்கீகரிக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவின் மீட்பாகிய பாவநிவாரணபலியின்மீது விசுவாசமும், அதை அறிக்கை செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் கடமைபடுத்தியுள்ளார். இரத்தம் தெளிக்கப்பட்ட வீட்டில் உள்ளவர்களின் விசுவாசத்திற்கான ஓர் ஞாபக குறியாய், ஓர் அடையாளமாய், ஒரு சாட்சியாய், ஒரு சான்றாக இரத்தம் உள்ளது. இது தேவனுக்கான அடையாளமாக இராமல், மனிதனுக்கானதாய் உள்ளது. தேவன் தப்புவிக்கச் செய்வார், ஆனால் தப்புவிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு இஸ்ரயேலனும் தன்னுடைய பங்கைச் செய்துள்ளானோ என்று பார்த்துக்கொள்வது அவனுடைய காரியமாய் இருக்கின்றது."

"அனைத்து இஸ்ரயேலர்களும் மரண ஆபத்தில் இருந்தனர் என்று தவறாய்க் கருதப்படக்கூடாது. முதற்பேறானவர்களுக்கு மாத்திரமே ஆபத்து இருந்தது. இதுவே நிழலின் மிக முக்கியமான அம்சமாகும். கர்த்தரையும், நீதியையும் நேசிக்கும் அனைவருக்கும், அதாவது முதற்பேறானர்களுக்கும், மற்ற அனைவருக்கும் காலையில் விடுதலை வருகின்றதாய் இருந்தாலும், ஆயிர வருட அரசாட்சியின் காலைக்கு முன்பான இரவில் விசேஷமான சோதனை அல்லது பரீட்சை வரும்; இந்த விசேஷமான சோதனை அல்லது பரீட்சை முதற்பேறானவர்களை மாத்திரம் பாதிக்கும். யார் இந்த முதற்பேறானவர்கள்? பரலோகத்தில் பெயர் எழுதப்பட்ட 'முதற்பேறானவர்களின் சபையே,' 'சிறுமந்தையே,' புதிய சுபாவத்திற்குள்ளும் மற்றும் நமது கர்த்தரோடுகூட வரவிருக்கின்ற இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்திற்குள்ளும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களே – இந்த முதற்பேறானவர்கள். பார்வோன் மற்றும் அவனுடைய வல்லமை மற்றும் அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேலர்களாகிய மற்ற அனைவரும் விடுவிக்கப்படுவது, மற்ற அனைவரும் சாத்தானின் வல்லமையிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் இந்த இரவில் ஆபத்தில் இருப்பவர்களும், சுவிசேஷ யுகத்தில் தப்புவிக்கப்படுகிறவர்களும் அல்லது கடந்துபோகப்படுகின்றவர்களும் சிறுமந்தையாகிய முதற்பேறானவர்களின் சபையே ஆகும். இதுவே இந்த நிழல் தெளிவாய் முன்வைக்கும் காரியமாகும். கடந்துபோகுதலுக்குப் பின்னரே புதிய ஒழுங்குகளின்கீழ் இந்தப் பஸ்காவில் தப்புவிக்கப்பட்டவர்கள், லேவியர்களாக ஆனார்கள் என்பது நினைவில் அடையாளப்பூர்வமாகக் கொள்ளப்படலாம். மேலும் இவர்களிடத்திலிருந்தே ஆசாரியர்களான சிறுமந்தை வந்தனர். ஆகையால்தான் முதற்பேறானவர்களின் சபையை 'நீங்களே இராஜரீக ஆசாரியக் கூட்டத்தார்,' என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். (1 பேதுரு 2:5, 9)

"ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிஜம், நமக்காகப் பலியிடப்பட்டவராகிய நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவில் இருப்பதை அறிந்துகொண்டோம். இவரோடு தான் நாம் பங்குகொள்கிறோம். மாம்சீக இஸ்ரயேலர்களால் அநுசரிக்கப்பட்ட நிழலின் இடத்தில் வேறொரு நினைவுகூருதலை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கு, நம்முடைய கர்த்தர் நிறுவியுள்ளார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், அவர் ஒரு யூதனாக பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்த அதே இரவில், பஸ்கா இராப்போஜனத்தைப் புசித்தப் பின்னர், அதை நிறுவினார். உலகத்தின் பாவத்தைப் போக்குகிற, நிஜமான தேவனுடைய ஆட்டுக்குட்டியாக அவர் தம்மையே அடையாளப்படுத்தும் அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு தம்முடைய உண்மையான சீஷர்கள் அனைவரும் யூதர்கள் போன்று நிழலான பஸ்காவை ஆநுசரியாமல், இதுமுதல் நிஜமான பஸ்காவை அநுசரிக்கும்படியாகக் கட்டளையிட்டார். 'இதைப் பானம்பண்ணும் (பஸ்கா அநுசரிக்கும்போது) போதெல்லாம், (நிழலாய் நடந்த விடுதலையை இனிமேல் நினைவுகூராமல்) என்னுடைய நினைவாகச் செய்யுங்கள் என்றார்.' இது வருஷாவருஷமும் இந்த அநுசரிப்பு தற்காலம் வரை தொடரப்பட்டு, இது இன்னமும் நினைவுகூரப்படுகின்றது." *(R2918:4-6)*

# யார் பங்குகொள்ளலாம்?

"கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, உலகத்துக்குரியதாயும், வெறுமனே பெயரளவிலான விசுவாசிகளுக்குரியதாயும் இராமல், (1) கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும், தங்களுடைய பாவத்தைச் சுமந்தவராகவும், ஏற்றுக்கொண்டவர்களும் மற்றும் (2) அவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எனத் தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுமாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும். ஆனால், இதில் யார் பங்குகொள்ளலாம் அல்லது யார் பங்குகொள்ளக்கூடாது என்பதைப் பற்றி முடிவு செய்வது, எந்த மனுஷனுக்குரிய அல்லது ஒரு கூட்டத்தாருக்குமுரிய வேலையல்ல. 'அப்பத்திலும்,' 'பாத்திரத்திலும்' பங்குகொள்வதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதைக் கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும், 'எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்' என்று அப்போஸ்தலன் உரைத்ததைப் போன்று கூறுவதும் நமக்குரிய கடமையாகும்." (1 கொரிந்தியர் 11:28)

"இந்தக் காலத்தில், தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகங்களினுடைய தவறான உபதேசங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பதினாலும், இந்த நினைவுகூருதலின் விஷயங்கள் இப்போது இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட முடிவதாலும், இப்பொழுது, ஒருவர் தன்னைச் சுய பரிசோதனைப் பண்ணிக்கொள்ளும் அல்லது நிதானித்துக்கொள்ளும் காரியமானது முன்பைக்காட்டிலும் இப்பொழுது மிக முழுமையாகச் செய்ய முடியும். **ஒவ்வொருவரும் (கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள) காரியங்களைத் தன்னிடத்திலேயே கேட்டுக்கொள்வார்களாக:**"

(1) மனிதக் குடும்பத்தில் நான் ஓர் அங்கமாக இருக்கின்றபடியால், ஆதிப்பாவத்தின் காரணமாக எல்லார்மேலும் கடந்துவந்த மரணத்திற்கு ஏதுவான அந்த ஆக்கினைத் தீர்ப்பின்கீழ், நானும் காணப்பட்டேன் என்று வேதவாக்கியங்கள் போதிக்கும் காரியங்களை நான் நம்புகின்றேனா?

(2) இந்தப் பாவம் மற்றும் மரணத் தண்டனையினின்று நான் தப்பித்துக்கொள்வதற்கு எனக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை, என்னுடைய கர்த்தராகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியின் வழியாகவே உள்ளது என்று நான் நம்புகின்றேனா?

(3) அவர் நம் பொருட்டு தம்மையே அதாவது, அவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும், அவருடைய மனுஷீகத்தையும் ஈடுபலிக்கான கிரயமாகக் கொடுத்தார் என்றும், அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, தம்முடைய ஆத்துமாவைப் பாவத்திற்கான பலியாகக் கொடுத்தார் என்றும் நான் நம்புகின்றேனா? (ஏசாயா 53:10, 12)

(4) அவர் யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்தப்போது ஆரம்பமான, மரணம்வரையிலான அவருடைய அர்ப்பணிப்பானது, மனுக்குலத்திற்காக அவர் தம்மையே பலிசெலுத்தினது மூலம், சிலுவையில் அவர் மரித்தபோது, நிறைவேறி முடிந்தது என்று நான் நம்புகின்றேனா?

(5) நியாயப்பிரமாணத்திற்கு அவர் கீழ்ப்படிந்ததின் காரணமாக அவர் சுதந்தரித்துக்கொண்ட (நித்திய ஜீவன் மற்றும் உலகத்தின்மீது ஆளுகை எனும்) உரிமைகளை அவர் இப்படியாக, பலியானதின் மூலம் இறுதியில் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின்கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அனைவருக்கும் விழுந்துபோன மற்றும் மரித்துக்கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு விட்டுகொடுத்துவிட்டார் என்பதையும் நான் புரிந்துள்ளேனா?

(6) இவ்விதமாக பலி செலுத்தப்பட்ட அவருடைய மாம்சமும், இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(7) அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய இரத்தத்திற்கும் அடையாளச் சின்னங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குகொள்ளும் காரியமானது, என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும், அனைவருக்காகவும் பெற்றுத்தந்த அந்த கிருபைகளை நான் ஏற்றுக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நான் புரிந்துள்ளேனா?

(8) ஒருவேளை இவ்விதமாய் நினைவுகூரப்பட்டதான ஈடுபலியை நான் இருதயப் பூர்வமாக ஏற்றுக்கொண்டு இருப்பேனாகில், இந்த ஈடுபலியின்மீதான விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக்கப்பட்ட என்னை என்னுடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் கர்த்தரோடுகூடப் பிட்கப்படும்படிக்கும், அவரோடுகூடப் பாடுபடும்படிக்கும், அவரோடுகூட மரிப்பதற்கும் கர்த்தருக்கென்று முழுமையாய் நான் அர்ப்பணம்பண்ணியுள்ளேனா?

ஒருவேளை இக்கேள்விகளுக்கு நம்மால் தீர்க்கமான பதில் கொடுக்கமுடியுமெனில், நாம் கர்த்தருடைய சரீரத்தைக் குறித்து முழுமையாகவும் தெளிவாகவும் கண்டுணர்ந்து, அவருடைய மேலான பலிக்கு மரியாதை கொடுக்கிறவர்களாய், நாம் அதைப் புசிக்க வேண்டும். – 'நீங்கள் எல்லாரும் இதிலே புசியுங்கள்.' *(R5193:5)*

## இறுதிக் குறிப்புகள்

### #1. (பக்கம் - 5) பஸ்கா பண்டிகை மற்றும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகைச் சம்பந்தமாக!

**பஸ்கா பண்டிகை** (நீசான் 14) புளிப்பில்லாத அப்பப்பண்டிகையுடன் (நீசான் 15 முதல் நீசான் 21 வரை) குழப்பிக்கொள்ளக்கூடாது!

உண்மைதான், நீசானின் 14-ஆம் நாள் தான் **புளிப்பில்லாத அப்பத்தின் முதல் நாளாகும்** (யாத்திராகமம் 12:14, 18). அந்த நாளில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு (யாத்திராகமம் 12:6) அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தங்கள் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, (யாத்திராகமம் 12:7) அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் (யாத்திராகமம் 12:8) தங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், தங்கள் கால்களில் பாதரட்சைத் தொடுத்துக்கொண்டும், தங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாயும் (யாத்திராகமம் 12:11) அடுத்த நாளான, நீசான் 15 (எண்ணாகமம் 33:3)–இல், தொடங்கும் பயணத்திற்கான தயார் நிலையில் இருப்பதுபோல புசித்தார்கள். நீசானின் இந்த 14-வது நாள் குறித்து கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனமாகக் கவனியுங்கள்: "**அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது: அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்.**" (யாத்திராகமம் 12:14)

"புளிப்பில்லா அப்பப்பண்டிகை"–யின் (யாத்திராகமம் 12:15) துவக்கமான நீசான் 15-ஐ பற்றி நாம் இவ்வாறாக வாசிக்கிறோம்: "**...இந்த நாளில்தான்** (நீசான் 15) **நான் உங்கள் சேனைகளை** (பெருந்திரள் - JPS மொழிபெயர்ப்பு) **எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினேன்;** ஆகையால், உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக இந்த நாளை ஆசரிக்கக்கடவீர்கள்" (யாத்திராகமம் 12:17). மேலும் எண்ணாகமம் 33:3-இல் இவ்வாறாக வாசிக்கிறோம் – "**முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப்புறப்பட்டார்கள்; பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க இஸ்ரயேல் புத்திரர் பெலத்த கையுடன் புறப்பட்டார்கள்.**"

இந்தப் "புளிப்பில்லா அப்பப்பண்டிகை" ஏழு நாட்கள் நீடித்தது (யாத்திராகமம் 12:15); ஆனால் பின்வருவனவற்றின்படி, நீசான் 14-ஆம் தேதி பஸ்கா பண்டிகையையும் சேர்த்துக்கொண்டால், புளிப்பில்லாத அப்பத்தைப் புசிப்பது உண்மையில் எட்டு (8) நாட்களாக இருந்தன: "**முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்**" (யாத்திராகமம் 12:18).

அப்போஸ்தலர் பவுல் 1 கொரி. 5:7-8-இல் பேசும் போது, "**ஆகையால்,** நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே **பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**" அவர் "பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்" (1 கொரிந்தியர் 1:2) உடன் தான் பேசுகிறார். மேலும் அவர் நீசானின் *14*-**ஆம் நாளின் – பஸ்கா பண்டிகையைப்**பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டுமே அல்லாமல், நீசான் 15 முதல் 21-ஆம் தேதிவரையான புளிப்பில்லாத அப்பத்தின் பண்டிகையைப்பற்றி அல்ல!

"விலையேறப்பெற்ற இரத்தத்தினுடைய புண்ணியத்தினால் முதற்பேறானவர்களான நம்முடைய பாவங்களைக் கடந்துபோகுதல் குறித்தும், நமது பாக்கியமான கர்த்தருடன், அவரது பாடுகளின், மகிமையின் அனுபங்களில் நாம் பங்கடைவது குறித்ததுமான இந்தச் சிந்தனைகளுடன், சோதனைகளும், கஷ்டங்களும் இருந்தாலுங்கூடச் சந்தோஷத்தோடே பஸ்கா பண்டிகையை ஆசரிப்போம். இப்படியாக அவரது பின்னடியார்களென உண்மையாய்த் தொடர்ந்து செய்துவருவோமானால், வெகு சீக்கிரத்தில் கர்த்தரின் சேனைகளை, அதாவது இறுதியில், மகா

இராஜாவுக்குச் செவிகொடுத்து, அவரை அறிந்துகொண்டு, அவருக்குக் கீழ்ப்படியும் யாவரையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகையிலிருந்தும், எகிப்திலிருந்தும், கானானுக்கு நேராய் வழிநடத்திடும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றுக்கொள்வோம். ஆம், சகோதரர்களே, அப்போஸ்தலரின் வசனத்தின்படி, 'நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் . . . **பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.'**..." *(R5643:1)*

**#2. (பக்கம் - 7) ஈடுபலி: சரிநிகரான விலை** *(E427)* (தமிழ் – *E581)*

"முதல் தகப்பனாகிய ஆதாமின் மீறுதலுக்காக, தெய்வீகச் சட்டத்தின்படி பாவ நிவாரணத்தின் இந்த செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, நமது அருமை மீட்பர் மரிக்க வேண்டியதாயிற்று. "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே, இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கிவருகிறது" - (1 தீமோத்தேயு 2:6). (E17) (தமிழ் – *E3, 4)*

*கிரேக்க ἀντίλυτρον (ஆன்டிலூட்ரான்) – யங்ஸ்அ னலிட்டிக்கல்க ன்கார்டன்ஸ் (Young's Analytical Concordance) படி, இது **சரிநிகரான விலை** என்று அர்த்தம்.

**#3. (பக்கம் - 7) மாபெரும் பிரமிட் பத்திகள்–இல் இருந்து – எட்கர், பக்கம் 36, பத்தி 72 -**

"**இஸ்ரயேல் தேசமும் தங்கள் ஆண்டிற்கு 360 நாட்கள் என்றே கணக்கிடுகிறது. இது சில நேரங்களில் நிலவுக்குரியதாயும் அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலிய ஆண்டு இதுவரை நிலவுசார்ந்து இருந்தது. வசந்த காலத்தின் அறுவடைக்கு முன்னதாக அமாவாசையின் முதல் புலப்படுதலினால் அதன் ஆரம்பம் ஒழுங்குப்படுத்தப்படுகிறது. பன்னிரண்டாம் மாதத்தின் முடிவில் அமாவாசையின் முதல் புலப்படுதலிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக இருந்தால், ஆசாரியன் தேவனுக்கென, நியாயப்பிரமாணத்தின்படி** (லேவியராகமம் 23:5-11; 2 சாமுயேல் 21:9) முதற்பலனாகிய ஒரு கதிர்கட்டைப் படைப்பதற்குப் பயிர்கள் போதுமானளவு முழு வளர்ச்சியடைந்திருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது முதலாம் மாதத்தின் முதலாம் நாளாக அறிவிக்கப்பட்டது (எனவே முதல் மாதத்தின் பெயர், ஆபிப், அதாவது, 'பசுங்கதிர்கள்'). அப்படியில்லாமல், முழு வளர்ச்சியடையும் 15 நாட்களுக்குள் பயிர்கள் வளரவில்லை என்றால், அடுத்த அமாவாசை புலப்படும் அந்த மாலை வேளையில் புத்தாண்டின் முதல் நாளாக அறிவிக்கப்படும். இந்த எளிய ஏற்பாட்டின் மூலம் இஸ்ரயேலிய ஆண்டு தானாகவே சரி செய்யப்பட்டது (லேவியராகமம் 23:5-16; உபாகமம் 16:9). இதனால் அதின் அளவு உண்மையில் சூரியகணிப்புமுறையாக இருந்தது. அதாவது, இப்போது நாம் உபயோகிக்கும் அதே கால அளவைக்கொண்டிருக்கும், இருந்தாலும் வசதிக்காக இஸ்ரயேல் ஜனங்கள் 12 மாதங்கள் தலா 30 நாட்கள் கொண்டதாகக் கணக்கிட்டனர். ஆகவே எகிப்தியர்கள் மற்றும் பிற நாடுகள், அவர்களது ஆண்டின் தொடக்கத்தையும் நீளத்தையும் சரிசெய்ய தேவையானதாகக் கருதப்பட்டது போன்ற சிக்கலான வானியல் கணக்கீடுகளிலிருந்து அந்த நாடு காப்பாற்றப்பட்டது."

**நிலவுசார் (சுழற்சி)!**

"...நாம் மாதங்களைப் பிரிப்பதுபோல் பிரிப்பதற்குப்பதிலாக, அவர்கள் அமாவாசையை, புதிய மாதத்திற்கான ஆரம்பத்தினைக் குறிப்பதற்கு அனுமதித்தனர்; சூரிய காலத்திற்கும், சந்திர காலத்திற்கும் இடையிலான வித்தியாசமானது, எப்போதும் வசந்த கால/இளவேனிற் சம இரவு பகல் நாளைத் தொடரும் அமாவாசையுடன் புதிய வருஷத்தை ஆரம்பிப்பதன் மூலம் சரிப்பண்ணப்படுகின்றது. தங்கள் மதம் சார்ந்த விழாக்களை ஆநுசரிக்கும் விஷயத்தில், யூதர்கள் இன்னமும் இந்தக் கணக்கீட்டு முறைமையையே கைக்கொள்ளுகின்றனர். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் ஆதித் திருச்சபையினரும் இதே ஒரு விதியை, நமது கர்த்தருடைய இறுதி இராப்போஜனத்திற்குரிய வருடாந்தர ஆநுசரிப்பிற்கான நியதியினை நிர்ணயிக்கும் விஷயத்திற்கும் பயன்படுத்தினதால், நாமும் அதையே பின்பற்றுகின்றோம்." *(R5191:2)*

"சூரியன் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கான அடையாளமாய்க் காணப்படுவதினால், சந்திரன் இஸ்ரயேல் ஜாதிக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது (வெளிப்படுத்தல் 12:1). பன்னிரண்டு மற்றும் சிலசமயம் இடம்பெறும் பதிமூன்று சந்திர மாதங்களானது, அந்த ஜாதியின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, சந்திரனானது பௌர்ணமி நிலையில் காணப்பட்டது. பின்னர் உடனடியாக தேய்வுற ஆரம்பித்தது மற்றும் பௌர்ணமிக்கு முன்பு

சந்திரன் வளர்வதற்குரிய காலத்தைப் போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக்கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரத்தினுடைய இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையிலான திருப்புமுனையாகக் காணப்பட்டது. தொகுதி-2, ஆங்கிலத்தில் பக்கம் - 218, தமிழில் பக்கம் - 235 பார்க்கவும்." (**அடிக்குறிப்பு** *R5191:3)*

### #4. (பக்கம் - 9) செம்மறியாடா அல்லது வெள்ளாடுகளா?

யாத்திராகமம் 12:3, 4, 5-இல், **'சே'** (seh) என்ற எபிரெய சொல் ஆட்டுக்குட்டி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:ஆ னால்ய าத்திராகமம் 12:21-இல், **'ட்சோன்'** (tzon) என்றஎ பிரெய வார்த்தையும் இதேபோல் ஆட்டுக்குட்டி என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது! இருப்பினும், யாத்திராகமம் 12:5-இல், **'சே'** என்பது செம்மறியாடுகளிலிருந்தோ, வெள்ளாடுகளிலிருந்தோ எடுக்கப்பட்டிருக்கலாம் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, **'சே'** என்ற சொல் ஒரு செம்மறியாட்டையோ வெள்ளாட்டையோ குறிக்கலாம் என்பது தெளிவாகத் தெரிகிறது – ஆனால் ஒரு செம்மறியாடு என்பதற்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஏனெனில் இது "தேவ ஆட்டுக்குட்டியை" மிக நெருக்கமாக அடையாளப்படுத்துகிறது. வறுமை காரணமாக செம்மறியாட்டினை வாங்க முடியாதவர்களுக்கு வெள்ளாட்டினை வாங்க அனுமதிக்கப்படுகிறது! யங்ஸ் கன்கார்டன்ஸ் (Young's Concordance) படி, **'ட்சோன்'** என்ற வார்த்தைக்கு செம்மறியாடு (Sheep) என்பது பொருள்; எனவே இது அங்கீகரிக்கப்பட்ட பதிப்பில் (Authorized Version) 108 முறை வந்துள்ளது. ஆனால் ஒருமுறை மாத்திரமே (1) ஆட்டுக்குட்டி (lamb) என்று வந்துள்ளது.

### #5. (பக்கம் - 10) "பச்சையாய் அல்ல" (யாத்திராகமம் 12:9)

"...அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் நிமித்தம் தடுமாறினார்கள்; – பிறகு இயேசு ஒரு சிறந்த போதகர் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இன்றும் ஒப்புக்கொள்கிறார்கள். இன்று உலகெங்கிலும் உள்ள ரபீக்கள், இயேசுவை ஒரு சிறந்த யூதர் எனவும், அவருடைய போதனைகள் உலகை பெருமளவில் ஆசீர்வதித்திருக்கின்றன எனவும் ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் சார்பாக ஒரு பாவநிவிர்த்தி செய்வதைத் தவிர தப்பிக்க வழியில்லாத பாவிகளாக இருந்தனர். மேலும் கிறிஸ்துவின் மரணம் பாவநிவாரணபலியாக அமைந்தது. அதின்மீதான விசுவாசத்தின் மூலம் மட்டுமே யாதொருவரும் தேவனுக்குப் பிரியமானதாக – நீதிமானாக்கப்பட முடியும் என்னும் கிறிஸ்துவினுடைய சிலுவையின் நிமித்தமாக அவர்களுடைய வாதம் இருக்கிறது. அதே ஆட்சேபணை யூதரல்லாத சாதாரண மனிதனின் இருதயத்திலும் உள்ளது. அவன் அந்தக் கதவு வழியாகச் செல்வதைவிட வேறு வழியில் ஏறுவதையே தேர்ந்தெடுக்கிறான்; அவன் இயேசுவின் போதனைகளை ஆட்டு மந்தைக்குள் செல்லும் ஓர் ஏணியாக மாத்திரம் பயன்படுத்துவான். ஆனால் அவரை ஒரு கதவாக எண்ணி அவர் வழியாக நுழையவும், தேவனால் தண்டனைக்குட்பட்டு, மீளமுடியாத அளவிற்கு தொலைந்து போய்விட்டதை ஒப்புக்கொள்வதையும் அவன் மறுக்கின்றான். ஆயினும் அவன் சார்பாக பாவங்களுக்கான மாபெரும் பலியும் மீட்பரின் புண்ணியமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது." *(R3201:5)*

### #6. (பக்கம் - 14) பாதரட்சை! (எபேசியர் 6:15)

இப்போது வாழும் தலைமுறை (இன்னும் மாம்சத்தில் சொற்பகாலம் தங்கியிருப்பவர்கள்). கிறிஸ்துவின் "பாத அங்கத்தினர்கள்" என்பது போன்ற ஒரு பொருள் உள்ளது. (சுவிசேஷ யுகத்தின் முடிவில் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்யபோகும் கடைசி தலைமுறை என்ற பொருளில் அல்ல), அவர்கள்தான் பூமியில் இன்னும் தொடர்பில் இருக்கிறார்கள் என்ற பொருள் உள்ளது. இப்படியாக, "பரிசுத்தவான்களின்" ஒவ்வொரு தலைமுறையும் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாக இருக்கத் தேவைப்படுகிறது. ஏனெனில் அது கரடுமுரடான பாதையில் தனக்கு வாக்களிக்கப்பட்ட கானானின் இளைப்பாறுதலை நோக்கி நடந்து செல்கிறது!

### #7. (பக்கம் - 19) ஒத்திவைக்கப்பட்ட நினைவுகூருதல்!

எண்ணாகமம் 9:8-13-இல், நாம் வாசிக்கிறோம்:

"**மோசே அவர்களை நோக்கி: பொறுங்கள்; கர்த்தர் உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன் என்றான். கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த்**

**தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந் தேதி அந்திநேரமான வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து, விடியற்காலம் மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஓர் எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள். ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதே போனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டு போவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான்."**

இந்த வசனத்தைப்பற்றி கருத்துத் தெரிவிக்கையில், சகோதரர் ரசல், *R5191:3*-இல், பக்கத்தின் அடிப்பகுதியில் உள்ள அடிக்குறிப்பில் இவ்வாறாகச் சொல்லுகிறார்:

"அசுசியடைந்த யூதர்கள், இதன் காரணமாக பஸ்காவினை அதற்குரிய காலத்தில் கைக்கொள்ள முடியாமல் போவதால், அப்படியானவர்கள் இரண்டாம் மாதத்தின் 14-ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் – எண்ணாகமம் 9:8-13) அதைக் கைக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்; இதன் படிப்பினை என்னவெனில் (அறியாமையின் காரணமாக) மேசியா தங்களுக்கு முன்வைக்கப்பட்ட போது, அவரைத் தங்கள் மீட்பர் என்று ஏற்றுக்கொள்வதற்குத் தடைப்பண்ணப்பட்டவர்கள், அனைத்தும் திரும்பிக்கொடுக்கப்படும் காலங்களில், தங்கள் ஜாதியானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாத நிலையில், பின் அறுவடையில் வரும்போது, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்பதேயாகும்."

இருப்பினும், இதில் இன்னும் ஆழமான முக்கியத்துவம் உள்ளது. மேலும் அது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய இஸ்ரயேலை உள்ளடக்கியதாகும். அவர்கள் ஒரு காரணத்திற்காக அல்லது மற்றொரு காரணத்திற்காக, "மரித்த சரீரத்துடன்" (ரோமர் 7:23, 24) அவர்கள் தொடர்புகொண்டதால் ஏற்படும் தீட்டுகளில் இருந்து தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவில்லை; அவர்கள் "துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவை" (1 கொரிந்தியர் 5:7, 8) புறம்பே கழித்துப் போடவில்லை; எனவே, "நினைவுகூருதலில்" அதன் ஏற்றகாலமான – முதலாம் மாதத்தின் 14-வது நாள் அன்று பங்குள்ளவர்களாயிருக்க இயலாமல் போனது. இருப்பினும், இவர்களுக்குத் தேவனுடைய கிருபை இன்னும் இருக்கிறது. அவர்கள் அதை எடுத்துக்கொண்டால் போதும்; ஏனெனில் இந்தத் தீட்டிலிருந்து தங்களை ஜாக்கிரதையுடன் சுத்திகரித்த பின்னர், அவர்கள் இரண்டாவது மாதத்தின் 14-வது நாளில் பங்கெடுப்பவர்களாக இருக்கத் தகுதியுடையவர்களாக மாறக்கூடும்.

"…எந்தவொரு உண்மையான விசுவாசியும் நினைவுகூருதலை அநுசரிப்பதில் ஓர் ஆசீர்வாதத்தை நாடி, அதைப் பெறத் தவறும்போது, அவர் தன்னைத்தானே நிதானித்து, முதலில் தான் 'பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடவில்லை' என்பதால்தான் என்பதைக் கண்டுபிடிப்பார் – ஏனெனில் பொறாமை, துர்க்குணம், வெறுப்பு, தீமைப் பேச்சு அல்லது தீமையைக் கற்பனைபண்ணுதல் – ஆகிய மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளுக்கு இன்னும் அவரது இருதயத்தில் ஓர் இடமிருந்திருக்கும். அதற்குப்பதிலாக, கர்த்தருடைய அன்பின் ஆவியால் – தயவு, சாந்தம், பொறுமை, சகோதர அன்பு – இறுமாப்பாயிராத, பொறாமையில்லாத, தீங்கு நினையாத மற்றும் இரக்கத்தாலும் நற்கிரியைகளாலும் நிறைந்ததாக இருக்கும் அன்பால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய 'தீட்டுகள்' காரணமாக, யாராவது உண்மையான ஐக்கியத்தைத் தாங்கள் தவறவிட்டதாகக் கண்டால், அவர்கள் சத்தியத்தின் தண்ணீரினால், தேவனுடைய வார்த்தைகளால் தங்கள் இருதயங்களைத் தூய்மைப்படுத்தி, நான்கு வாரங்களுக்குப் பிறகு, தீட்டுப்படுதல்களால் பண்டிகையை அதன் நியமிக்கப்பட்ட காலத்தில் அநுசரிப்பதற்குத் தடைசெய்யப்பட்ட நிழலான இஸ்ரயேலருக்கு ஏற்பாடு செய்யப்பட்டபடி, அவர்கள் அதைக் கொண்டாடட்டும் – (எண்ணாகமம் 9:10, 11). *(R3013:6)*

## #8. (பக்கம் - 23) ஏன் அவருக்குச் சொந்தமானவர்களே அவரை ஏற்றுக்கொள்ளவில்லை! (யோவான் 1:11)

ரோமர் 10:2-3: "தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் **சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்."**

**நீதியுள்ளவனுக்கு இரட்சகர் தேவையில்லை:–**

உபாகமம் 6:25: "**நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமுகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால்,** நமக்கு நீதியாயிருக்கும் என்று சொல்வாயாக."

மத்தேயு 19:20: "அந்த வாலிபன் அவரை நோக்கி: **இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்;** இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான்."

## #9. (பக்கம் - 26) புளிப்பில்லாத அப்பத்தினுடைய முதலாம் நாள் மத்தேயு 26:17*; மாற்கு 14:12; லூக்கா 22:7

*அங்கீகரிக்கப்பட்ட (கே. ஜே.) பதிப்பின் (Authorized King James Version) மொழியெர்ப்பாளர்கள் கிரேக்க மொழியிலுள்ள வசனத்தில் காணப்படாத "பண்டிகை" என்ற சொல்லைத் தவறாகச் செருகினர். (எம்பேட்டிக் டயக்லாட் (Emphatic Diaglott); திருத்தப்பட்ட பதிப்பு (Revised Version); மற்றும் திருத்தப்பட்ட நிலையான பதிப்பு (Revised Standard Version) ஆகியவற்றைக் காண்க.) "...பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்ட, புளிப்பில்லாத அப்பத்தினுடைய முதலாம் நாள், நீசான் 14-ஆம் தேதியாகும்..." (R1800:3 கட்டுரை: "கர்த்தருடைய இராப்போஜனம்.")

## #10. (பக்கம் - 30) தடைகள் பல இருந்தன

சங்கீதம் 41:9 - "**என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.**"

யோவான் 13:18 - "**உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.**"

யோவான் 18:1-5 - "**இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான். யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான். இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்.**"

லூக்கா 22:47, 48 -"**அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.**"

## #11. (பக்கம் - 36) பாத்திரம் – நீதிமானாக்கப்படுதல்

"நினைவுகூருதலுக்கான இராப்போஜனம் நிறுவப்பட்ட தருணத்தின்போது, நமது அருமை கர்த்தர் எப்போதும்போல், அவரது போதனைகள் ஒவ்வொன்றின் முக்கிய அம்சமாகிய இராஜ்யம் குறித்துச் சிலவற்றைப் பேச வேண்டும் என்றிருந்தார். உண்மையுள்ளவர்களாகக் காணப்படும் பட்சத்தில், இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைவார்களென அவர் வாக்களித்தவர்களிடம், தாம் ஓர் இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வதற்கெனப் புறப்பட்டுப்போக வேண்டும் என்றும், தாம் திரும்பிவந்து, அந்த இராஜ்யத்தில் அவர்கள் பங்கடையத்தக்கதாக, தம்மோடுகூட அவர்களை ஏற்றுக்கொள்ளுவார் என்றுமாக தாம் கூறியிருந்தவைகளை, அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்னுமாக தம்மால் நிறுவப்படுகின்றதான இந்த நினைவுகூருதலானது, இராஜ்யத்தில் அதன் நிறைவேறுதலைக் காணும் என்றும், அவர்களோடுகூடப் பிதாவின் இராஜ்யத்தில் திராட்சப்பழரசத்தை நவமானதாய்ப் பானம்பண்ணும் நாள்வரைக்கும், அதைத் தாம் பானம்பண்ணுவதில்லை என்றும் இப்பொழுது கூறுகின்றார்."

"என்ன அர்த்தத்தில் இவ்வாக்கியத்தினைக் கர்த்தர் கூறினார் என்பதைத் துல்லியமாய்த் தீர்மானிப்பது சிரமமானக் காரியமாக இருந்தாலும், அவரது பாத்திரம் அடையாளப்படுத்துகின்றதான பாடுகள் மற்றும் சோதனைகளின் விளைவாக, இராஜ்யத்தில் பெருமகிழ்ச்சிக் காணப்படும் என்று அர்த்தப்படும் வகையில் அவர் பேசியுள்ளார் என்று புரிந்துகொள்வது முரண்பாடாய்க் காணப்படாது. "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்." பிதாவினுடைய சித்தத்திற்கான உண்மையானக் கீழ்ப்படிதலின் காரணமாகச் சகிக்கப்பட்ட சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் திரும்பி நோக்கிப்பார்த்து இவைகளின் பிரமாண்டமான பலனை, அதாவது மனுக்குலம் அனைத்தின்மீது கடந்துவரும் ஆசீர்வாதங்களை அவர் காண்கையில், இவைகளில் களிகூருவார். **முதலாவது நீதிமானாக்கப்பட்டதிலும், பின்னர் அர்ப்பணிப்பிலும், அவரோடுகூடப் பலியிலும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணினவர்களாகிய** அவரது சீஷர்கள் அனைவரும் இந்தப் பெரு மகிழ்ச்சியில் பங்கடைவார்கள். இவர்கள், அவரோடுகூட ஆளுகைச் செய்வதற்கான, அவரது வாக்குத்தத்தத்தினைப் பெற்றிருக்கின்றனர். மற்றும் ஆளுகை ஆரம்பித்து, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கையில், இவர்கள் தங்கள் பூமிக்குரிய ஓட்டம் நிறைவடைவதுவரையிலும் நாளுக்குநாள் தேவன் தங்களை வழிநடத்தின வழியினை, அது, "இடுக்கமான வழியாக," சுயத்தைப் பலிச்செலுத்தும் வழியாக, சுயத்தை வெறுக்கும் வழியாக இருப்பினும், அவ்வழியினைத் திரும்பி நோக்கிப்பார்த்துத் துதிப்பார்கள்." (R5871:5)

## #12. (பக்கம் - 27) நினைவுகூருதல் ஆராதனையின் முடிவு!

"இறுதிவரை ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் செய்த வண்ணம், அதற்கு முடிவாக ஒரு ஸ்தோத்திரப்பாட்டு பாடப்பட வேண்டும். முடிவு ஜெபம் எதுவும் இல்லாமல், ஆராதனை இப்படியாக முடிவுற்று, அதன் பின்னர் கூட்டம் கலைந்து செல்ல வேண்டும் என்று நாம் யோசனை கூறுகிறோம். இந்த வேளையின்போது வழக்கமாகச் செய்யப்படும் வாழ்த்துக்கள் கூறுதல், ஆரோக்கியத்தைப்பற்றிய விசாரிப்புகள் முதலானவைகள் நிறுத்தப்பட வேண்டும்; மேலும், இராப்போஜனப் பந்தியைக்குறித்த சிந்தனையையும் ஆவிக்குரிய ஐக்கியத்தையும் கெடுக்கக்கூடிய எதையும் கூடுமானவரை செய்யாமல் அவனவன் தன் தன் வீட்டிற்குச் செல்ல வேண்டும்; மேலும், கூடுமானவரை ஒவ்வொருவரும் அந்த ஐக்கியத்தை அந்த இராத்திரியில் மாத்திரமல்ல, மறுநாளிலும் காத்துக்கொள்ள வேண்டும். எப்படியெனில் ஆண்டவருடைய கெத்செமனே அனுபவங்களையும், அவருக்குத் தேவைப்பட்ட அனுதாபம் மற்றும் உதவியை நினைவுகூருகையில் அவருடையவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கெத்செமனே அனுபவங்களுக்குள் கடந்துச் செல்லக்கூடும். அவ்வேளையில் உடன் இருக்கும் சீஷர்களுக்கும் உதவியும் அனுதாபமும் தேவைப்படக்கூடும் என்பதை மனதில்கொண்டு அவ்வாறாகச் செய்ய வேண்டும் என்று யோசனையாகக் கூறுகிறோம்." *(F478)* (தமிழ் – *F635-636)*

## #13. (பக்கம் - 41) நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே! (1 கொரிந்தியர் 5:7, 8)

"அப்போஸ்தலனாகிய பவுல், 'நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார். ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்' (1 கொரிந்தியர் 5:7, 8) என்று கூறி, நமது கர்த்தர் இயேசுதான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தெளிவாயும், உறுதியாயும் அடையாளம் கண்டுகொண்டார். நமது வீடுகளின்மீதல்ல, மாறாக நமது இருதயங்கள்மீது இரத்தம் தெளிக்கப்படுவது நம் அனைவருக்கும் அவசியமென அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். நாம் ஆட்டுக்குட்டியில் பங்குகொள்ள வேண்டும்; (எபி. 12:24; 1 பேதுரு 1:2) கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினை, அவரது பலியின் புண்ணியத்தினை நாம் நமதாக்கிக்கொள்ள வேண்டும்; புதிய யுகமாகிய காலையின்போதான விடுதலைக்கு நாம் பலத்துடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டுமானால், நாம் புளிப்பில்லாத (நொதித்துப் போகாத தூய்மையான) அப்பமாகிய சத்தியத்தைப் புசிக்க வேண்டும். இப்படியாக நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் மாத்திரம் தரித்துக்கொள்ளாமல், மாறாக, நாம் அதிகமதிகமாக நமது திறனுக்குரிய அளவுக்கு அவரது குணலட்சணத்தைத் தரித்து, நமது இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது மகிமையான சாயலுக்கு மறுரூபமடைகின்றோம்."

"யூதர்கள் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினைப் புசித்ததுபோன்று, நாம் கிறிஸ்துவைப் புசிக்க வேண்டும். யூதர்களுடைய பசியினைத் தூண்டினதும், பசிக்கு உதவினதுமான கசப்பான கீரைகளுக்குப் பதிலாக, நமக்குக் கர்த்தர் ஆயத்தம்பண்ணினதும், பூமிக்குரியவைகள்மீதான நமது விருப்பங்களை மறந்து போவதற்கு உதவுவதும், ஆட்டுக்குட்டி மற்றும் புளிப்பில்லாத அப்பமாகிய சத்தியத்தைப் புசிப்பதற்கான தீவிரப் பசியை நமக்குக் கொடுக்கிறதுமான கசப்பான அனுபவங்களையும், சோதனைகளையும் நாம் பெற்றிருக்கின்றோம். நமக்கு எந்த நிரந்தரமான தேசமும் இல்லை என்று நாமும் நினைவில்கொள்ள வேண்டும்; பரதேசிகள் போலவும், யாத்திரிகர்கள் போலவும், கையில் தடி பிடித்துக்கொண்டவர்களாகவும், பரம கானானுக்கும், நமது மீட்பரோடுகூட, தேவனுக்கான இராஜாக்களாக, ஆசாரியர்களாக, இருக்கப்போகிற முதற்பேறானவர்களாகிய சபைக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையானவைகள் அனைத்தினிடத்திற்குமான நமது பிரயாணத்திற்காக, நாம் அரைக்கட்டிக்கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்."

"நமது கர்த்தராகிய இயேசுவும் தாம் தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அடையாளம் கண்டுகொண்டார். அவர் காட்டிக்கொடுககப்பட்ட இரவில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, அவர் தம்முடைய சீஷர்களுடன் மேல்வீட்டறையில்கூடி, **'நான் பாடுபடுகிறதற்கு முன்னே** உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்' என்றார். யூதர்களாக அவர்கள் காணப்பட்டபடியால், அந்த இரவில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது; அதாவது எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கும், நிழலான பார்வோனிடமிருந்து (இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து) நிழலான முதற்பேறானவர்கள் காப்பாற்றப்பட்டதற்குமான ஆண்டுநிறைவு நாளினுடைய இரவில் மற்றும் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படப்போகிறதுமான அதே நாளில் அவர்கள் பஸ்கா இராப்போஜனத்தைப் புசிப்பது அவசியமாயிருந்தது.மேலும்நிழலின்விஷயங்கள்நிறைவடைந்தவுடன்,நமதுகர்த்தர்இயேசு, பழையவைகளின்மீதே புதிய நினைவுகூருதலை ஏற்படுத்தி, 'என்னை நினைவுகூரும்படி (பஸ்கா காலத்திற்கான நினைவுகூருதலை வருடந்தோறும்) இதைச் செய்யுங்கள்' என்றார் (1 கொரி. 11:24, 25). அதாவது அறிவுக் கண்கள் திறக்கப்படாத உங்கள் அயலார்களான யூதர்கள் இதனை நிஜத்தின் கோணத்தில் புரிந்துகொள்ளமாட்டார்கள். ஆனால், என்னை, தேவனுடைய திட்டத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகவும், உலகின் இரட்சிப்பின் விலைக்கிரயமாக நான் எனது ஜீவனைக் கொடுக்கப்போவதையும் அறிந்த நீங்கள், மற்றவர்களால் உணரப்படாத விதத்திலில்லாமல், இந்தப் பஸ்கா காலத்தைச் சிறப்பானதாக, புனிதமானதாகக் கருதுவீர்கள். இதுமுதல் நீங்கள் நிழலை அநுசரிக்கமாட்டீர்கள். ஆனால் நிஜத்தை நினைவுகூருவீர்கள்; ஏனெனில் நான் தேவ ஆட்டுக்குட்டியாக மரிக்க இருக்கிறேன் மற்றும் இப்படியாக, தெளிக்கப்படும் இரத்தத்தை முதற்பேறான சபைக்கும் மற்றும் மாம்சத்தை முழு விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்போகிறேன் என்ற விதத்தில் கூறினார்." *(R5641:3, 4)*

---

*ஆங்கிலப் பிரதியில் உள்ள ஒருசில மாறுபட்ட கருத்துக்கள் மட்டும் நீக்கப்பட்டுள்ளது.



## கடைசி வாரம்

## நமது கர்த்தருடைய ஊழியத்தின் கடைசி வாரம்

ஒவ்வொரு நாளின் வாசிப்பிற்காக வசனங்களும் கட்டுரைகளும் கொடுக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| **வெள்ளிக்கிழமை** | **பஸ்காவுக்கு 7 நாட்கள் முன்பு,** எருசலேமை நோக்கி பயணம்<br>மத். 20:17-34; மாற்கு 10:32-52; லூக்கா 18:31-19:28;<br>R2735, R3362, R3847, R4668, R5492 |
| **சனிக்கிழமை** | **பஸ்காவுக்கு 6 நாட்கள் முன்பு,** பெத்தானியாவுக்கு இயேசு வருகிறார், மற்றும் அந்த சாயங்காலத்தில் மரியாள் நமது கர்த்தரை அபிஷேகம் செய்கிறார்.<br>மத். 26:6-13; மாற்கு 14:3-9; யோவான் 11:55-12:11;<br>R2447, R2743, R3534, R3877, R4702, R5540 |
| **ஞாயிற்றுக்கிழமை** | **பஸ்காவுக்கு 5 நாட்கள் முன்பு,** அவர்கள் குருத்தோலைகளைப் பரப்பினார்கள்; அவர் எருசலேமுக்குள் சென்றார்.<br>மத். 21:1-11; மாற்கு 11:1-11; லூக்கா 19:29-44; யோவான் 12:12-19;<br>R1794, R2745, R3850, R4669, R5494 |
| **திங்கட்கிழமை** | **பஸ்காவுக்கு 4 நாட்கள் முன்பு,** அத்தி மரத்தைச் சபித்தல்; ஆலயத்தைச் சுத்திகரித்தல்; அங்குள்ள மக்களுக்கு அவர் போதித்தார்.<br>மத். 21:18, 19; 21:12-17; மாற்கு 11:12-19; லூக்கா 19:45-48; லூக்கா 21:37-38<br>R2746, R5503, R5920 |
| **செவ்வாய்கிழமை** | **பஸ்காவுக்கு 3 நாட்கள் முன்பு,** தேவாலயத்தில் உபதேசம்பண்ணுதல்; கேள்விகளால் எதிர்த்துரைக்கப்பட்டு; அவருடைய வார்த்தைகளில் அவரைப் பிடிக்க முயன்றனர். இந்த நாளில் பல உவமைகள் கொடுக்கப்பட்டன.<br>மத். 21:20-26:5, 14-16; மாற்கு 11:20-13:37; 14:1, 2, 10, 11;<br>லூக்கா 20:1-21:36; 22:1-6; யோவான் 12:20-50<br>R1982, R2743, R2775, R4678, R4686, R5510, D563 |
| **புதன்கிழமை** | **பஸ்காவுக்கு 2 நாட்கள் முன்பு,** இந்த நாளின் நிகழ்வுகள் குறித்து எந்த பதிவும் இல்லை; இது அநேகமாக பெத்தானியாவில் ஓய்வில் செலவிடப்பட்டதாயிருக்கும்.<br>R3000 (காலத்திற்குச் சிறந்தது) R3542 |
| **வியாழக்கிழமை** | **பஸ்காவுக்கு 1 நாள் முன்பு,** அன்று மாலை 6.00 மணிக்குப் பிறகு வரும் பஸ்காவிற்கு சீஷர்கள் தயாராகினர்<br>மத். 26:17- 46: மாற்கு 14:12-42; லூக்கா 22:7- 46; யோவான் 13:1- 18:1;<br>R1800, R1801, R1987, R2449, R2453, R2455, R2464, R2467, R2469, R2773, R3363, R3542, R3544, R3551, R3879, R3885, R4164, R4167, R4703, R4707, R5541, R5563, R5550. |
| **வெள்ளிக்கிழமை** | **சிலுவையில் அறையப்பட்ட நாள்**<br>மத். 26:47; 27:61; மாற்கு 14:43-15:47; லூக்கா 22:47- 23:56; யோவான் 18:2-19:42;<br>R1809, R1815, R2315, R2473, R2787, R3366, R3369, R3560, R3895, R3900, R4171, R4712, R5552, R5557, R1366-1368 |
| **சனிக்கிழமை** | **சிலுவையில் அறையப்படுதலுக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட நாள்**<br>மத். 27:62-66; மாற்கு 16:1; லூக்கா 23:56; |
| **ஞாயிற்றுக்கிழமை** | **உயிர்த்தெழுதல் (11 முறை தரிசனமானார் R3905)**<br>மத். 28:1-15; மாற்கு 16:2-8; லூக்கா 24:1- 49; யோவான் 20:1-25;<br>R1816, R1823, R1995, R2476, R2794, R2800, R2802, R3374, R3563, R4174, R4181, R4713, R5415, R5578, R5587 |

கையொப்பமற்ற / Anonymous

## வேத வசன அட்டவணை


**ஆதியாகமம்**

3:10 . . . 21
3:15 . . . 20
3:21 . . . 21
15:5 . . . 30
21:9-14 . . . 30
46:26 . . . 16

**யாத்திராகமம்**

3:18 . . . 17
4:22 . . . 30
4:22, 23 . . . 20
5:3 . . . 17
8:27 . . . 17
11:4 . . . 2
12:1,2 . . . 8
12:3 . . . 27
12:3, 4, 5 . . . 62
12:3-7 . . . 11
12:5 . . . 62
12:5-13 . . . 30
12:6 . . . 60
12:7 . . . 60
12:7, 13 . . . 22
12:8 . . . 12(2), 60
12:8, 9 . . . 2, 42
12:9 . . . 13, 62
12:10 . . . 2, 13, 14, 41
12:11 . . . 16, 60
12:12 . . . 19
12:13 . . . 21
12:14 . . . 24, 60
12:14,18 . . . 60
12:15 . . . 24, 60(2)
12:16 . . . 26, 27
12:17 . . . 24, 60
12:17-20 . . . 25
12:18 . . . 25, 60
12:18,19 . . . 25
12:21 . . . 62
12:21-23 . . . 30
12:23, 29 . . . 4
12:25 . . . 25
12:29-33 . . . 24
13:13 . . . 28
19:5 . . . 19
24 . . . 53
24:4-8 . . . 54
29:15-18 . . . 40
34:20 . . . 28

**லேவியராகமம்**

2:11 . . . 55
3 . . . 53
9:14 . . . 55
23:4, 5 . . . 26
23:5-11 . . . 61
23:5-16 . . . 61

**எண்ணாகமம்**

9:1-15 . . . 25
9:8-13 . . . 62, 63
9:10, 11 . . . 63
9:11 . . . 12
18:15 . . . 28
33:3 . . . 4, 24, 60(2)

**உபாகமம்**

6:25 . . . 64
16:9 . . . 61

**யோசுவா**

5:10 . . . 25

**2 சாமுயேல்**

21:9 . . . 61

**1 இராஜாக்கள்**

18:46 . . . 17

**யோபு**

1:6-12 . . . 39
38:7 . . . 39
42:12 . . . 39

**சங்கீதம்**

40:8 . . . 23
41:9 . . . 64
46:4 . . . 37
46:10 . . . 28
51:5 . . . 10, 55
118:25 . . . 29
118:25, 26 . . . 29
149:5-9 . . . 20

**ஏசாயா**

9:6 . . . 10 (2), 14
14:12 . . . 39
14:13,14 . . . 39
18:2 . . . 34
53:10,12 . . . 59
61:2 . . . 10

**எசேக்கியேல்**

9:3 . . . 34
28:15 . . . 39

**தானியேல்**

8:13, 14 . . . 38
8:14 . . . 34
12:7-13 . . . 39
12:11 . . . 34
12:12 . . . 34

**சகரியா**

9:9 . . . 27, 29
9:9-12 . . . 32

**மத்தேயு**

1:21 . . . 27
2:16 . . . 39
4:3-10 . . . 39
10:6 . . . 30
16:6 . . . 55
16:6-12 . . . 56
16:24 . . . 51
19:20 . . . 64
20:17-34 . . . 67

20:20-22 . . . . . . . . . . . .46
20:22. . . . . . . . . . . . . 44
20:28. . . . . . .22, 27(2), 45
21:1-11. . . . . . . . . . . . 67
21:8, 9. . . . . . . . . . . . .29
21:9. . . . . . . . . . . . . . 29
21:12-17. . . . . . . . . . . 67
21:18,19. . . . . . . . . . . .67
21:20-26:5, 14-16. . . . . .67
23:37, 38 . . . . . . . . . . 30
25 . . . . . . . . . . . . . . .10
26:6-13 . . . . . . . . . . . .67
26:8 . . . . . . . . . . . . . .31
26:10-13 . . . . . . . . . . .33
26:17 . . . . . . . . . . . . .64
26:17-46 . . . . . . . . . . .67
26:26 . . . . . . . . . . . . .41
26:26, 27. . . . . . . . . . .13
26:27 . . . . . . . . . . . 5, 46
26:27-28 . . . . . . . . 45, 46
26:28 . . . . . . . . . . 47, 52
26:29. . . . . . . . . . . .52(2)
26:30 . . . . . . . . . . . . .53
26:36 . . . . . . . . . . . . . .4
26:47-27:61. . . . . . . . . 67
27:62-66 . . . . . . . . . . .67
28:1-15 . . . . . . . . . . . .67

**மாற்கு**

10:32-52. . . . . . . . . . . 67
10:45. . . . . . . . . . . . . 22
11:1-11 . . . . . . . . . . . .67
11:9,10. . . . . . . . . . . . 29
11:12-19 . . . . . . . . . . .67
11:20-13:37;14:1, 2, 10, 11. . .67
14:3-9. . . . . . . . . . . . .67
14:8, 9. . . . . . . . . . . . 31
14:12 . . . . . . . . . . . 4, 64
14:12-15. . . . . . . . . . . .34
14:12-42 . . . . . . . . . . . 67
14:24 . . . . . . . . . . . . . 52
14:32. . . . . . . . . . . . . . 4
14:43-15:47. . . . . . . . . .67
16:1 . . . . . . . . . . . . . . 67
16:2-8 . . . . . . . . . . . . .67

**லூக்கா**

4:18, 19 . . . . . . . . . . . .10
4:19 . . . . . . . . . . . . . .10
10:18. . . . . . . . . . . . . .39
10:39. . . . . . . . . . . . . .31
12:37. . . . . . . . . . . . . .17
12:42. . . . . . . . . . . . . .34
17:8 . . . . . . . . . . . . . . 17
17:25 . . . . . . . . . . . . .29
18:31-19:28. . . . . . . . . .67
19:29-44 . . . . . . . . . . .67
19:30 . . . . . . . . . . . . .28
19:37, 38 . . . . . . . . . . . 29
19:38. . . . . . . . . . . . . .29
19:45-48. . . . . . . . . . . .67
20:1-21:36; 22:1-6. . . . . . .67
21:37-38. . . . . . . . . . . .67
22:7 . . . . . . . . . . . . . .64
22:7-46 . . . . . . . . . . . .67
22:8 . . . . . . . . . . . . . .34
22:19 . . . . . . . . . . . 42, 48
22:20. . . . . . . . . . . . . .52
22:24-31 . . . . . . . . . . . .35
22:47-23:56. . . . . . . . . .67
22:47, 48 . . . . . . . . . . .64
23:20 . . . . . . . . . . . . . 29
23:56 . . . . . . . . . . . . . 67
24:1-49 . . . . . . . . . . . . 67
24:26 . . . . . . . . . . . . .29

**யோவான்**

1:11. . . . . . . . . . . . 30, 63
1:29 . . . . . . . . . . . . . . .40
1:29, 36. . . . . . . . .11, 22, 27
3:3 . . . . . . . . . . . . . . . 10
6:50 . . . . . . . . . . . . . . 12
6:53. . . . . . . . . . . .7(2), 48
6:53-56 . . . . . . . . . . . 3, 16
11:32 . . . . . . . . . . . . . .31
11:55-12:11 . . . . . . . . . .67
12:3 . . . . . . . . . . . . .31(2)
12:4, 5 . . . . . . . . . . . . .31
12:7, 8 . . . . . . . . . . . . 31
12:12-16 . . . . . . . . . . . .30
12:12-19 . . . . . . . . . . . .67
12:13. . . . . . . . . . . . 29 (2)
12:20-50 . . . . . . . . . . . .67
12:24. . . . . . . . . . . . . . .42
13:1-18:1. . . . . . . . . . . 67
13:10. . . . . . . . . . . . . .36
13:16, 17 . . . . . . . . . . .36
13:18 . . . . . . . . . . . . . .64
13:18, 26-28 . . . . . . . . .40
14:6 . . . . . . . . . . . . . .12
15:12 . . . . . . . . . . . 51(2)
16:27. . . . . . . . . . . . . . .19
18:1-5. . . . . . . . . . . . . 64
18:2-19:42. . . . . . . . . . .67
18:28 . . . . . . . . . . . .2, 4, 35
19:14 . . . . . . . . . . . .2, 4, 35
20:1-25 . . . . . . . . . . . . .67
20:1-21:36; 22:1-6. . . . . . . . .67

**அப்போஸ்தலர்**

8:32 . . . . . . . . . . . . . . .23

**ரோமர்**

7:23, 24 . . . . . . . . . . . . .63
8:17 . . . . . . . . . . . . 30, 46
10:2-3 . . . . . . . . . . . . . .63
11:11-20. . . . . . . . . . . . . 15

**1 கொரிந்தியர்**

1:2 . . . . . . . . . . . . . . . 60
4:9 . . . . . . . . . . . . . . . 39
5:6-8 . . . . . . . . . . . . . . .56
5:7 . . . . . . . . . . . . 3, 18, 42

5:7, 8 . . 6, 55, 56, 60, 63, 65(2)
10:11 . . . . . . . . . . . . . . . . 3
10:16,17 . . . 13, 42, 49, 50, 52
11:24, 25 . . . . . . . . . . . . 66
11:24-26 . . . . . . . . . . . . 49
11:25 . . . . . . . . . . . . . . 52
11:26 . . . . . . . . . . . . 7, 42
11:28 . . . . . . . . . . . . . . 59
12:12 . . . . . . . . . . . 49, 50
12:12-14 . . . . . . . . . . . . 43
15:22 . . . . . . . . . . . . . . 13
15:22, 23 . . . . . . . 13, 15, 26

### 2 கொரிந்தியர்

6:2 . . . . . . . . . . . . . . . . 14
7:1 . . . . . . . . . . . . . . . . 55

### கலாத்தியர்

1:4 . . . . . . . . . . . . . . . 45
2:20 . . . . . . . . . . . . . . . 51
5:9 . . . . . . . . . . . . . . . 55

### எபேசியர்

4:31 . . . . . . . . . . . . . . . 56
5:2, 25 . . . . . . . . . . . . . 45
5:32 . . . . . . . . . . . . . . . 10
6:14 . . . . . . . . . . . . . . . 17
6:15 . . . . . . . . . . . . . . . 62

### பிலிப்பியர்

1:21 . . . . . . . . . . . . . . . 51
2:5 . . . . . . . . . . . . . . . . 13

### கொலோசெயர்

1:24 . . . . . . . . . . 43, 45, 46
3:8 . . . . . . . . . . . . . . . 56

### 1 தீமோத்தேயு

2:6 . . . . . . . 22, 27(2), 45, 61

### 2 தீமோத்தேயு

2:12 . . . . . . . . . . . . . . . 46

### தீத்து

2:14 . . . . . . . . . . . . . . . 45
3:3 . . . . . . . . . . . . . . . 56

### எபிரெயர்

2:10 . . . . . . . . . . . . . . . 42
2:14 . . . . . . . . . . . . . . . 39
5:8, 9 . . . . . . . . . . . . . . 13
7:26 . . . . . . . . . . . . 45, 55
7:27 . . . . . . . . . . . . . . . 29
9:19, 20 . . . . . . . . . . . . 52
9:19-21 . . . . . . . . . . . . 54
9:22 . . . . . . . . . . . . . . . 22
10:21-24 . . . . . . . . . . . . 57
10:22 . . . . . . . . . . 3, 16, 18
10:29 . . . . . . . . . . . . . . 48
12:23 . . . . . . . . . . . . . . 23
12:24 . . . . . . . . . . . . . . 65

### யாக்கோபு

1:18 . . . . . . . . . . . . . . . 23

### 1 பேதுரு

1:2 . . . . . . . . . . . . . . . . 65
1:12 . . . . . . . . . . . . . . . 38
2:5, 9 . . . . . . . . . . . . . . 58
2:9 . . . . . . . . . . . . . 19, 37
4:1, 2 . . . . . . . . . . . . . . 13
4:12-14 . . . . . . . . . . . . 51

### 2 பேதுரு

1:4 . . . . . . . . . . . . . . . 14

### 1 யோவான்

1:7 . . . . . . . . . . . . . . . 55
2:6 . . . . . . . . . . . . . . . 13

### வெளிப்படுத்தின விசேஷம்

11:15 . . . . . . . . . . . . . . 28
12:1 . . . . . . . . . . . . . . . 61
13:8 . . . . . . . . . . . . . . . 22
21:7, 8 . . . . . . . . . . . . . 10
22:16 . . . . . . . . . . . . . . 39

<u>குறிப்புகள் எடுக்க</u>

## குறிப்பகள் எடுக்க




## குறிப்பகள் எடுக்க



## <u>குறிப்பகள் எடுக்க</u>

"…என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்…"
– லூக்கா 22:19







*Portland Area Bible Students*
*P.O. Box 23232*
*Tigard, Oregon 97281-3232*

தமிழில்: டிசம்பர் 2019